# காற்றிலே மிதந்தவை

ந. சஞ்சீவி, எம். ஏ.,

# காற்றிலே மிதந்தவை

ந. சஞ்சீவி, எம். ஏ.,
தமிழ்த்துறைத் தலைவர், பச்சையப்பர் கல்லூரி,
காஞ்சிபுரம்.

விற்பனை உரிமை:
பாரி நிலையம்
59. பிராட்வே - சென்னை 1.

விலை ரூ. 1·75

முதற்பதிப்பு: அக்டோபர், 1958

இந்நூல் அனைத்திந்திய வானொலி நிலையத்தார் அனுமதி
பெற்று வெளியிடப் பெறுகிறது.

## ஆசிரியரின் மற்ற நூல்கள்

**இலக்கியம் :**

சங்க காலச் சான்றோர்கள்
சிலப்பதிகார விருந்து
கவிஞர் தரும் காட்சி
உணர்வின் எல்லை

**வரலாறு :**

1806
இருபெருந்தலைவர்
வீரத்தலைவர் பூலித்தேவர்
முதலில் முழங்கிய முரசு
வீரபாண்டியன் விழுப்புகழ்
தமிழகத்தில் விடுதலை வேள்வி
வெள்ளையர் கண்ட வீரத் தமிழகம
விடுதலை இயக்க வரலாறு
வெள்ளை ஆதிக்க வரலாறு
மானங்காத்த மருது பாண்டியர்
மருதிருவர்
வேலூர்ப் புரட்சி

முத்தமிழ் அச்சகம், காஞ்சிபுரம்.

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர்

உயர்திரு. டாக்டர்.

ரா. பி. சேதுப்பிள்ளை, B. A., B. L., D. Litt., அவர்கள்

# அணிந்துரை

கல்வியே கரையிலாத காஞ்சிமா நகரக் கல்லூரியில் சிந்தைக்கினிய செந்தமிழ்ப் பணியாற்றும் திரு. ந. சஞ்சீவியார் கலைபயில் தெளிவும் கட்டுரை வன்மையும் வாய்ந்தவர் என்பதைத் தமிழகம் நன்கறியும். அவர் வானொலி நிலையத்தில் நிகழ்த்திய வளமார்ந்த சொற்பொழிவுகள் தென்றற் காற்றிலே மிதந்து, அன்பர் காதிலே புகுந்து, கருத்திலே பதிந்து இன்பம் பயப்பனவாகும்.

திரு. சஞ்சீவியாரின் அஃகி அகன்ற அறிவும், ஆங்கில ஆராய்ச்சித் திறனும், இந்நூல் முழுவதும் பரந்து விளங்குகின்றன. எனவே இந்நூலைத் தமிழ்த் தென்றல் தரும் இன்பம் எனப் புகழ்வது மிகையாகாது.

இவ்வின்ப நூலை ஆங்கிலத்திலும் அருந் தமிழிலும் சிறந்த அறிவு பெற்றவரும், திருமணம் செல்வக் கேசவராய முதலியார் அவர்களின் அன்பினைச் சிறக்கப் பெற்றவரும், சஞ்சீவியாரிடம் தந்தையின் அன்பு பூண்டவரும் ஆகிய காலஞ் சென்ற என் நண்பர் திரு. ம. சண்முக சுந்தர முதலியார் அவர்களுக்கு உரிமையாக்கியிருப்பது இந்நூலாசிரியரின் பண்பாட்டிற்கு ஒரு சிறந்த சான்றாகும். காற்றில் மிதந்து வரும் இன்பத் தமிழைச் செவி குளிரக் கேட்போமாக.

**ரா. பி. சேதுப்பிள்ளை,**

**28-10-1958.**

# முன்னுரை

கடந்த எட்டு ஆண்டுகளில் திருச்சிராப்பள்ளி, சென்னை வானொலி நிலையங்களில் யான் நிகழ்த்திய பேச்சுக்களில் ஒன்பதின் தொகுப்பே 'காற்றிலே மிதந்தவை' என்னும் இந்நூல். என் வானொலிப் பேச்சுக்களை நூலுருவில் வெளியிட அனுமதிவழங்கிய அனைத்திந்திய வானொலி நிலையத்தார்க்கு என் உளங்கனிந்த நன்றி உரியது. வழக்கம்போல இந்நூலைச் செப்பம் செய்து உதவிய மகாவித்துவான் **உயர்திரு. மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை அவர்கட்கு** என் பணிவார்ந்த நன்றி கலந்த வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

என் வானொலிப் பேச்சுக்களின் முதல் தொகுப்பாகிய இந்நூலுக்குச் சிறந்ததோர் அணிந்துரை அளித்துப் பெருமை செய்துள்ள செந்தமிழ்ச் சான்றோர் பேராசிரியர் **உயர்திரு. டாக்டர். ரா. பி. சேதுப் பிள்ளை அவர்களின்** வான்கருணை என் உள்ளத்தை உருக்குகின்றது. என் வளர்ச்சியிலும் வாழ்விலும் பெருநாட்டம் உடைய அப்பெரியார்க்கு யான் எந்நாளும் அடிமை பூண்டொழுகக் கடமைப்பட்டுள்ளேன்.

வாழிய செந்தமிழ்! வாழ்க நற்றமிழர்!

**ந. சஞ்சீவி,**

*29—10—1958.*

அருந்தமிழ் அறிஞர்
ஆங்கிலப் பேராசிரியர்

உயர்திரு. ம. சண்முகசுந்தரனார், எம். ஏ., எல். டி.,

*(காஞ்சிபுரம் பச்சையப்பர் கல்லூரியின்*
*காலஞ்சென்ற முதல்வர் 1951–58)*

அவர்கட்கு

# உள்ளுறை


| பேச்சின் தலைப்பும் பேசிய நாளும் | பக். |
|---|---|
| 1. கவிதையின் உயிர் (13—11—1951) | 1 |
| 2. சங்க இலக்கியங்களில் பொறை (4—11—1952) | 12 |
| 3. பாரதியாரும் சுதந்தரமும் (7—7—1953) | 23 |
| 4. நற்றிணையில் நாடகப் பண்பு (28—4—1955) | 40 |
| 5. தமிழ் நாட்டின் இசை (14—7—1955) | 55 |
| 6. பிரபந்த வகைகள்—அந்தாதி (18—10—1955) | 70 |
| 7. நதியும் கரையும் (8—12—1955) | 81 |
| 8. அரச கவிஞர்—குலசேகராழ்வார் (17—1—1956) | 99 |
| 9. பொதுமை கண்ட தமிழ்—சிலப்பதிகாரம் (13—1—1957) | 111 |

# காற்றிலே மிதந்தவை

## 1

## கவிதையின் உயிர்

கவிஞன் ஒரு சிறந்த கலைஞன். உலகமே அவன் பல்கலைக் கழகம். இயற்கைச் சத்திகளே அவன் நல்லாசிரியர்கள். காற்றெனும் வான தேவன் 'மண்ணுலகத்து நல்லோசைகளை' எல்லாம் ஏந்தி வந்து, அவன் திருச்செவிகளில் இசைக்கச் செய்கிறன். அவ்வோசைகளிலே உள்ளத்தைப் பறி கொடுக்கிறன் கவிஞன். அவன் உள்ளம்—சொல்—சிந்தனை—எல்லாம், அந்த ஓசை மயமாக மாறி விடுகின்றன. கவிஞனது இதயத்தைக் கொள்ளை கொண்டு பண்ணுருவம் பெற்ற அந்த 'மண்ணுலகத்து நல்லோசைகள்' என்ற முத்துப் பல்லக்கில் மோகனப் புன்முறுவலுடன் கவிதையாம் அழகரசி காலம் என்ற பெருஞ்சாலையில் கலைவாணர்—கவி வாணர்—கைகூப்பிப் புகழ் பாடத் தன் இன்பப் பயணத்தைத் தொடங்குகிறுள்.

இனி, இன்றைய பேச்சில், 'கவிதைக்கு ஓசை உடல் என்றல், உணர்ச்சிதான் அதன் உயிர்' என்ற உண்மையைக் காண்போம்:

கவிதைக்கு மட்டுமன்று; எல்லாக் கலைகளுக்குமே அடிப்படையாக வேண்டுவது உணர்ச்சிதான். உணர்ச்சி இல்லையானல், எந்தக் கலையும் தோன்ற

முடியாது. ஏன்? வாழ்க்கையே அமைய முடியாது. நாம் பேசுவதும் பாடுவதும், கூவுவதும் குமுறுவதும், அழுவதும் சிரிப்பதும் எதனால்? உணர்ச்சியால் தானே? பட்டுப் பாவாடை கட்டிச் சிட்டுக் குருவி போல ஓடி விளையாடும் சிறுமியைத் தாவிப்பிடித்து நாம் கொஞ்சுவதேன்? நெடுநாள் பிரிந்திருந்த ஆருயிர் நண்பனை நேரில் கண்டதும் ஆர்வத்தோடு நாம் கட்டி அணைத்துக்கொள்வது ஏன்? அமுதூட்டி வளர்த்த தாய் நோய் உற்று இருப்பது கேட்டோ, இன்னுயிர்த் தோழன் மறைந்த செய்தி கேட்டோ, நாம் கண்ணீர் சிந்திக் கலங்குவது ஏன்? எல்லாம் உணர்ச்சியாலேதான். எனவே, இந்த உணர்ச்சி யின் உருவமே வாழ்க்கை. அந்த வாழ்க்கையின் சொல் வடிவமே கவிதை. கவிதையிலே பொங்கும் உணர்ச்சியை மூன்று கோணங்களிலிருந்து கண்டு சுவைக்கலாம்.

இயற்கைக் காட்சிகளும் வாழ்க்கை நிகழ்ச்சி களும் கவிஞன் மனத்தில் எத்தகைய பேருணர்ச்சி கள் பீரிட்டு எழச் செய்கின்றன? கவிஞனது கவிதையுலகில் நடமாடும் பாத்திரங்கள் எவ்வாறு ஆழ்ந்த பேருணர்ச்சிகளை அள்ளி வீசுகின்றன? கவிஞனது இதயத்திலிருந்து பொங்கி வரும் பாட் டைப் படிக்கும் போது நம் நெஞ்சில் எத்தகைய பேருணர்ச்சிகள் கொந்தளித்து எழுகின்றன? இவற்றை நாம் ஆராய்ந்தால், கவிதை வெறி மூண்டு பாடும் புலவனுடைய பாடல்களில் புதைந்து கிடக் கும் உணர்ச்சிகளின் பண்புகளை ஒருவாறு உணர லாம்.

கண்ணுக்கு ஒளி கொடுத்து, வாழ்விற்கும் உயிர் கொடுக்கும் கதிரவன் தினந்தினம் நம் வாழ் நாளில் தோன்றித் தோன்றி மறைகிறான். ஆனால், அந்தக் காலை இளம்பரிதி தோன்றும் போதும், மாலைக் கதிரவன் மறையும் போதும் நீலவானை எழிற்கடலாக்கி அவன் செய்யும் இன்ப விளை யாட்டை எப்பொழுதேனும் நீங்கள் பார்த்திருக் கிறீர்களா? இதோ! அழகுக் கவிஞர் பாரதியாரின் பாட்டைக் கேளுங்கள்:

மாலைக் கதிரவன் நீல வானில் மாணிக்க ஒளி வீசி மறையும் அந்த அற்புதக் காட்சியைக் கண் டார் பாரதியார். கண்டது மட்டுமா! அந்தக் காட்சியிலே கண்களைக் கருத்தை எல்லாம் பறி கொடுத்து நிற்கிறார், அந்தப் பாவலர். அவர் கண்களிலே புதியதோர் ஒளி தோன்றுகிறது. அவர் நெஞ்சின் உணர்ச்சி அலைகள் ஓவென்று குமுறி எழுகின்றன. அந்த அலைகள் மெல்ல மெல்ல அடங்குகின்றன. அந்த அமைதியிலே—ஆம்— உணர்ச்சி அலைகள் எழுந்து ஓயும் அமைதியிலே— ஓர் அற்புதக் கவிதை பிறக்கிறது:

* * *

'பாரடியோ! வானத்திற் புதுமை யெல்லாம்!

* * *

'அடிவானத் தேஅங்குப் பரிதிக் கோளம்
அளப்பரிய விரைவினொடு சுழலக் காண்பாய்;
இடிவானத் தொளிமின்னல் பத்துக் கோடி
எடுத்தவற்றை ஒன்றுபட உருக்கி வார்த்து,

முடிவான வட்டத்தைக் காவி ஆங்கே,
மொய்குழலாய்! சுழற்றுவதன் மொய்ம்பு காணாய்!

* * *

'பார்;சுடர்ப் பரிதியைச் சூழவே படர்முகில்
எத்தனை தீப்பட் டெரிவன! ஓகோ!
என்னடீ இந்த வன்னத் தியல்புகள்!
எத்தனை வடிவம்! எத்தனை கலவை!
தீயின் குழம்புகள் செழும்பொன் காய்ச்சி
விட்ட ஓடைகள்—வெம்மைதோன் றுமே
எரிந்திடுந் தங்கத் தீவுகள்—பாரடீ!
நீலப் பொய்கைகள்—அடடா! நீல
வன்ன மொன்றி லெத்தனை வகையடீ!
எத்தனை செம்மை! பசுமையுங் கருமையும்
எத்தனை! கரிய பெரும்பெரும் பூதம்!
நீலப் பொய்கையின் மிதந்திடுந் தங்கத்
தோணிகள்! சுடரொளிப் பொற்கரை யிட்ட
கருஞ்சிக ரங்கள்—காணடீ! ஆங்குத்
தங்கத் திமிங்கிலம் தாம்பல மிதக்கும்
இருட்கடல்!—ஆஹா! எங்குநோக் கிடினும்
ஒளித்திரள்! ஒளித்திரள்! வன்னக் களஞ்சியம்!'[1]

* * *

பாரதியார் இயற்கை அழகை இன்பச் சித்திரமாக்கிக் காட்டும் பாட்டில் உணர்ச்சி ஆடும் ஆட்டத்தைப் பார்த்தீர்களா!

இனி அந்த வீரக்கவிஞர் எழுதிய **பாஞ்சாலி சபதத்**தில் ஒரு பகுதியைப் பார்ப்போம்:

1. பாரதியார் பாடல்கள் (அரசாங்க வெளியீடு) பக். 493-4

பேய் அரசு புரிந்தான் பாவி துரியோதனன்! அவன் பாஞ்சாலியை—மாதர் குலவிளக்கை—சபை நடுவே இழுத்து வரச்செய்தான். ஐயோ! அம் மாதரசி ஆடை குலைவுற்று அம்பு பட்ட மான் போலத் துடிதுடித்து நிற்கிறாள். மாடு நிகர்த்த துச்சாதனன் அவள் கூந்தலைப் பிடித்து இழுக்கிறான். அந்தப் 'பீடை'யைப் பார்த்தான் வீமன்; இடி முழக்கம் செய்கிறான்; சூதாடிச் சூதாடித் தோற்ற தருமனைச் சாடுகிறான்.

'நாட்டையெல் லாந்தொலைத்தாய், —அண்ணே!
நாங்கள் பொறுத்திருந்தோம்!
மீட்டு மெமையடிமை—செய்தாய்,
மேலும் பொறுத்திருந்தோம்!

'துருப தன்மகளைத்—திட்டத்
துய்ம னுடன்பிறப்பை,
இருப கடையென்றாய்,—ஐயோ!
இவர்க்க டிமையென்றாய்!

'இதுபொ றுப்பதில்லை,—தம்பி!
எரித ழல்கொண்டுவா!
கதிரை வைத்திழந்தான்—அண்ணன்
கையை எரித்திடுவோம்!'[2]

பேசியவன் யார்? வீமன். ஆனால், பாடியவர் யார்? —பாரதியார்! ஆனால், பாட்டைக் கூர்ந்து கேட்கும் போது நமக்கு அந்த நினைவு வருகிறதா? அது மட்டுமா!

'கதிரை வைத்திழந்தான்—அண்ணன்
கையை எரித்திடுவோம்!'

2. பாரதியார் பாடல்கள் (அரசாங்க வெளியீடு) பக். 546

என்று படிக்கும் போது நாம் அல்லவா வீமனாகி மனம் குமுறுகிறோம்? ஆம். அதுதான் கவிதை—கவிதையின் உயிர்—உணர்ச்சி கண்ட வெற்றி.

பாரதியாரின் பாடல்களில் பீறிட்டெழும் உணர்ச்சி வேகத்தைப் பார்த்தோம். இனிச் செந்தமிழ் நாட்டின் உரிமைக் காப்பியமாகிய சிலப்பதிகாரத்தைக் காண்போம்:

வீரக் கண்ணகியின் வரலாறு நாம் அறிந்த வரலாறு. மதுரை மாநகரம் பழுதறியாப் பாண்டியனது ஆட்சிப்பீடம். அந்தப் பழியறியாப் பாண்டிய மன்னனது தலைநகரிலேதான் ஒரு நாள் ஒரு பெண்ணின் அலறல் கேட்டது; 'கொடுங்கோலன்! கொடுங்கோலன்! கொடுங்கோலன்!' என்ற குரல் ஊரெல்லாம் கேட்டது.

கையிலே சிலம்பு—விரித்து விட்ட கருங்கூந்தல்—கண்ணிலே பொங்கிவரும் நீர்—ஆம், அவள்தான் வீரக் கண்ணகி எதிரே நிற்கிறான் வேந்தன்—நெடுஞ்செழியன்.

'பெண்ணே, ஏன் அழுகிறாய்? யார் நீ?' என்கிறான் மன்னன். கண்ணகியின் பதிலை—வெடிபடும் இடி முழக்கத்தைக் கேளுங்கள்:

"தேரா மன்னா! செப்புவ துடையேன்:
எள்ளறு சிறப்பின் இமையவர் வியப்பப்
புள்ளுறு புன்கண் தீர்த்தோன் அன்றியும்
வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுடத் தான்தன்
அரும்பெறற் புதல்வனை ஆழியின் மடித்தோன்

பெரும்பெயர்ப் புகாரென் பதியே ; அவ்வூர்
ஏசாச் சிறப்பின் இசைவிளங்கு பெருங்குடி
மாசாத்து வாணிகன் மகனை யாகி
வாழ்தல் வேண்டி ஊழ்வினை துரப்பச்
சூழ்கழல் மன்னா ! நின்னகர்ப் புகுந்தீங்கு
என்காற் சிலம்பு பகர்தல் வேண்டி நின்பாற்
கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி
கண்ணகி யென்பதென் பெயரே.

'என்காற் சிலம்பு—நின்பாற்
கொலைக்களப்பட்ட !'[3]

*கண்ணகியின் பேச்சைக் கேட்டீர்களா? உணர்ச்சியின் கொடுமுடியைக் கண்டீர்களா? இதோடு நின்றாளா வீரக் கண்ணகி! சிலம்பை உடைத்தாள்; மணி தெறித்தது. 'யானோ அரசன்! யானே கள்வன்!' என்று கசிந்து வீழ்ந்து மாண்டான் வேந்தன். ஆறியதா அவள் சினம்? அந்த நெஞ்சக் குமுறலைக் கேளுங்கள்:*

"'மட்டார் குழலார் பிறந்த பதிப்பிறந்தேன்
பட்டாங் கியானுமோர் பத்தினியே யாமாகில்
ஒட்டே னரசோ டொழிப்பேன் மதுரையுமென்
பட்டிமையுங் காண்குறுவாய் நீ,'என்று விட்டகலா,

'நான்மாடக் கூடல் மகளிரும் மைந்தரும்
வானக் கடவுளரும் மாதவருங் கேட்டீமின்:
யானமர் காதலன் தன்னைத் தவறிழைத்த
கோநகர் சீறினேன் குற்றமிலேன் !'"[4]

*இந்தக் குரலை மதுரை மாநகர் கேட்டது இன்றன்று—நேற்றன்று—ஈராயிரம் ஆண்டுகட்கு முன்!*

3. *சிலப்பதிகாரம்–வழக்குரை காதை,* 501—63.
4. ,, *–வஞ்சின மாலை,* 35—42.

ஆனால், இளங்கோவின் கவிதையில் இன்றும் காண்கிறோம்—வேந்தனை எதிர்த்த அந்த வீரப் பெண்ணை; இன்றும் கேட்கிறோம் அந்த இடியோசை போன்ற புரட்சிக் குரலை. உணர்ச்சியின் சிகரத்தை ஒரு நொடிப்பொழுதில் எட்டிப் பிடிக்கிறோம். இது தான் கவிதை; இதுதான் சிலப்பதிகாரம். காலத்தைவென்று இளங்கோவின் கவிதை வாழ்கிறது—ஏன்? —உணர்ச்சியின் ஓவியம் இளங்கோவின் பாட்டு. அதனாலேதான் கவியரசர் பாரதியாரும் 'நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம்,' என்று போற்றினர்.

சிறந்த கவிதை நம் நெஞ்சை அள்ளவேண்டும். கவிஞனுடைய உணர்ச்சிகள்—அவன் படைக்கும் பாத்திரங்களின் உணர்ச்சிகள்—நம் உள்ளத்தைத் தாக்கி உடலையும் தாக்க வேண்டும். கவிஞன் அழுதால், நாமும் அழவேண்டும்; அவன் சிரித்தால், நாமும் சிரிக்க வேண்டும்; அவன் சீறினல், நாமும் சீற வேண்டும்; அவன் அமைதியுற்றால், நாமும் அமைதியுற வேண்டும். இப்படி நம் நாடி நரம்புகளையும் தாக்கி நம் மெய்யிலே 'உணர்ச்சி' உண்டாக்கும் அழகை முதலான தன்மைகளையே 'மெய்ப்பாடு' என்று தொல்காப்பியர் விளக்குகிறார்.

அத்தகைய மெய்ப்பாடு இல்லாத கவிதையால் ஒரு பயனும் இல்லை. உணர்ச்சியற்ற கவிதை, உப்பில்லாத பண்டத்தைப் போன்றது; உயிரற்ற உடலைப் போன்றது; சுதந்தர ஒளியற்ற நாட்டைப் போன்றது.

ஆங்கில இலக்கிய அறிஞர்களாகிய ஹட்ஸன்–வின்செஸ்தர்–ரிச்சர்ட்ஸ் போன்ற பேரறிஞர்தம் நூல்களோடு நீங்கள் உறவு கொண்டால் கவிதை உணர்ச்சியைப்பற்றிய எத்தனையோ உண்மைகளைத் தெரிந்துகொள்வீர்கள். ஒரு சிறந்த கவிதை அல்லது காவியத்தில் ஊடுருவிப் பாய்ந்திருக்கும் உணர்ச்சிக்கு ஐந்து சிறந்த பண்புகள் தேவை. கவிதையில் வரும் உணர்ச்சி பொருத்தம் உடையதாய்—சக்தி வாய்ந்ததாய்—நிலைத்து நிற்பதாய்—பல்வகைச் சுவை பொருந்தியதாய்—உயர்ந்த பண்புடையதாய் விளங்க வேண்டும்.

இத்தகைய சிறந்த உணர்ச்சி இல்லாத ஒரு கவிதையில் நல்ல ஓசை—நயமான சொல்—சுவையான கற்பனை—உயர்வான தத்துவம்—எல்லாம் இருக்கின்றன; ஆனால், உணர்ச்சிதான் இல்லை என்றால், என்ன பயன்? சுதந்தரமற்ற மக்களைப் பற்றிப் பாரதியார் சொல்லியது போல 'அணிகள் வேய் பிணத்தோடு' ஒப்பிட வேண்டுவதுதான். வாழப் பிறந்த கவிதையில் இருவகை உணர்ச்சிகள் பின்னிக்கிடக்க வேண்டும். ஒன்று, கவிஞனது உணர்ச்சி; இன்னொன்று, காலத்தின் உணர்ச்சி. கவியரசர் பாரதியாரின் பாடல்களைப் பாமரர் முதல் பண்டிதர் வரை எல்லா மக்களும் போற்றுவது ஏன்? பாரதியார் மக்களின் உணர்ச்சியைப் பாடினார்; மக்களின் உணர்ச்சிக்காகப் பாடினார். அவர் பாடல்களில் எளிமை தவழ்கிறது. ஆனால், உணர்ச்சி வீறிடுகிறது. அந்த உணர்ச்சியும் இலட்சியப் பாதைக்கு வழி கோலுகிறது.

கலைகளுள் எல்லாம் சிறந்த கலை கவிதைக் கலை. சிற்பமும் சித்திரமும் நம் கண்களுக்கு இன்பம் பயப்பனவே. ஆனால், செந்தமிழ்க் கவிதை நம் கருத்துக்கு இன்பம் பயப்பது. அருமையான பல்லவச் சிற்பமும் அழகான சோழர் ஓவியமும் நம் கண்களைத்தான் கொள்ளை கொள்ளும். ஆனால், இளங்கோவின் கவிதையும் பாரதியாரின் பாட்டும் நம் நெஞ்சையே கொள்ளை கொள்ளும். மாமல்லபுரச் சிற்பங்களும், சித்தன்னவாசல் சித்திரங்களும் நம் விழிகளை இன்ப வெள்ளம் ஆக்குவதுபோல் யாழின் ஒலியும் குழலின் இசையும் நம் செவிகளைத் தேனுக்கும். ஆனால், அப்பர் தேவாரமும், மணிவாசகர் திருவாசகமும் நம் நெஞ்சை உருக்கும். ஏனைய கலைகள் நம் புலன் உணர்ச்சிகளை மட்டுமே தூண்டும். ஆனால், வள்ளுவர் கவிதை நம் ஒழுக்கத்தைப் பண்படுத்தும்.

உள்ளம் பல வகை—உணர்வுகளும் பல வகை. ஆனால், உணர்வுகளுள் எல்லாம் சிறந்த உணர்வு எது?

கவிதையில் மாம்பழத்தின் சுவையைப்போன்ற பருமையான உணர்வும் உண்டு; தக்காளியின் சுவையைப் போன்ற நுட்பமான உணர்வும் உண்டு. ஆனால், உடலின் நன்மைக்கு மாங்கனியைவிடத் தக்காளி நல்லதல்லவா? அவ்வாறே, உள்ளத்தின் வளர்ச்சிக்கு நுட்பமான உணர்வுகளே துணைபுரியும்.

உணர்வுகளுள் எல்லாம் உயர்ந்த உணர்வு எது?

அன்னையையும் அத்தனையும் துறந்து—உலகத்தார் ஆசாரங்களை உதறித்தள்ளி— தன்னையும் மறந்து தன் ஆவித் துணைவன் அன்பிலே அடைக்கலம் புகச்செய்யும் அந்த உயர்ந்த காதல் உணர்வு தான்—பத்தி உணர்வுதான்—மிகமிக உயர்ந்த உணர்வு! அந்த உணர்வுதான் கல்நெஞ்சையும் கரைத்து, பாறை நெஞ்சையும் பனி போல உருக்கி நெக்குநெக்கு உடைந்து பெருக்கெடுத்தோடும் கண்ணீரில் மனித குலத்தின் மன மாசுகளைக் கழுவச் செய்யும். அத்தகைய உன்னதமான அந்தக் காதல்—பத்தி உணர்வுகளைப் பாடும் கவிதையே தலைசிறந்த கவிதை. அத்தகைய கவிதைகள்—ஊனினைச் சுருக்கி உள்ளொளி பெருக்கும் கவிதைகள்—உணர்வு என்ற ஊற்றிலே பொங்கி வரும் தெள்ளமுதக் கவிதைகள்—வெறி தொலைத்து நெறி காட்டும் கவிதைகள்—ஆயிரம் ஆயிரம் தமிழ் மொழியில் உண்டு. அந்தக் கவிதைகளை நாம் கற்போம்; அந்தத் தெள்ளமுதச் சுவையை நாம் பருகுவோம்; பருகி அமர வாழ்வு காண்போம்!

# 2

# சங்க இலக்கியங்களில் பொறை

மனித வாழ்க்கைக்கும் அற நெறிக்கும் உரிய பண்புகளுள் எல்லாம் மிகச் சிறந்ததொரு பண்பு உண்டு. அதுதான் தன் உள்ளத்திற்கு ஒவ்வாத தையும், தன் மனத்திற்கு இன்பம் தாராததையும் பொதுநலத்திற்காகவும் பண்பாட்டிற்காகவும் உயர்ந்த குறிக்கோளுக்காகவும் மனமாரப் பொறுத் துக்கொள்ளும் 'பொறை'யாகும். 'பொறை' என்ற இவ்வுயர்ந்த பண்பைப் பெற்ற உத்தமர்கள்—சான் றோர்கள்—உள்ளத்தைத் துன்பம் என்ற தீ ஒரு நாளும் சுடுவதில்லை. 'பொறை' என்ற உயர்ந்த பண்பை மேற்போக்காக நினைக்கும் போது மிக எளிய பண்பாகவே அது நமக்குத் தோன்றுகிறது. ஆனால், இவ்வுயர்ந்த பண்பை வாழ்க்கையின் இறுதி வரை உறுதியாகக் கடைப்பிடிப்பது எவ்வ ளவு கடினம் என்பதை எண்ணும்போது, அவ்வாறு கடைப்பிடிக்க முயன்றவர்கள் தங்கள் ஆருயிரையே 'பொறை'யுடைமையால் காணிக்கையாக்கிய வரலாற்றை நினைக்கும்போது—நம் நெஞ்சம் உருகு கிறது.

அறநெறிக்குரிய பல நல்ல பண்புகளை இயல் பாகவே பெற்றவர்களிடமும் இவ்வுயரிய பண்பு வேரூன்றி விளங்குவது அருமை. ஆனால், அரும் பாடு பட்டு முயன்றால், நாம் ஒவ்வொருவரும் நமக்கு 'உற்றநோய்'களை எல்லாம் பொறுத்துக்கொண்டு,

வேறு எவருக்கும் எள்ளளவு தீங்கையும் சிந்தையாலும் செய்யாதவராய், பொறையின் பயன் கண்டவராய், தவத்தோராய், வள்ளுவர் காட்டிய வழியில் —காந்தி அடிகள் வாழ்ந்த நெறியில்—வாழலாம்.

'பொறை'யின் சிறப்பைத் தமிழ் இலக்கியங்கள் எல்லாம் விரிவாகப் பேசுகின்றன. பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் சான்றோர் போற்றும் பழந்தமிழ் நூல்கள் ஆகும். 'சங்க இலக்கியங்கள்' என்று போற்றப்படும் பெருமை அந்நூல்களின் தனி உரிமையாகும். ஏனைய பதினெண்கீழ்க்கணக்கு நூல்களும், சிலப்பதிகாரமும், மணிமேகலையும் அச்சங்க இலக்கிய நிழலிலே தோன்றியவை என்று அறிஞர்கள் கூறுவார்கள்.

சங்க இலக்கியங்களாகிய பத்துப்பாட்டும எட்டுத்தொகையும் பழந்தமிழ் மக்களின் ஒப்பு உயர்வற்ற நாகரிகத்தைப் படம் பிடித்துக் காட்டும் சொல்லோவியங்களின் கூடமாகும். அழகொழுகும் அச்சொல் ஓவியங்கள் நிறைந்து விளங்கும் கலையோவியக் கூடத்துள் நுழைந்து பார்த்தால், 'பொறை' என்ற சிறந்த பண்பு தமிழ் மக்கள் வாழ்க்கையில் எவ்வாறு ஒளி பெற்றுத் திகழ்ந்தது என்பதை உணர்ந்து மகிழலாம். மாநிலத்தின் காவலனும், மனையின் தலைவியும், சினமடங்காப் போர் வீரனும், செந்தமிழ் வளர்க்கும் புலவனும், கலைச் செல்வர்களும், சமய ஞானிகளும் எவ்வாறு 'பொறை' என்ற உயர்ந்த பண்பைத் தங்கள் வாழ்க்கையில் போற்றிவந்தார்கள் என்பதைப் பத்துப் பாட்டும் எட்டுத்தொகையும் நமக்கு விளக்குகின்றன.

'பொறை' என்ற உயர்ந்த பண்பு தனி மனிதனுக்கும் தேவை; ஒரு சமூகத்திற்கும் தேவை. 'பொறை' என்ற சிறந்த பண்பு, சொல்—செயல்—சிந்தனை என்ற மூன்றிலும் சிறந்து விளங்க வேண்டும். ஒன்றில் 'பொறை' இருந்து மற்றொன்றில் இல்லையானால், அதனால் பெரிய பயன் ஒன்றும் இல்லை. சொல்லிலும் செயலிலும் சிந்தனையிலும் 'பொறை'யைப் போற்றிய சங்ககாலத் தமிழ் மக்கள் தங்கள் வீட்டு வாழ்க்கையிலும் நாட்டு வாழ்க்கையிலும் உலக வாழ்க்கையிலும் 'பொறை'யை மேற்கொள்ள வேண்டும் என்ற தெளிந்த ஞானத்தைப் பெற்றிருந்தார்கள். இந்த உண்மையை அழகுற விளக்கும் எண்ணற்ற சான்றுகள் சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. அவற்றுள் சிலவற்றை மட்டும் காண்போம்:

வாழ்க்கையில் எத்தனையோ வகையில் துன்பம் வரும். உடலுக்கும் உள்ளத்திற்கும் உயிருக்கும் அத்துன்பம் வரும். ஆனால், ஒரு வகையில், உடலுக்கும் உயிருக்கும் வரும் துன்பத்தைக்காட்டிலும் உள்ளத்திற்கு வரும் துன்பமே மிகப் பெரியது; மிகக் கொடியது.

தலைவியை அன்பு செய்து மணம் புரிந்து கொண்ட தலைவன் வாழ்க்கைக்கு வேண்டிய பொருள் தேடுவதற்காகப் பிரிந்து சென்றுவிட்டான். அவன் விரைவில் திரும்பி வர முடியாமல் போய்விட்டது. தலைவியின் துன்பம் மிகக்கொடியதாயிற்று. அவள் கண்கள் அழுத வண்ணமாய் இருந்தன. இந்நிலைமையைக் கண்ட ஊரில் உள்ள

பெண்டிர், பிரிந்த தலைவனையும் அவனை நினைந்து வருந்திய வண்ணமாய் இருக்கும் தலைவியையும் எள்ளினர்—பழித்தனர். தோழி வாயிலாக ஊரார் எள்ளுவதை அறிந்த தலைவியின் நெஞ்சம் புண்ணாயிற்று. என்றாலும், அவள் 'பொறையே' வடிவாய் இருந்தாள்; 'சுடச்சுடரும் பொன்போல'ப் பிரிவுத் தீயும், ஊரார் தூற்றும் பழிநெருப்பும் தன்னைச் சுட்ட போதும் பொறையே வடிவெடுத்தவளாய் மனப் பண்பாடு குன்றாது விளங்கினாள். துன்பம் மிக்க அந்நிலையிலும் அவள் என்ன கூறினாள்?

"......என் ஆய்நலம் தொலையினும் தொலைக!
என்றும் நோயில ராகநம் காதலர்!"[1]

'என் சிறந்த அழகு கெடுவதானாலும் கெடட்டும். நம் காதலர் என்றும் நோயிலராகத்—துன்பம் இல்லாதவராக — இருக்கவேண்டும்,' என்று வேண்டினாள்.

அகநானூற்றில் மாமூலனார் பாடியுள்ள இத்தலைவியைப்போலத் தலைவன் பிரிவாலும், தலைவன் செய்யும் தவறுகளாலும், வன்னெஞ்சம் கொண்டு ஊரார் தூற்றும் பழியாலும் மனம் நொந்து துன்புற்ற போதெல்லாம் தலைவி 'பொறை'யே வடிவாய் இருந்த காட்சியைச் சித்திரிக்கும் சொல்லோவியங்கள் பலவற்றைச் சங்க இலக்கியங்களில் காணலாம். பொறுத்திருப்பதையே—தலைவன் பிரிந்த காலத்தில் ஆற்றி இருப்பதையே—கற்பின் நெறியாக—முல்லைத் திணையாகத் தமிழ் மக்கள் போற்றினார்கள்

1. அகநானூறு—115

என்றால், 'பொறை'யையே அடிப்படையாகக் கொண்ட அவர்கள் நாகரிகம் எவ்வளவு உயர்ந்தது!

அன்பு வாழ்விற்கு இன்றியமையாத இப் 'பொறை' அரசியல் வாழ்விற்கும் மிகமிகத் தேவை யாகும். இன்று நம் தமிழகத்தில் ஒற்றுமை உணர்ச்சி வளர்ந்து வருகிறது. 'ஒன்றுபட்ட தமிழகம் உருவாக வேண்டும்; புதிய தமிழகம் மலர வேண்டும்; அதில் தமிழரசு அமைய வேண்டும்,' என்ற எண்ணம் மக்களிடையே முதிர்ந்து வருகிறது. ஆனால், பழந்தமிழகம் சேர சோழ பாண்டி நாடு களாகப் பிளவுபட்டுக் கிடந்தது. மூவேந்தரும் ஒரு வரோடு ஒருவர் மாறுபட்டுப் போர் புரிவதே வழக்க மாகக் கொண்டிருந்தனர். 'இந்நிலை மாறவேண்டும். ஒரு மொழி பேசி, ஒரே பண்பாட்டில் ஊறி வாழும் மக்கள், மண்ணாள் வேந்தர் போர் வெறியால் பிளவு பட்டுக் கிடக்கும் பேதைமை—கொடுமை—நீங்க வேண் டும்,' என்று பாடுபட்டார்கள், காவிரிப்பூம்பட்டினத் துக் காரிக் கண்ணனார், கோவூர் கிழார், ஔவை யார், உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் போன்ற புலமை மிக்க சான்றோர்கள்; மூவேந்தரும் ஒருங்கிருக்கக் கண்டபோதெல்லாம், 'இன்றே போல்க நும் புணர்ச்சி!' என்று மனமார வாழ்த்தி னார்கள்.

சங்க காலத் தமிழகத்தில் புலவர்கள் பெற் றிருந்த சிறப்பு மிகப் பெரிது. நாடாளும் மன்னர் களின் நெஞ்சை ஆண்டார்கள் புலவர்பெருமக்கள். அறியாமையாலும், ஆற்றொணாச் சினத்தாலும், புலவர்களையும் குழந்தைகளையுங்கூடக் கொல்ல

மன்னர்கள் நினைத்தபோது கோவூர் கிழார் போன்ற புலவர்கள் கூறிய அறிவுரை கேட்டுச் சோழன் நெடுங்கிள்ளி, கிள்ளி வளவன் போன்ற மன்னர்கள் பொறையை மேற்கொண்டார்கள் என்ற செய்தியைப் புறநானூறு நமக்கு அறிவிக்கிறது.

சங்க இலக்கியச் சான்றோர்கள் பொறையுடை மன்னரைக் கண்டால் போற்றத் தவறியதில்லை. பாண்டவராகிய ஐவருக்கும் துரியோதனன் முதலிய நூற்றுவருக்கும் இடையே பாரதப் போர் மூண்ட போது நடுவு நிலைமை உடையோனாய் நின்று இரு படைக்கும் பெருஞ்சோறு அளித்தான் உதியன் சேரலாதன் என்ற மன்னன். அம்மன்னன் 'அகழ் வாரைத் தாங்கும் நிலம் போல'ப் பூமியினும் பொறை மிக்கானாய் விளங்கினான்.

'போற்றார்ப் பொறுத்தல் அவன் பண்பு,' என்று போற்றுகிறார் முடிநாகராயர் என்ற புறநானூற்றுப் புலவர்.[1]

பதிற்றுப்பத்து என்னும் சங்க இலக்கியத்தில் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதனைக் குமட்டூர்க் கண்ணனாரும், களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரலைக் காப்பியாற்றுக் காப்பியனாரும் போற்றிப் புகழும்போது அம்மன்னர்கள்பால் அமைந்துள்ள எண்ணற்ற நற்பண்புகளுள்ளும் பொறையே பெருஞ்சிறப்புடையது என்றும், அப்பண்புக்கு நிகரான பொருள் உலகில் யாண்டும் இல்லை

1. புறம். 2

என்றும் வியந்து கூறும் கருத்துகள் நம் சிந்தனைக்கு விருந்தாய் விளங்குகின்றன.[1]

புறநானூறு சித்திரிக்கும் மறக்க முடியாத மற்றொரு காட்சியை இங்கு நினைவு கூரலாம்:

மன்னனது முரசு கட்டிலில் ஏறுவது அடாத செயலாகும். ஆனால், ஒரு நாள் நெடுந்தொலைவிலிருந்து வந்த அயர்வால் மோசி கீரனுர் என்ற புலவர் சேரமான் தகடுரெறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை என்ற மன்னனது முரசு கட்டிலில் அறியாது ஏறிக்கிடந்து கண் அயர்ந்துவிட்டார். அதைக்கண்ட மன்னன் என்ன செய்தான்? அயர்ந்து கிடப்பவர் அருந்தமிழ்ப் புலவர் என்பதை அறிந்ததும், முரசு கட்டிலில் ஏறியவர் உடலை இரு கூறுக்க வேண்டியவன், அதைச் செய்யாததோடன்றிப் புலவர் பெருமான் அருகில் வந்து சாமரம் கொண்டு குளிர வீசினனும்! அயர்வு நீங்கிக் கண் விழித்து எழுந்த புலவரின் மனம் நன்றி உணர்வாற் பொங்கியது. அவர், 'அரசே, ......... அதூஉஞ் சாலுநற்றமிழ்முழு தறிதல்!' என்று போற்றினர்.[2] தமிழின் அருமையையும் புலமையின் பெருமையையும் உணர்ந்த தமிழ் மன்னனது செயல் பொறைக்கு ஓர் எடுத்துக்காட்டாய் விளங்குகிறது அன்றோ?

இவ்வாறு சங்ககாலத் தமிழ் மன்னர்களும், தமிழ் மக்களும் தங்கள் அகவாழ்விலும் புறவாழ்

1. பதிற்றுப்பத்து—2, 4-ஆம் பத்து.

2. புறம். 50

விலும் போற்றி வந்த பொறையைச் சமயத்துறை யிலும் சிறப்பாகப் போற்றினார்கள். ஆழ்ந்த நம் பிக்கையையும், பழமையான வழிபாடுகளையும் கொண்டு விளங்கும் சமயத்துறையில் ஏனைய துறை களைக்காட்டிலும் வேகமும் வெறியும் சற்று அதிக மாய் இருப்பது உலக இயற்கை. ஆனால், பழந் தமிழகம் இப்பொது விதிக்கு விலக்காய்த் திகழ்ந்த தைச் சங்க இலக்கியங்கள் நன்கு புலப்படுத்து கின்றன.

சங்க காலத்தில் சமயம் என்று நினைத்தவுடனே எட்டுத்தொகை நூல்களுக்குக் கடவுள் வாழ்த்துப் பாடிய பாரதம் பாடிய பெருந்தேவனார் நம் நினை விற்கு வருகிறார். அவர் சிவனையும் முருகனையும் திருமாலையும் போற்றிப் பாடியுள்ள அப்பாடல்கள் அவருடைய சமரச உள்ளத்தைப் புலப்படுத்துகின் றன. சிறந்த சான்றோர்கள் மனத்தில் இருக்கும் இந்தச் சமரச உணர்வு, சங்ககால மக்கள் வாழ்க் கையிலும் வேரூன்றி இருந்த செய்தியைப் பத்துப் பாட்டு என்ற பழந்தமிழ் இலக்கியம் நமக்குப் படம் பிடித்துக் காட்டுகிறது. சான்றாக ஒரு காட்சியினைக் காண்போம்:

மதுரை மாநகரில் அல்லங்காடியில் செல்வர் கள் சிவபெருமானை முதல்வனாகக் கொண்டு ஏனைய தெய்வங்கட்கும் நிவேதனங்களைச் செய்யும் அந்தி விழாவில் வாத்தியங்கள் ஒலிக்கும். அங்கே பௌத்தப் பள்ளிகள் உள. அவற்றில் பெண்டிர் கள் தங்கள் குழந்தைகளையும் கணவரையும்

அழைத்துக்கொண்டு சென்று பூவும் புகையுமிட்டுத் தொழுவார்கள். அங்கே அந்தணர்களின் இருப்பிடங்கள் இருக்கின்றன. மண்ணுலகிலிருந்தே விண்ணுலக இன்பத்தை நுகர்பவர்களாகிய பெரியோர்களும் அங்கே உறைகின்றார்கள். அமண் பள்ளிகளும் உள்ளன. அவற்றில் முக்காலத்தையும் அறிந்து தேவருலக இயல்பையும், இவ்வுலக இயல்பையும் தெரிந்து, அமைந்த விரதத்தையும் இளையாத உடம்பினையும் உடைய அறிஞர்கள், சாவகர் துதிக்க இருக்கின்றார்கள். அவர்கள் நோற்கும்பொருட்டு நாலுறியிலே குண்டிகையைத் தொங்கவிட்டிருக்கிறார்கள். அப்பள்ளிகள் குளிர்ச்சியுடையனவாய் உயர்ந்திருக்கும் என்று பத்துப் பாட்டுள் ஒன்றாகிய மதுரைக் காஞ்சி பல சமயங்களும் கூடல் மாநகரில் ஒருங்கிருந்த காட்சியைச் சொல்லோவியமாக்கிக் காட்டுகிறது.[1]

'பொறை' என்ற உயர்ந்த பண்பை ஓரளவே நாம் நம் வாழ்க்கையில் கடைப்பிடிக்கின்றோம். ஆனால், அறப்பண்புகட்கு எல்லாம் வித்தாகவும் பயனாகவும் விளங்கும் இவ்வுயர்ந்த பண்பை முற்றும் தங்கள் வாழ்க்கையில் கடைப்பிடிக்கும் ஆற்றல் படைத்த சான்றோர்களை நாம் வாழ்க்கையிலும் வரலாற்றிலும் காண்கிறோம். சான்றோர்கள் மட்டும் அந்நிலையை எவ்வாறு எளிதில் அடைகிறார்கள்?

சிலப்பதிகாரம் போற்றும் கண்ணகி கூறியாங்கு 'நெறியின் நீங்கியோர் நீரல கூறினும்

1. மதுரைக் காஞ்சி; 444–484.

அறியாமை'[1] என்றறியும் அருள் நெஞ்சம் படைத்தவர்க்கே அஃது இயலும்.

**'முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்**
**நஞ்சும் உண்பர் நனிநா கரிகர்.'[2]**

என்று நற்றிணையும்,

**'பெயக்கண்டும் நஞ்சுண் டமைவர் நயத்தக்க**
**நாகரிகம் வேண்டு பவர்.'[3]**

என்று வள்ளுவரும் போற்றும் நாகரிகம் உடையவருக்கே அஃது இயலும். ஆனால், அத்தகைய அருளும் நாகரிகமும் யாருக்கு அமையும்?

**'புதுவ தன்றிவ் வுலகத் தியற்கை'[4]**

என்று இவ்வுலகியலை நன்கு உணர்ந்து—மெய்யறிவும் மெய்யுணர்வும் பெற்றுப் பண்பாடே வடிவாய் விளங்கும் சான்றோர்கட்கே அப்பண்பு எளிதில் அமையும்.

இந்த உண்மையினைக் கணியன் பூங்குன்றனார் பாட்டு நமக்கு விளக்குகிறது. 'நன்மை தீமை இரண்டும் ஒருவன் தானே படைத்துக்கொள்கிறானேயன்றி, அவை பிறரால் வருவன அல்ல. எனவே, அவனுக்கு யாரிடத்தும் விருப்போ வெறுப்போ இல்லை. சாவைக் குறித்த அச்சமும் அவனுக்கு இல்லை. நீரிலே மிதக்கும் ஒரு பொருள் நீர் போகும்

1. சிலப்பதிகாரம், நாடுகாண் காதை, 237–8
2. நற்றிணை-355
3. திருக்குறள், 580
4. புறம். 76

வழியே போவது போல, உயிரும் தன் செயல் என்ற ஒன்று இன்றியே தொழிற்படுகிறது. இதனால், வாழ்க்கை வேண்டும் என்று விரும்புவதற்கு என்ன இருக்கிறது? அல்லது வேண்டா என்று ஒதுக்குவதற்குத்தான் என்ன இருக்கிறது? நன்மை மிக்கவர்களைப் பார்த்துப் புகழ்வதற்குத்தான் இடமுண்டா? அல்லது சிறியோரைக் கண்டு இகழ்வது தான் கூடுமா?' என்ற இத்தகைய உயர்ந்த அறிவை —மெய்யுணர்விற்குரிய 'தெளிந்த காட்சி'யைப் பெற்ற திறவோர்க்கே, பொறையுடைமையின் இறுதிப் பயனாகிய—மிகச்சிறந்த பயனாகிய—

'யாதும் ஊரே; யாவரும் கேளிர்'[1]

என்ற சமரச உணர்வு நெஞ்சில் பொங்கி எழும்.

இப்பேருண்மையை நாம் எல்லோரும் உணர்ந்து, 'உலகமெல்லாம் ஒரு குடும்பம்' ஆவதற்குப் புறநானூற்றுப் பாடலும், பிற சங்க இலக்கியங்களும் நமக்கு வழி காட்டுகின்றன.

---

1. புறம். 192

# 3

# பாரதியாரும் சுதந்தரமும்

விரிந்து பரந்து கிடக்கும் தமிழ் இலக்கிய வரலாற்றில் தேசியக் கவிஞர் பாரதியார் பெற்றுள்ள இடம் தனிச்சிறப்பு வாய்ந்ததாகும்.

வள்ளுவர் வான்மறை, கம்பர் கவியமுதம், இளங்கோவின் எண்ணக் களஞ்சியமாம் சித்திரச் சிலப்பதிகாரம், இன்ன பிற செந்தமிழின் சுவை காட்டும் நூல்கள் எல்லாம் செல்லரித்த ஏடுகளாய் மடங்களிலும் கவிராயர் வீட்டுப் பரண்களிலும் சிறைப்பட்டிருந்த நாளில்; இன்பத்தமிழின் ஏற்றமெல்லாம் அடிமைத் தாயகத்தில்—ஏகாதிபத்தியக் கொடுமையில் — அழிந்தொழிந்து மக்கள் நினைவினின்றும் மட்கி மடிந்தேவிடுமோ என்ற கோரக் கொடுநிலை தோன்றிய நாளில், தமிழுக்கும் தமிழ் இனத்திற்கும் விடுதலை தேடிப் போர்க்களம் புகுந்து சுதந்தரப் போரில் தியாகத்தீயில் — தமது உடல் பொருள் ஆவியை எல்லாம் அர்ப்பணித்து, தமிழ் இனத்தின் — பரதகண்டத்தின் — விடுதலைக்காகக் களப்பலியான முதற்கவிஞர் — தமிழ்க் கவிஞர் — பாரதியாரேயாவர்.

ஆம்! வள்ளுவருக்கில்லாத வாய்ப்பு, கம்பருக்கில்லாத பெருமை, இளங்கோவுக்கு இல்லாத புகழ், ஏகாதிபத்தியக் கொடுமையை எதிர்த்து ஆவேசப் போர் புரிந்து சொல்லொணாத் துயர் உழந்த அமர கவிஞர் பாரதியாருக்கு உண்டு!

போர் பாடிய புலவராய் மட்டுமன்றிப் போர் புரிந்த தீரக் கவிஞராயும் திகழ்ந்து சுதந்தரப் போரில் விடுதலை முரசு கொட்டிய தேசியக் கவிஞர் பாரதியாரின் ஆவேச உள்ளம், அவருடைய அமர கவிதைகளில் அழியாப் புகழ் உடல் பெற்று வாழ்கிறது.

வீரக்கவிஞர் பாரதியாரின் விடுதலை வெறி கொண்ட பாடல்களின் அரசியல் குறிக்கோள் நிறைவேறிவிட்டது. எனினும், அப்பாடல்கள் இன்றுங்கூட ஒளி குன்று மணி விளக்கங்களாய்க் காட்சி அளிக்கின்றன. சுதந்தர வெயிலில் அச்சுடர் விளக்கங்களின் அருமை கண்ணுக்குத் தெரியாவிட்டாலும், அடிமை இருளகற்றிச் சுதந்தர ஒளி காட்ட வல்ல அவ்விளக்கங்களின் ஆற்றல், கருத்திற்கும் கற்பனைக்கும் விளங்காது போகுமோ?

நாட்டு மக்கள் நெஞ்சில் காட்டுத் தீயெனக் கனன்றெரிந்த 'தேசபத்தி' என்ற புது நெருப்பைப் பெற்ற தாயின்—பாரதத்தாயின்—நெஞ்சில் தரணிக்கெல்லாம் மீண்டும் ஓர் ஒளி காட்ட மூண்டெழுந்த புதியதோர் ஆசைத் தீயெனப் போற்றி, அதில் தம்மை அர்ப்பணிக்கத் துணிந்த பாரதியார் தம் கவிதைகளில் எல்லாம் தேனின் சுவையோடு அந்தத் தீயின் ஆற்றலையும் கலந்தே பாடினர்; பழமைப் பாரதத்திலும் புதுமை ஒளி காட்டினர். சுதந்தர உணர்ச்சியற்று நாட்டு மக்களையெல்லாம் ஆட்டக்காய்களாக நினைத்தவர் 'தருமரே' ஆனாலும்,

'தேயம் வைத்திழந்தான்—சீச்சீ!
சிறியர் செய்கைசெய்தான்!'[1]

எனச் சினந்துரைத்தார்.

அவர்கடவுளை நோக்கிப் பத்தர்கள் கதறி அழு வதெல்லாம் 'மோட்சம்' காணும் மோகத்தால் என்றிருந்த நிலை மாற்றிக் கோடிக்கணக்கான மக்களை அடிமைக் குழியிலிருந்து காப்பாற்றும் அரசியல் விடுதலை தனி ஒருவனது ஆன்ம விடுதலையைக் காட்டிலும் ஆயிரம் ஆயிரம் மடங்கு பெரிதென நம்பிக் கவிதை புனைந்தார்;

'மேலோர்கள் வெஞ்சிறையில் வீழ்ந்து கிடப்பதுவும்
நூலோர்கள் செக்கடியில் நோவதுவுங் காண்கிலையோ?'[2]

என்று வீர சிதம்பரனாரை நினைத்து விம்மி அழுதார்;

'பஞ்சமு நோயுநின் மெய்யடி யார்க்கோ?
பாரினில் மேன்மைகள் வேறினி யார்க்கோ?'[3]

எனக் கண்ணனை—கடவுளை —மனங்கொதித்துக் கேட்டார்.

இவ்வாறு கடவுளின் முன்—சுதந்தர தெய்வத்தின் முன்—வெறிகொண்ட தேசபத்தராய் நின்று இருபதாம் நூற்றாண்டின் இணையிலாக் கவிஞர் பாரதியார் கேட்கும் கேள்விகளையும், செய்யும் பிரார்த்தனைகளையும், பூணும் உறுதிகளையும் பாருங்கள்!

---

1. பாரதி நூல்கள், (அரசாங்க வெளியீடு) பக். 518
2. ,, ,, பக். 47
3. ,, ,, பக். 49

'விதந்தரு கோடி யின்னல்
விளைந்தெனை யழித்திட் டாலும்
சுதந்தர தேவி! நின்னைத்
தொழுதிடல் மறக்கி லேனே!'[1]

என்பது பாரதியாரின் உள்ளம்.

'நின்னருள் பெற்றி லாதார்
நிகரிலாச் செல்வ ரேனும்
பன்னருங் கல்வி கேள்வி
படைத்துஉயர்ந் திட்டா ரேனும்
பின்னரும் எண்ணி லாத
பெருமையிற் சிறந்தா ரேனும்
அன்னவர் வாழ்க்கை பாழாம்;
அணிகள்வேய் பிணத்தோ டொப்பார்.'[2]

என்பது பாரதியாரின் உறுதி.

'தேவி!நின் ஒளிபெ றாத
தேயமோர் தேய மாமோ?
ஆவியங் குண்டோ? செம்மை
அறிவுண்டோ? ஆக்க முண்டோ?
காவிய நூல்கள் ஞானக்
கலைகள்வே தங்க ளுண்டோ?
பாவிய ரன்றோ நின்றன்
பாலனம் படைத்தி லாதார்?'[3]

என்பன பாரதியாரின் கேள்விகள்.

'அம்மை யுன்ற னருமை யறிகிலார்

* * *

---

1, 2. பாரதி நூல்கள் (அரசாங்க வெளியீடு) பக். 49
3. ,, ,, பக். 50

'ஒழிவறு நோயிற் சாவார்;
ஊக்கமொன் றறிய மாட்டார்;
கழிவுறு மாக்க ளெல்லாம்
இகழ்ந்திடக் கடையி னிற்பார்;
இழிவுறு வாழ்க்கை தேரார்;
கனவினும் இன்பங் காணார்;
அழிவறு பெருமை நல்கும்
அன்னை!நின் னருள்பெ றாதார்.'[1]

என்பன பாரதியாரின் பதில்கள்.

'உலக நாடுகளில் எல்லாம் உரிமைக்கொடி பறந்தாடிடும் நாளில், அடிமை நாட்டில் பிறந்தோமே!' என்ற ஆத்திரம் பாரதியாரின் நெஞ்சைச் சுட்டெரித்தது. அதை எண்ணி எண்ணி அவர் இதயம் குமுறுகிறார்.

'பின்ன முற்றுப் பெருமை யிழந்துநின்
சின்ன மற்றழி தேயத்திற் றோன்றினேன்!'[2]

என்று அவர் சிந்தை வெந்து,

'தூயசீ ருடைத்தாம் சுதந்தரத் துவசம்
துளங்கிலா நாட்டிடைப் பிறந்தேன்!
'மற்றைநாட் டவர்முன் னின்றிடும் போழ்து
மண்டுமென் வெட்கத்தி னுணை!'[3]

என்று மனம் குமுறுகின்றார். அது மட்டுமோ! கண்ணனை—மணி வண்ணனைப்—பார்த்துக் கேட்கிறார் பாரதியார்:

1, 2. பாரதி நூல்கள் (அரசாங்க வெளியீடு) பக். 50–51
3. பாரதி நூல்கள் (அரசாங்க வெளியீடு) பக். 91–2.

'ஒப்பி லாத உயர்வொடு கல்வியும்
எய்ப்பில் வீரமும், இப்புவி யாட்சியும்'[1]

வழங்கு ;

'மற்று நீயிந்த வாழ்வு மறுப்பையேல்
சற்று நேரத்து ளெம்முயிர் சாய்த்தருள் !'[2]

"வாழவை; அல்லது சாகவை." இதுவே 'வெற்று வாழ்க்கை'யை விரும்பாத வீரபாரதியாரின் வேண்டுகோள்.

இத்தகைய நெஞ்சக் குமுறலை—சுதந்தர ஆவேசத்தை—பாரதியாருக்குக் கொடுத்த சத்தி யாது? 'மானம் பெரிது; வாழ்வு சிறிது,' என மதித்த மறத்தமிழ்க் குடியில் பாரதியார் பிறந்த பிறப்பே 'பூமியி லெவர்க்குமினி அடிமை செய்யோம்!' என்ற தன்மான உணர்ச்சியை அவர்க்குத் தந்தது. பிறப்பிலேயே பாரதியாரின் உள்ளத்தில் பூத்திருந்த சுதந்தரக் கனலை—ஏகாதிபத்திய அடிமைச் சூழ்நிலை என்ற சாம்பல் மூடியிருந்தது. அத்தீக் கனலைத் திலகரின் புரட்சியும், சிதம்பரனாரின் தியாகமும், நௌரோஜியின் போரும், லஜபதியின் வீரமும், காந்தியாரின் வேள்வியும் காற்றெனச் சுழன்றடித்துப் பொறி பறக்கச் செய்தன. அவற்றோடு பெல்ஜியத்தின் அறப்போர், மாஜினியின் சபதம், ரஷியாவின் புரட்சி, இத்தாலியின் எழுச்சி போன்ற உலக நாடுகளின் சரித்திரச் சூறாவளிக் காற்றும் பாரதியாரின் நெஞ்சிலிருந்த சுதந்தரத்தீயை எழுநாவிட்டு எரியச்செய்தது. உலக நாடுகளிலெல்லாம் 'கூற்றி

1, 2. பாரதி நூல்கள் (அரசாங்க வெளியீடு) பக். 169–170.

னுக்குயிர் கோடி கொடுத்த' கொள்கை படைத்த வீரர்கள் செய்த புரட்சி, பாரதியாரின் ஆவேசத் தீயை மூட்டியது. மேலும், அத்தீயினின்றும் தெறித்து விழுந்த தீச்சுடர்களே பாரதியாரின் கட்டுரைகள், கவிதைகள், காவியங்கள்.

சிவாஜியின் வீரத்தை—திலகரின் புகழை—காந்தியாரின் புரட்சியை—லஜபதியின் துயரை—சிதம்பரனாரின் சீற்றத்தை எல்லாம் தித்திக்கும் தமிழாற்பாடித் தேசாபிமானத் தீயை நாட்டு மக்கள் நெஞ்சிலெல்லாம் பற்றி எரியச்செய்தார் பாரதியார்.

சுதந்தர வெறி கொண்ட பாரதியாரின் பாடல்களில் சோகம், சீற்றம், சிந்தனை, காதல், கருணை, கடமை—அத்தனையும் உண்டு.

'தண்ணீர்விட் டோவளர்த்தோம்?
சர்வேசா? இப்பயிரைக்
கண்ணீரාற் காத்தோம்;
கருகத் திருவுளமோ?' [1]

என்று கடவுளை நோக்கிக் கதறியழும் பாரதியாரின் கவிதையைப் படிக்கும் போது நெஞ்சம் உருகாதார் யார்?

'கூட்டங் கூடிவந் தேமாத ரமென்று
கோஷித்தாய்—எமைத்—தூஷித்தாய்!
ஓட்டம் நாங்க ளெடுக்கவென் றேகப்பல்
ஓட்டினாய்—பொருள்—ஈட்டினாய்!'

என்ற வெள்ளையன் வீம்பிற்கு,

1. பாரதி நூல்கள் (அரசாங்க வெளியீடு) பக். 46

'பொழுதெல் லாமெங்கள் செல்வங்கொள் ளைகொண்டு
போகவோ?—நாங்கள்—சாகவோ?
அழுது கொண்டிருப் போமோ?ஆண் பிள்ளைகள்
அல்லமோ—உயிர்—வெல்லமோ?'[1]

—என்று கப்பல் ஓட்டிய தமிழர் வீரசிதம்பரனார் கணீரெனச் சொல்லிய பதிலைப் பாரதியாரின் கவிதையில் படிக்கும் போது,

'படித்தறியா மிகஏழைக் கிழவ னேனும்
பாரதியின் பாட்டிசைக்கக் கேட்பா னாகில்
துடித்தெழுந்து தன்மெலிந்த தோளைக் கொட்டித்
தொளைமிகுந்த கந்தலுடை சுருக்கிக் கட்டி,
'எடுத்தெறிய வேணுமிந்த அடிமை வாழ்வை
இப்பொழுதே இக்கணமே!' என்றென் னுரத்தே
அடித்துரைத்து ஆவேசம் கொள்வான்'[2]

என்ற கவிஞரின் வாக்கு அத்தனையும் மெய்யென்று விளக்குகிறதன்றோ?

'நாலு திசையும் ஸ்வாதந் தர்ய நாதம் எழுகவே!
நகர மொத்த அடிமை வாழ்வு நைந்து கழிகவே!'[3]

என்று வீர முழக்கமிட்ட பாரதியார், 'வீர சுதந்தர'த்தின் பெற்றியை எல்லாம் விரித்துரைக்கும் செய்தியைக் கேளுங்கள் :

'வீரசு தந்திரம் வேண்டிநின் றார்பின்னர்
வேறொன்று கொள்வாரோ?—என்றும்
ஆரமு துண்ணுதற் காசைகொண் டார்கள்ளில்
அறிவைச் செலுத்துவாரோ?'[4]

என்று கேட்கிறார்.

1. பாரதி நூல்கள் (அரசாங்க வெளியீடு) பக். 67–8.
2. தமிழன் இதயம்—வெ. இராமலிங்கம் பிள்ளை, பக். 67
3. பாரதி நூல்கள் (அரசாங்க வெளியீடு) பக். 84
4. ,, ,, பக். 45

கொச்சை இன்பங்களை விரும்பி உன்னதக் குறிக்கோளை மறக்கும் உன்மத்தர்களைப் பாரதியார் சாடுவதைப் பாருங்கள்:

'மண்ணிலின் பங்களை விரும்பிச் சுதந்தரத்தின்
மாண்பினை யிழப்பாரோ?
கண்ணிரண் டும்விற்றுச் சித்திரம் வாங்கினுற்
கைகொட்டிச் சிரியாரோ?'[1]

என்று கேட்கிறார்.

இப்படி இன்னும் கொள்ளை கொள்ளைக் கவிதைகளில் சுதந்தரத்தின் பெருமைகளைப் பாடுகிறார்; அவற்றை உணராத நடிப்புச் சுதேசிகளைச் சாடுகிறார்.

பாரதியாரின் சுதந்தர உணர்ச்சி அவரைப் பெற்றெடுத்த பரம்பரை தந்த பரிசு; அவரைக் கண்டெடுத்த காலம் அவருக்கு இட்ட கட்டளை; அவரை ஈன்றெடுத்த இன்பத் தாயகத்தில் நிமிர்ந்து நிற்கும் இமயம்—விரிந்து கிடக்கும் பொழில்கள்—குளிர்ந்தோடும் கங்கை—குவிந்திலங்கும் குமரி முனை—இவை ஊட்டிவிட்ட தெள்ளமுதம். அதனாலன்றோ, அந்த அமர கவிஞர்,

'மன்னு மிமய மலையெங்கள் மலையே;
மாநில மீதது போற்பிறி திலையே!
இன்னறு நீர்க்கங்கை யாறெங்கள் யாறே;
இங்கிதன் மாண்பிற் கெதிரேது வேறே?'[2]

என்று பாடிய அதே மூச்சில்,

1. பாரதி நூல்கள் (அ. வெளியீடு)—பக். 66
2. ,, —பக். 8

'இன்னல்வந் துற்றிடும் போததற் கஞ்சோம்!
ஏழைய ராகி யினிமண்ணிற் றுஞ்சோம்!
தன்னலம் பேணி யிழிதொழில் புரியோம்!
தாய்த்திரு நாடெனி லினிக்கையை விரியோம்!'[1]

என்று சபதமிடுகிருர்!

பாரதியார் போற்றிய சுதந்தரம் ஒரு நாட்டின் தனியுடைமை அன்று. உலக நாடுகளுக்கெல்லாம் பொதுவுடைமை அது. இந்த உணர்ச்சி பாரதியாரின் இரத்தத்தில் ஊறியது. அதனுலேதான் வாழ்ந்தோர்க்கே கைகட்டி வாழ்த்துரைக்கும் இவ்வுலகில், வீழ்ந்துவிட்ட பெல்ஜியத்தின் சுதந்தர உணர்ச்சியையும் பாடினர் புதுமைக் கவிஞர் பாரதியார்.

'முறத்தினுற் புலியைக் காக்கும்' குறப்பெண் போல, 'உருளுக தலைகள்! ஓங்குக மானம்!' என அந்நிய ஆட்சியை எதிர்த்துப் போரிட்ட பெல்ஜியத்தைப் பாடிய பாரதியார், உள் நாட்டுக் கொடுங் கோன்மையையும் எதிர்த்து ருஷ்ய மக்கள் புரட்சி செய்து கண்ட வெற்றியையும் வீராவேசத்துடன் பாடினர்.

'மாகாளி பராசக்தி உருசியநாட்
டினிற்கடைக்கண் வைத்தா ளங்கே
ஆகாவென் றெழுந்ததுபார் யுகப்புரட்சி;
கொடுங்கோலன் அலறி வீழ்ந்தான்.'[2]

என்று வல்லரசன்—ஜார் மூடன்—ஆட்சியை எதிர்த்துக் குடிமக்கள் செய்த புரட்சியை அறக்கடவுள்

1. பாரதி நூல்கள் (அரசாங்க வெளியீடு) பக். 8
2. ,, ,, பக். 97

பெற்ற அற்புத வெற்றியெனப் பாடிச் சமதர்ம முரசு கொட்டுகிறார்—தமிழினத்தின் தலையாய சர்வ தேசியக் கவிஞர் பாரதியார்.

பாரதியாருக்குச் சுதந்தரம் என்பது வெறி யூட்டும் உணர்ச்சியாய் மட்டுமில்லை; நெறி காட்டும் வாழ்வாயும் விளங்கியது. 'சுதந்தரத்தின் முழுப் பொலிவினையும்' நன்குணர்ந்திருந்தார் பாரதியார். எல்லா விடுதலைகட்கும் வித்து அரசியல் விடுதலையே என்பதை அவர் நன்கு அறிவார். ஆனால், வித்தே மரமாக — அடித்தளமே அரண்மனையாக—இளம் பிறையே முழுமதியாக மாறிவிடாதல்லவா? அர சியல் சுதந்தரம்—பொருளாதாரச் சுதந்தரத்திற்கு —சமுதாயச் சுதந்தரத்திற்கு—கலாசாரச் சுதந்தரத் திற்கு—ஏன்?—ஆன்மிகச் சுதந்தரத்திற்கு வழிகாட்ட வேண்டும் எனக் காந்தியார் போலவே நம்பினார் கவியரசர் பாரதியார். அதனாலேதான் அயல் ஆட்சியை எதிர்த்த ஆவேசத்தில் எள்ளளவும் குன் றாத ஆவேசத்தோடு

'உழவுக்குந் தொழிலுக்கும் வந்தனைசெய்வோம்;—வீணில்
உண்டுகளித் திருப்போரை நிந்தனைசெய்வோம்;
விழலுக்கு நீர்பாய்ச்சி மாயமாட்டோம்—வெறும்
வீணருக் குழைத்துடலம் ஓயமாட்டோம்.'[1]

'இனியொ ருவிதி செய்வோம்;—அதை
எந்த நாளும் காப்போம்;
தனியொ ருவனுக் குணவி லையெனில்
ஜகத்தி னையழித் திடுவோம்!'[2]

1. பாரதி நூல்கள் (அரசாங்க வெளியீடு) பக். 53
2. ,, ,, பக். 29

எனப் பொருளாதாரப் புரட்சி முழக்கமிட்டார், பாட்டாளியாகிய பாரதியார். அதோடு அவர் நிற்க வில்லை. விடுதலை என்பது சமுதாயத்தின் மேல் தளத்தில் இருக்கும் வர்க்கத்தார்க்கு மட்டும் அன்று; சமுதாயத்தின் அடித்தளத்தில் அமுக்குண்டு நசுக் குண்டு சிக்கி இருக்கும் அத்தனை பேரும்—ஆண் குலத்தோடு பெண் குலமும்—சேர்ந்து காணும் சுதந் தரமே உண்மையான விடுதலை என உலகறிய முரசறைந்தார்.

'பறைய ருக்கு மிங்குத் தீயர் புலைய ருக்கும் விடுதலை!
பரவ ரோடு குறவ ருக்கும் மறவ ருக்கும் விடுதலை!

* * *

'ஏழை யென்றும் அடிமை யென்றும் எவனு மில்லை; ஜாதியில்
இழிவு கொண்ட மனித ரென்ப திந்தி யாவில் இல்லையே!

* * *

'மாதர் தம்மை யிழிவு செய்யு
மடமை யைக்கொ ளுத்துவோம்!'[1]

என்று சமுதாயப் புரட்சிப் பண்ணிசைத்தார் பாரதியார். அவ்வாறே,

'வேறு வேறு பாஷைகள்—கற்பாய்நீ
வீட்டு வார்த்தை கற்கிலாய் போபோபோ!'[2]

என்று கலாசாரச் சுதந்தரத்திற்கும் கால்கோள் விழாச் செய்தார் கவியரசர் பாரதியார்.

பாரதியாரின் இந்தச் சுதந்தர ஆவேசம் அர சியல் விடுதலையை—பொருளாதார விடுதலையை—

1. பாரதி நூல்கள் (அ. வெ.) பக். 51-2
2. ,, ,, பக். 27

சமுதாய விடுதலையை—கலாசார விடுதலையை விரும்பியது போன்றே ஆன்ம விடுதலையிலும் பெருங் காதல் கொண்டது. 'விட்டு விடுதலையாகி நிற்பாய் இந்தச் சிட்டுக் குருவியைப் போல,' என்று பாடிய பாரதியாருக்கு 'உலகெலாம் ஒன்ருகக் காண்பதே காட்சி,' என்ற அந்த மெய்ஞ்ஞானக் காட்சியிலே—ஆன்ம விடுதலையிலேதான்—எவ்வளவு ஆனந்தம்!

'காக்கை, குருவி யெங்கள் ஜாதி; நீள்
கடலு மலையு மெங்கள் கூட்டம்;
நோக்குந் திசையெலாம் நாமன்றி வேறில்லை!
நோக்கநோக் கக்களி யாட்டம்!'[1]

என்று இன்பக் குரவையாடுகிருர் ஞானக் கவிஞர் பாரதியார்.

இவ்வாறு தனி மனிதனுக்கும் சமுதாயத்திற்கும் உயிரளிக்கும் சுதந்தர உணர்ச்சியின் ஒளி ஒரொரு கால் மங்கிப்போக, முக்கிய காரணங்கள் இரண்டேயாகும். ஒன்று, அச்சம்; மற்ருென்று, அறியாமை. அச்சமும் அறியாமையும் ஒழிந்தாலன்றி எந்த விடுதலையையும் எய்த முடியாது என்பதைப் பாரதியார் நன்கறிவார். அதனுலேதான்,

'பாதகஞ் செய்பவரைக் கண்டால்—நாம்
பயங்கொள்ள லாகாது பாப்பா!
மோதி மிதித்துவிடு பாப்பா!—அவர்
முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா!'[2]

என்று பச்சிளங்குழந்தைக்கும் 'அச்சம்' கூடாதென்று அழுத்தம் திருத்தமாக உபதேசிக்கிருர்.

---

1. பாரதி நூல்கள் (அ. வெ.) பக். 219
2 பக். 250

அன்புத் தெய்வத்திற்கு — அழகுக் குழந்தைக்குச் — சொல்லியது போலவே 'பண்டாரப் பாட்டு' வாயிலாக அறிவு படைத்த மக்கள் அத்தனை பேருக்கும்,

'உச்சி மீது வானி டிந்து
  வீழு கின்ற போதினும்
அச்ச மில்லை யச்ச மில்லை
  அச்ச மென்ப தில்லையே!'[1]

என்று கூறி அச்சத்தைத் துச்சமெனக் கருதித் தூக்கி எறியும்படி ஆண்மைக் குரல் கொடுத்து,

'பயமெனும் பேய்தனை யடித்தோம்—பொய்ம்மைப்
  பாம்பைப் பிளந்துயிரைக் குடித்தோம்.'[2]

* * *

என்று 'ஜயபேரிகை' கொட்டுகிறார்.

அச்சத்தைப் போலவே அறியாமையும் ஒழியப் பாரதியார் காட்டும் பாதை மிகத் தெளிவானது. இந்திய மக்களின் அடிமைப்புத்திக்கு ஆங்கிலக் கல்வியே அடிப்படைக் காரணம் என்பது பாரதியாரின் அசைக்க முடியாத நம்பிக்கை. அவர் தம் ஆசையை—ஆழ்ந்த கருத்தை — உரைநடையில் கூறுவதைக் கேளுங்கள்:

'பாரத தேசம் விடுதலை பெற வேண்டுமாயின், அதற்குத் தேசியக் கல்வியே ஆதாரம்.......பெரும்பான்மைக் கல்வி இங்கிலீஷ் மூலமாகவும், தமிழ் ஒரு வித உபபாஷையாகவும் ஏற்படுத்தினால், அது 'தேசியம்' என்ற பதத்தின் பொருளுக்கு முழுதும் விரோதமாய் முடியும்,' என்கிறார் பாரதியார்.

1, 2. பாரதி நூல்கள் (அரசாங்க வெளியீடு) பக். 218

மேலும், 'தமிழா! பயப்படாதே! ஊர்தோறும் தமிழ்ப் பள்ளிக்கூடங்கள் போட்டு ஐரோப்பிய சாஸ்திரங்களை எல்லாம் தமிழில் கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்,' எனத் தமிழருக்குக் கட்டளை இடுகின்றார் அம்மகா கவிஞர். எதிர்கால இந்தியாவில் உண்மையான தேசியக்கல்வி உரம் பெற மொழிவழி ஆட்சியே மார்க்கமென எவ்வளவு தெளிவாகக் குறிப்பிடுகிறார் பாருங்கள்!

'பள்ளிக்கூடம் ஏற்படுத்தப் போகிற கிராமம் எந்த மாகாணத்திலிருக்கிறதோ, அந்த மாகாணத்தின் சரித்திரம் விசேஷமாய்ப் பயிற்றுவிக்கப்பட வேண்டும். இங்கு நான் மாகாணம் என வகுத்திருப்பது ............ சென்னை மாகாணம் முதலிய தற்காலப் பகுதிகளைக் குறிப்பதன்று. பாஷைப் பிரிவுகளுக்கிசைந்தவாறு வகுக்கப்படும் தமிழ்நாடு, தெலுங்கு நாடு, மலையாளநாடு முதலிய இயற்கைப் பகுதிகளைக் குறிப்பது.'

வருங்கால பாரத சமுதாயத்தின் சுதந்தர உணர்ச்சியை அழியாது காக்கவல்ல அரண், தாய்மொழிப்பற்றும் கலாசார சுதந்தரமுமே என்பதில் பாரதியாருக்குள்ள பற்றையும் பத்தியையும் பார்த்தீர்களா! ஆம். பாரதியாருக்கு மொழிவழி ஆட்சி 'குறுகிய புத்தியன்று'; உன்னதக் கொள்கையின் உயர்வான திட்டம்.

ஆங்கில அடிமைக் கல்வி ஒழியத் தேசியக் கல்வி ஒன்றே வழி. அக்கல்வியும், தாய்ப்பாலுக்கு நிகரான தாய்மொழியிலேயே தரப்பட வேண்டும்.

அக்கல்வியும் உரம் பெற்றுப் பயன் காணத் தற்கால மாகாண அமைப்புக்கள் தொலைந்து, மொழி வழி ஆட்சி உதயமாக வேண்டுமெனப் பாரதியார், உறுதியாக நம்பினார்.[1] இவ்வுண்மையை அவர் கவிதைகளையும் கட்டுரைகளையும் ஊன்றிப் படிக்கும் கண் படைத்தோர்—கருத்துடையோர்—உணர்வது திண்ணம்.

ஆங்கில உணர்வால் அச்சமும், அறிவான தேசீயக் கல்வியால் மடமையும் ஒழிந்த சுதந்தர பாரதத்தை—சுதந்தரத் தமிழகத்தைக்—காணத் துடிதுடித்தன பாரதியாரின் கண்கள்; போற்ற நினைத்தது அப்பெருமகனாரின் கற்பனை நெஞ்சம். தம் கண்ணால் காணக் கொடுத்து வைக்காத சுதந்தரத்தைப் பாரதியார் தம் கற்பனைக் கண்களால் கண்டார்; ஆனந்தப் பள்ளுப் பாடினார்.

எதிர்கால இந்தியாவின் சுதந்தரக் கொடியை இனவாரி இந்திய மக்கள் அணி அணியாய் நின்று காக்கும் அற்புதக் காட்சியைக் கற்பனைக் கண்களால் கண்டு, காதல் நெஞ்சத்தால் கைகூப்பி வணங்கி,

'—அவர்
சிந்தையின் வீரம் நிரந்தரம் வாழ்க!'[2]

என வாயார வாழ்த்தினார்.

பாரதியாரின் நாட்டுப் பாடல்கள் கடந்த காலத்தில் இந்தியாவின் இன்பத் தமிழகத்தின் சுதந்தரப்

1. பாரதி கட்டுரைகள் (பாரதி பிரசுராலயம்) பக். 48-9
2. ,, ,, பக். 24

போருக்கு எண்ணற்ற மக்களைத் தட்டி எழுப்பியது. சென்ற காலத்தில்—சுதந்தரப் போருக்குத் தேச மக்களைக் கூவி அழைத்த அம்மகா கவிஞரின் பாடல்கள் — வருங்காலத்தில் போரிட்டுப் பெற்ற அச்சுதந்தரத்தைப் போற்றிப் பாதுகாக்கவும் ஒளி காட்டும் கலங்கரை விளக்கமாய்ப் பயன்படும் என்பது உறுதி.

# 4

# நற்றிணையில் நாடகப் பண்பு

'உலகமே ஒரு நாடகமேடை; ஆடவர் மகளிர் அனைவரும் அதில் நடிக்கும் நடிகர்களே,' என்றார் உலக நாடகப் பெருங்கவிஞர்களுள் ஒருவராகிய **ஷேக்ஸ்பியர்.** ஆம். உலகமே ஒரு பெரிய நாடக மேடைதான். அதிலும், உலக வாழ்க்கையே ஒரு பெரிய நாடகந்தான். நாம் அனைவரும் அதில் பங்கு கொள்ளும் நடிகர்களே. 'வாழ்க்கை நாடக'த்தை வரைந்து, உலகமாம் மேடை அமைத்து, அதில் ஆடிப்பாடும் நடிகர்களாக நம்மைஎல்லாம் நிறுத்தி ஆட்டிப்படைக்கும் அந்த நாடகப் புலவன் யார்? 'அலகிலா விளையாட்டுடைய' ஆண்டவனாகத்தான் இருக்க வேண்டும்.

'வையக வாழ்க்கையே ஒரு நாடகம்,' என்பதைக் கண்டபின் அந்த வாழ்க்கையின் ஆராய்ச்சியாக—சொற்சித்திரமாக—விளங்கும் கவிதைகளும் காவியங்களும் நாடகச்சுவையும் பண்பும் நிறைந்து விளங்குவதில் வியப்பும் உண்டோ? இந்த உண்மையை மனத்தில் நிறுத்திக்கொண்டு சங்க இலக்கியப் பாடல்களை — சிறப்பாக அகப்பொருள் சுவை அமைந்த தீந்தமிழ்ப் பாடல்களை — அனுபவிக்க முற்படுவார் மனக்கண்களில் அப் பாடல்களின் அகத்தே மறைந்து கிடக்கும் நாடகப் பண்புகள் புலனாவது திண்ணம்.

பத்துப்பாட்டும், எட்டுத் தொகையும் தலை சிறந்த சங்க இலக்கிய நூல்கள் என்று மகிழ்வுடன் போற்றுவர் தமிழ்ப் புலவர். அத்தொகை நூல்களுள் பல அகப்பொருட்சுவையையே அள்ளி வழங்கும் சிறப்புடையன. எட்டுத்தொகை நூல்கள் இவை என்பதை ஒரு பழம்பாடல்,

'நற்றிணை நல்ல குறுந்தொகை ஐங்குறுநூறு
ஒத்த பதிற்றுப்பத்து ஓங்கு பரிபாடல்
கற்றறிந்தார் ஏத்தும் கலியே அகம்புறமென்று
இத்திறத்த எட்டுத் தொகை.'

என்று கூறுகின்றது. எட்டுத்தொகையுள் முதற் கண் வைத்து எண்ணப்பட்டுள்ள பெருமையாலும் வேறு பல சிறப்புக்களாலும் சங்க நூல்களுள் ளேயே தலைசிறந்த ஓர் இடம் தந்து நற்றிணையைப் போற்றுவர் சொற்றிறம் அறிந்த செந்தமிழ்ப் புலவர்.

நானூறு பாடல்களை — காதற்சுவையைக் கவினுற வழங்கும் செய்யுட்களைத்—தன் அகத்தே கொண்ட நற்றிணை முற்றும் நாடகப் பண்பு அமைந்தது என்று போற்றுவது குற்றம் ஆகாது.

நாடகாசிரியன் ஒருவன் தன் கருத்துகள்— உணர்வுகள்–கற்பனைகள்–வாழ்க்கை அனுபவங்கள் அத்தனையையுமே தான் படைக்கும் நாடகப் பாத்தி ரங்கள் வாயிலாகவே பேச வைக்கிறான். நற்றிணை பாடிய புலவர்களும் அவ்வாறே தாங்கள் கண்ட இயற்கைக் காட்சிகளின் இனிமை, உணர்ந்த 'உணர்வுகளின் அருமை, கண்ட கற்பனைக் கனவு

களின் பெருமை, தெளிந்த வாழ்க்கைக் கூறுபாடு களின் உண்மை ஆகிய இவை அனைத்தையுமே சங்க காலக் காதல் நாடகத்தின் இன்றியமையாப் பாத்திரங்களாகிய தலைவன், தோழி, தலைவி, தாய், பரத்தை போன்ற பாத்திரங்கள் வாயிலாகவே உலகுக்குத் தெரிவிக்கிறார்கள். நாடகத்தில் எவ்வாறு அதைப் படைக்கும் கலைஞன் மறைந்து கரைந்து போய்விடுகிறானோ, அவ்வாறே நற்றிணைப் பாடல்களிலும் அவற்றைப் பாடிய பாவாணர்கள் தாங்கள் படைக்கும் பாத்திரங்களில் தங்களை மறைத்துக் கரைத்துக்கொள்கிறார்கள். இஃது ஒன்றே அப் பாடல்களைத் தலைசிறந்த நாடகப் பண்பு அமைந்த கவிதைகளாக நமக்குக் காட்டப் பெருந்துணை புரிகின்றது.

நற்றிணைப் பாடல்களின் நாடகப் பண்பின் சிறப்பினை வேறொரு வகையாகவும் உணர்ந்து போற்ற நாம் கடமைப்பட்டுள்ளோம். நற்றிணைப் பாடல்களுள் பல, ஒருவர் மற்றொருவருடன் பேசும் பேச்சாகவே அமைந்துள்ளன. இவ்வாறு அமைந்துள்ள பாடல்களிலும் பாத்திரங்கள் தங்கள் மனப் போராட்டங்களை வெளிப்படுத்தும் தனிமொழிகளிலும் அந்தச் சந்தர்ப்பத்திற்குரிய செய்திகளும் நிகழ்ச்சிகளுமே அன்றி, அந்தச் சந்தர்ப்பத்திற்கு வித்தாய் இருந்த சென்ற கால நிகழ்ச்சிகள் பலவற்றையும் நம் மனக் கண்முன் நாடகமாக்கிக் காட்டும் பண்புகளைக் காணலாம்.

பாட்டு ஒரு நுட்பமான கலை. அதில் வல்லவனாகிய பாவலனுக்குச் சொல் ஒன்றுதான் துணை.

அதை வைத்துக்கொண்டுதான் அவன் வாழ்க்கை நாடகத்தை—ஏன், வாழ்க்கைக்கும் எட்டாத தத்துவ நாடகங்களை எல்லாம்—நடத்திக் காட்ட வேண்டும். மேடையோ, ஒளி விளக்குகளோ இல்லாமல், திரைச் சீலை ஏதும் இல்லாமல், நம் சிந்தனையையே அரங்காக்கி, உணர்வையே ஒளி விளக்காக்கி, நினைவையே திரையாக்கி, வாழ்க்கை நாடகத்தைக் கவிஞன் நடத்திக் காட்டுகிறான் என்றால், அது செயற்கருஞ் செயல் அன்றோ? அத்தகைய செயற்கருஞ்செயல் செய்யும் பெரியோர் பலரின் பாடல்களின் தொகுப்பே நற்றிணை.

நற்றிணையில் வரும் ஒவ்வொரு பாடலும் ஒரு தனி வித நாடகந்தான். தம் அளவில் சிறு சிறு நாடகங்களைக் காட்டுவதோடு அவை நில்லாமல், தம் வாயிலாகத் தம்மினும் பெரிய பெரிய வாழ்க்கைப் பகுதிகளை நாடகமாகக் காண—நம் கற்பனையின் திறனுக்கு ஏற்பக்கண்டு களிக்க—வழிகாட்டும் மந்திரச் சாளரங்களாயும் அமைந்துள்ளன.

ஆம். நாம் நற்றிணை உலகில் நுழைந்ததும் புலவனது சொல் என்ற மந்திரக்கோல் நம்மீது படும். அவ்வளவுதான்! நாம் நம்மை மறப்போம்! இந்த உலகை—இந்த நூற்றாண்டை—மறப்போம்! ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்த இன்பத் தமிழகத்திற்குச் சென்றுவிடுவோம்! அக்கால மக்கள், அக்கால அரசியல், அக்கால வாணிபம், அக்காலக் காதல் வாழ்க்கை, அக்காலக் கடவுள் நெறி, அனைத்தையும் கண்டு மெய்ம்மறந்து இருப்போம்! அக்கால

வாழ்க்கையாகிய நாடகத்தில் ஓங்கி உயர்ந்த மலைகள், பாய்ந்து வரும் அருவிகள், பயங்கர இருட்டிலே காதல் கொண்ட தலைவன் நடந்து வரும் கடினமான பாதை, அவன் வரும் வழியில் இருக்கும் பாம்பையும் புலியையும் எண்ணி நடுங்கும் தலைவியின் அன்பு நெஞ்சம், காதலரின் காதலைக் கண்டு ஊரார் தூற்றும் அலர், 'உயிரினும் சிறந்தது நாணம்; அதனினும் சிறந்தது கற்பு,' என்று தலைவி 'அகலிடத்தார் ஆசாரத்தை' மறந்து தலைவனுடன் ஊரை விட்டுப் புறப்பட்டுச் செல்லும் காட்சி, கடுமையும் கண்டிப்புமாய் இருந்த தாய் அஃதறிந்து கலங்கும் கலக்கம், அவள் கலக்கம் தீரப் பின்னர் நடைபெறும் தமிழ்த் திருமணம்—இப்படிஎத்தனையோ வாழ்க்கை நாடகக் காட்சிகளை—வண்ணம் நிறைந்த இயற்கைக் காட்சிகளைப் பின்னணியாகக் கொண்ட காட்சிகளைக்—கண்டு 'மூக்கின் உச்சியிலே சுட்டுவிரல்' வைத்து வியப்பிலும் மகிழ்விலும் ஆழ்ந்திருப்போம்.

இவ்வுண்மைகளை இப்போது சில நற்றிணைப் பாடல்கள் வாயிலாகச் சுவைத்து இன்புறுவோம்:

1

நானூறு பாடல்களைக் கொண்ட நற்றிணைக்குப் பாரதம் பாடிய பெருந்தேவனார் அருமையான கடவுள் வாழ்த்து ஒன்று பாடியுள்ளார். காதல் வாழ்க்கையின் பல்வேறு காட்சிகளை நாடகப் பண்போடு படம் பிடித்துக் காட்டும் நற்றிணைக்குக் கடவுள் வாழ்த்தாக அமைந்துள்ள அப்பாடல், கடவுள் தத்துவத்தை—விசுவரூப நாடகத்தை — விளக்கிக் காட்டுகிறது.

அண்ட பகிரண்டங்களை எல்லாம் தன்னுள் அடக்கிக்கொண்டு 'யாதுமாகி' ஓங்கி உயர்ந்து ஆழ்ந்து அகன்று நுண்ணியதாய் நிற்கும் பரம்பொருள் காட்சியையே 'விசுவரூப தரிசனம்' என்பர் மேலோர். ஆரியப் போரில் அருச்சுனன் கண்ட இக்காட்சியை அருந்தமிழ்ப் புலவராகிய பெருந்தேவனாரும் காண்கிறார்; கண்டு களிப்போடு நமக்கும் காட்டுகிறார்.

* * *

கடலையும் தாங்கி நிற்கும் தரை; பரந்த பார் நிலம்; இதுவே எல்லாமாய் நிற்கும் பெரும்பொருளின் அடிநிலை; செவ்விய திருவடி. கண்ணிற்கு எட்டியும் எட்டாமலும் விளங்கும் இப்பெருநிலமே 'முழுமுதற்பொருளி'ன் மலரடியென்றால், அப்பெரும்பரம்பொருள் உடுத்துக்கொள்ளும் ஆடையாய் விளங்குகிறது அலை மோதும் பெருங்கடல். 'எறிதரங்கம் உடுக்கும் புவனங்கடந்த' ஒருவன் அல்லனோ இறைவன்! அவனைப்போலவே அவனுடையும் அளவற்று எங்கும் விரிந்து கிடக்கிறது— பவ்வம் எனப்படும் பரந்த கடல். காட்சிக்கு அடங்காததாய் கருணையே உருக்கொண்டதாய் வானமழைக்கும் மூலமாய் விளங்கும் கடலினும் சிறந்த ஆடை கடவுளுக்கு உண்டோ? ஒல்லெனும் பேரொலியால் அக்கடல் அவன் பெருமையை ஓயாமல் முழங்கிய வண்ணம் இருக்கிறது. கடல் வாழ் சங்கின் ஒலியிலும் அவன் புகழே கேட்கிறது. இவ்வாறு கடலில் வாழும் கணக்கற்ற சங்கொலிகள் புகழ் பாட விளங்கும் பரம்பொருளின் திருமேனி.

'அகல் விசும்'பேயாகும். நீலவானமே அவன் கோலத் திருமேனி. எட்டுத் திசைகளாய்ப் பரந்து விரிந்து செறிந்து கிடக்கின்றன அவன் கைத்திறங்கள். ஆம். எட்டுத் திசையும் எட்டுக் கரங்களாய், எண்டோள் வீசி நின்றாடும் விசுவரூபக் கூத்துடையான் கடவுள். திசைகள் கைகளாகும் காட்சி கருத்துக்கும் எட்டாக் காட்சிதான். ஆயினும், விஞ்ஞானத் துறைகள் பலவும் கூறும் கருத்தின் ஒருமைக் காட்சியை—கற்றரையாய், கருங்கடலாய், கருவானமாய் விளங்கும் தன் திருக்காட்சியை—இறைவன் நமக்கெல்லாம் காட்டி உய்விக்க வேண்டாவோ? அதற்கு உறுதுணையாய் விளங்கும் இரு பெருஞ்சுடர்கள் சூரியனும் சந்திரனும். அவையே அவன் இரு கண்கள். தன் கண்களின் ஒளியால் உலக உயிர்களின் கண்கள் அனைத்திற்கும் ஒளியூட்டுகிறான் அப்பரம்பொருள். கண்களாய் நிற்கும் சுடரும் திங்களுமே காலத்தைக்காட்டும் உலகப் பெருங்கடிகாரங்கள். எனவே, காலதத்துவமாயும் அதற்கு அப்பாற்பட்டும் விளங்குகிறான் கடவுள். இவ்வாறு இடமும் காலமுமாக 'இயன்று வரும் பொருள்களோடு எல்லாம் பயின்று' நிற்கின்றான் ஈசன். உலகை எல்லாம்—உயிர்க் கூட்டத்தை எல்லாம்—ஒழுங்குபட இயக்கும் பரம்பொருள் அறிவிலாப் பொருளாய் இருத்தல் இயலாது; சிற்றறிவுடைய பொருளாகவும் இருத்தல் இயலாது; பேரறிவுடைய பொருளாதல் வேண்டும். அனைத்து உணர்வையும் ஆட்டுவிக்கும் உணர்வின் கொடுமுடியாய்த் திகழும் அவன், 'ஐயா!' என அரற்றி முழங்கும்

வேதங்களின் முதல்வனுகவும் இருத்தலில் வியப் பில்லை அன்ரே?

மேலும், தனி முடி கவித்து நாடாளும் மன்ன னிலும் அண்ட பகிரண்டம் அத்தனையும் ஆளும் ஈசனுகிய இறைவன், உலக உயிர்கட்கு எல்லாம் இனியனுய்—பேரின்பத்தையே நல்லாட்சியாய் வழங்குவோனுய்—அத்திறத்திற்கு ஏற்பத் தட்டின்றி உருளும் தீதிலா ஆஞ்ஞா சக்கரத்தைக் கொண்டோ னுய்த் திகழ்கிருன்.

இவ்வுண்மைகளை எல்லாம் புலப்படுத்தும் வகையில் மண்ணுய், விண்ணுய், திசையாய், திங் களாய், இயன்றன எல்லாம் பயின்ற பொருளாய், வேதமுதலுமாய் விசுவரூபம் கொண்ட இறைவன் அளிக்கும் திருக்காட்சியைச் சொல்நயமும் பொருள் நயமும் பொருந்தப் பெருந்தேவனுர் பாடுகின்ருர்.

'மாநிலம் சேவடி ஆக, தூநீர்
வளைநரல் பவ்வம் உடுக்கை ஆக,
விசும்புமெய் ஆக, திசைகை ஆக,
பசுங்கதிர் மதியமொடு சுடர்கண் ஆக,
இயன்ற எல்லாம் பயின்றுஅகத்து அடக்கிய
வேத முதல்வன் என்ப
தீதற விளங்கிய திகிரி யோனே.'[1]

ஆராய்ச்சித் திறங்கொண்ட அருந்தமிழ்ப் புலவர்க்கு இறைவனது விசுவரூபக் காட்சியை—நாடகத்தை—விளக்கும் அமிழ்தமன்ரே இப்பாடல்!

1. நற்றிணை—கடவுள் வாழ்த்து

## 2

இனி, காதல் உலகில் வரும் நாடகப் பண்பமைந்த ஓர் இனிய காட்சியைக் காண்போம்: பல ஆண்டுகளுக்கு முன் சிறுமியர் சிலர் கூடி மணலில் விளையாடிக்கொண்டிருந்தனர்; புன்னைக் கொட்டைகளை வைத்து விளையாடினர். மணலில் புன்னைக்கொட்டைகளை மறைத்து மறைத்து விளையாடிக்கொண்டிருந்த அவருள் ஒருத்தி, ஒரு கொட்டையை அப்படியே மணலில் மறந்து விட்டு விட்டாள். அந்தக்கொட்டை அங்கேயே அழுந்திச் சில நாள் கிடந்தது. நாளடைவில் அப்புன்னைக் கொட்டை முளைத்துப் புன்னைச்செடியாய் வளர்ந்தது. அக்கொட்டையை அங்கே மறந்து விட்டுவிட்ட சிறுமியும் நாளடைவில் பெரியவளாகிவிட்டாள். அவள் மனம் விளையாட்டு மனமாய் இருந்த நிலை மாறிக் காதல் கனிந்த நெஞ்சமாய்த் தாயன்பு தழைத்த உள்ளமாய் மலர்ச்சி பெற்றது. அச்சிறுமி சிறு செடியாய் வளர்ந்திருந்த அச்செடியைத் தன்னைத் தன் தாய் வளர்த்த முறையிலேயே தேனும் பாலும் ஊட்டி வளர்த்தாள். பல ஆண்டுகள் உருண்டு சென்றன. செடி மரமாயிற்று. சிறுமிக்குத் திருமணம் ஆகி இல்வாழ்க்கை அமைந்தது; குழந்தைச் செல்வமும் வாய்த்தது. பெண் குழந்தை ஒன்று அவள் அருமை மனைக்குப் பெருமையாய் விளங்கிற்று. அந்தக் குழந்தையும் வளர்ந்து சிறு பெண் ஆனது. அக்குழந்தை ‘சுமந்து பெற்ற’ குழந்தையாயினும், உணர்வு மயமான அந்தத் தாய்க்குப் புன்னையே முதற்குழந்தை; அப்பெண் குழந்தை இரண்டாம் குழந்தையே.

இதை அந்தத் தாயே ஒரு நாள் சொல்லிவிட்டாள். ஒருநாள் தன் பெண் தேனும் பாலும் பருகாமல் அழுது தொல்லை தந்தாள். அப்போது அன்பான அந்தத்தாய், 'அம்மா, நீ இப்படிப் பாலும் தேனும் பருகாமல் அழுகின்றாயே! உன்னால் எவ்வளவு தொல்லை எனக்கு? உன் அக்காள் ஒரு நாளும் அப்படிச் செய்ததில்லையே!' என்று சொன்னாள்.

'யாரம்மா என் அக்காள்?' என்றாள் மகள். 'இதோ! இந்தப் புன்னை மரந்தான், நான் முதலில் வளர்த்த குழந்தை. நாளும் என் கையால் தேனும் பாலும் தேம்பாமல் சிணுங்காமல் உண்டு வளர்ந்த குழந்தை இது. ஒரு நாளும் ஒரு தொல்லையும் தாராது. நீதான் இப்படிச் செய்கிறாய்,' என்றாள் தாய்.

மகளின் பிஞ்சு மனத்தில் இச்செய்தி பதிந்து ஆண்டுகள் பலவாயின. அவள் அறிவும் வளர்ந்தது; உணர்வும் முதிர்ந்தது. அவள் வயது அடைந்தாள்; வாழ்க்கையைத் தொடங்கினாள்.

ஒரு நாள் அவள் தன் காதலனோடு அந்தப் புன்னை மரநிழலிலே இருந்து பேசிக்கொண்டிருந்தாள். பேச்சில் விளையாட்டும் நகைச்சுவையும் பெருகிவிட்டன. கலகலத்த பேச்சுத் திடீரென நின்றது; தலைவியின்—காதலியின்—உள்ளத்தில் ஒரு புத்துணர்ச்சி பிறந்தது; அதனாலேயே தடைநிகழ்ந்தது. காரணம் வேறொன்றுமன்று; புன்னை மரநிழலில் இருந்த அவள் நினைவு அம்மரத்தின்மேல்

சென்றது. புன்னை மரம் தமக்கை—தான் தங்கை—இந்த நினைவு 'பளிச்'சிட்டது அவள் மனத்தில்; நாணினள்; 'என்ன செய்தோம் தமக்கையின் முன்னே!' என்று கூசினள். இதோ இந்தக் 'காதல் நாடகத்தை'—உணர்வால் வளர்ந்த உறவு சங்ககாலத் தமிழ்ப்பெண்ணின் வாழ்க்கையில் பெற்றிருந்த நிலையைக்—காட்டும் சிறு நாடகம்:

'விளையாடு ஆயமொடு வெண்மணல் அழுத்தி
மறந்தனம் துறந்த காழ்முளை அகைய
நெய்பெய் தீம்பால் பெய்துஇனிது வளர்ப்ப,
'நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகும்' என்று
அன்னை கூறினள் புன்னையது சிறப்பே!
அம்ம! நாணுதும் நும்மொடு நகையே!'[1]

## 3

பெற்றதாய் பேசும் பேச்சாய் அமைந்துள்ள இன்னொரு நாடகத்தையும் காண்போம்: ஒரு வீட்டின் முற்றத்தில் பசலைக்கொடி அழகாய்ப் படர்ந்து இருந்தது. அக்கொடியின் பக்கத்தில் உட்கார்ந்து அந்த வீட்டுப் பெண்—சிறுபெண்—விளையாடுவது வழக்கமாய் இருந்தது. அவள் பந்தையும் பொம்மையையும் கொண்டு விளையாடி வந்தாள். அந்த வீட்டுப் பசு, கன்று ஈன்றது. ஒரு நாள் அதன் பார்வை அந்தச் செழுமையான பசலைக் கொடியின்மேல் சென்றது. அஃது எப்படியோ அங்கு வந்து அதைக் கறிக்கத் தொடங்கியது. அக்காட்சியைக் கண்டதும் திடுக்கிட்டு எழுந்

1. நற்றிணை, 172.

தாள் அப்பெண். கையிலிருந்த பந்தை எறிந்துவிட்டுப் பொம்மையையும் போட்டுவிட்டு ஓடி வந்துவிட்டாள். ஆம்; 'பாப்பா' என்றும் 'குழந்தை' என்றும் போற்றி வந்த பொம்மையையும் விட்டுவிட்டு வந்த அவளால் அருமைப் பசலைக் கொடியைப் பசு மேய்வதைக் கண்டு சகிக்க முடியவில்லை. அலறி வயிற்றில் அடித்துக்கொண்டாள். அலறல் கேட்ட தாய் ஓடி வந்து அவள் துன்பம் தீர்த்தாள்.

பல ஆண்டுகட்கு முன் நடந்த நிகழ்ச்சி இது. 'நம் மகள் அறியாக் குழந்தை,' என்று அச்சமயத்தில் தாய்க்கு ஏற்பட்ட எண்ணம் இறுதி வரை நீங்கவே இல்லை.

பல ஆண்டுகட்குப் பின்—செவிலித்தாயால் ஊட்டி வளர்த்த உரம் எல்லாம் பெற்று வளர்ந்த அவள்—சிறிது வற்புறுத்தித் தேனும் பாலும் ஊட்டினும் மான் போன்ற பார்வையில் வருத்தம் காட்டி அழுது செல்லமாய் வளர்ந்த அவள்—ஒருவன் உள்ளம் கவர்ந்த கள்வியாய்–காதலியாய் மாறிவிட்டாள். காதல் முற்றியது. அவள் ஒரு நாள் நள்ளிரவில் காதலனோடு வெளியூர்க்குச் சென்றுவிட்டாள்.

பொழுது புலர்ந்தது; மகளைக் காணாது, செவிலித் தாய், தந்தை, சகோதரர் அனைவரும் தேடினர்; கண்ணுக்குப் புலனாகவில்லை. அவர்கள் காதுக்கு மட்டும் ஒரு செய்தி வந்தது. காதலி சென்ற காட்டு வழியே வந்தவர்கள் கொண்டு வந்த செய்தி அது. 'உங்கள் வீட்டுப்பெண் ஒரு கட்டிளங்காளையோடு மகிழ்ச்சியுடன் போய்க்கொண்டிருக்கிறாள்,' என்ற

இச்செய்தி, 'என்ன ஆயிற்றோ !' எனக் கவலையுற்றிருந்தவர்கட்கு ஏதோ ஒரு சிறு ஆறுதல் தந்தது. எனினும், தாயின் 'பெற்ற மனம்' ஆறுமா? அவள் பேசினாள்: 'அவன் உண்மையான காதலனாய் இருக்கலாம்; ஆனால், செல்வமாய் வளர்ந்த என் மகளைக் காப்பாற்றக் கூடிய வளம் படைத்தவனா? ஒருக்கால் பல பொய் சொல்லி ஏமாற்றிவிட்டானோ! அப்பொய்களை அவளும் நம்பியிருப்பாள். அவளுக்குத்தான் ஒன்றுமே தெரியாதே! பசலைக் கொடியைப் பசு மேய வந்த போது அலறி ஓடி வந்தவள் அல்லளா? எப்படிக் கொடிய வழியில் மகிழ்ச்சியோடு போகத் துணிந்தாள்!' என இவ்வாறு எண்ணிக் கலங்கினாள், 'பெற்ற மனம் பித்தான' தாய். இஃது அந்நிகழ்ச்சியை—வாழ்க்கை நாடகத்தைக்—காட்டும் பாடல்:

'இல்லெழு வயலை ஈற்றா தின்றெனப்
பந்துநிலத் தெறிந்து பாவை நீக்கி
அவ்வயிறு அலைத்தஎன் செய்வினைக் குறுமகள்
மான்அமர்ப்பு அன்ன மையல் நோக்கமொடு
யானும் தாயும் மடுப்பத் தேனொடு
தீம்பால் உண்ணாள் வீங்குவனள் விம்மி
நெருநலும் அனையள் மன்னே; இன்றே
மையணற் காளை பொய்புகல் ஆக
அருஞ்சுரம் இறந்தனள் என்பதன்
முருந்தேர் வெண்பல் முகிழ்நகை திறந்தே.'[1]

ஆங்கில இலக்கிய ஆராய்ச்சியில் தலைசிறந்த வல்லுநர்களுள் ஒருவர் அறிஞர் ஹட்ஸன் என்பவர்.

1. நற்றிணை, 179

அவர் தாம் எழுதிய இலக்கிய ஆராய்ச்சியைப்பற்றிய நூலில் நாடகப் பண்பமைந்த கவிதைகளைப் பற்றிச் சுருக்கமாகவும் தெளிவாகவும் பேசியுள்ளார்.[1] நாடகப் பண்பமைந்த கவிதைகளை முக்கியமாக மூன்று வகைகளாகப் பாகுபாடு செய்யலாம் என்பது அவர் கருத்து. நாடக இசைப்பாடல், நாடகக் கதை, நாடகத் தனிமொழி (Dramatic lyric, Dramatic story, Dramatic monologue) என்று அவற்றைக் குறிப்பிடுவர். இம்மூவகையுள்ளும் 'நாடகத் தனிமொழி' என்ற வகையுள் நற்றிணை உள்ளிட்ட சங்க இலக்கியப் பாடல்களை அடக்குவர் ஆங்கிலமும் தமிழும் வல்ல இலக்கிய ஆராய்ச்சியாளர். இந்த நாடகத் தனி மொழி வகையினைப் பற்றிக் குறிப்பிடும்போது மேல்நாட்டு இலக்கிய ஆராய்ச்சி அறிஞர்கள், 'முக்கியமாக நாடகத் தனிமொழிப் பாடல்கள் பாத்திரங்களின் பண்பையும் பல்வேறு மனநிலைகளையும், ஆன்மிக உணர்வுப் போராட்டங்களையும் ஆராய்ந்து கூறும் பண்புடையனவாகவே விளங்குகின்றன,' என்று கூறுவார்கள்; மேலும், அத்தகைய நாடகத் தனி மொழிகளின் முக்கியக் குறிக்கோள் பாத்திரங்களின் உள்ளத்துணர்ச்சியை உள்ளபடியே உணர்வோடும் உண்மையோடும் பாத்திரங்கள் வாயிலாகவே சொற்சித்திரமாக்கிக் காட்டுவதே கவிஞனது கலை என்றும் விளக்குவார்கள். இந்நூற்றாண்டில் மேல் நாட்டில் வளர்ந்து வரும் இத்தகைய இலக்கிய ஆராய்ச்சி

1. An Introduction to the Study of Literature–W.H. Hudson —P. 111—4

முடிபுகள் என்னும் உரைகல்லில் நற்றிணைப் பாடல்களை உரைத்துப் பார்க்கும்போதும் அவை பத்தரை மாற்றுத் தங்கக் கட்டிகளாகவே விளங்குவதை அறியும்போது தமிழர்களாகிய நாம் உண்மையிலேயே எல்லையில்லாப் பூரிப்பும் பெருமிதமும் அடையலாம்!

# 5

# தமிழ் நாட்டின் இசை

தமிழ் நாட்டின் இசை தனிச் சிறப்பு வாய்ந்த தாகும். அதன் வளத்தையும் வரலாற்றையும் தமிழ் இலக்கியக் கண்கொண்டு பார்த்து மகிழ்ந்து இன்புறல் ஒரு தனிப்பேறேயாகும். தேனினும் இனிய நம் தீந்தமிழை 'முத்தமிழ்' என்றே தொன்று தொட்டு வழங்கி வந்தனர் தமிழர். இயல், இசை, நாடகம் என்னும் முப்பெரும்பிரிவுகளாகத் தமிழ் மொழியைப் பாகுபாடு செய்து போற்றி வளர்த்த அவர்கள், தங்கள் அன்னை மொழியை அவ்வாறு வழங்கிய வழக்காற்றிலிருந்தே இன்பத் தமிழகத்தில் இசைக்கலை சென்ற காலத்தில் பெற்றிருந்த பெருஞ்சிறப்பினை ஒருவாறு ஊகித்து உணரலாம். பழந்தமிழ் நூல்கள் பலவும் தமிழ் மொழி முத்தமிழாய் விளங்கிய காட்சியினைத் தெளிவுபடுத்துகின்றன. 'தெரிமாண் தமிழ் மும்மைத் தென்னம் பொருப்பன்' என்று பரிபாடல் கூறுகின்றது. பழமை சான்ற தமிழ் இலக்கண நூல் எனக் கருதப்படும் அகத்தியம், முத்தமிழுக்கும் இலக்கணம் கூறும் வித்தகநூல் என்னும் கருத்தைப் பண்டைத் தமிழ் உரையாசிரியர்கள் மறைவின்றி எழுதி வைத்துள்ளார்கள். செல்வச் சிலப்பதிகாரம் முத்தமிழ் இலக்கணத்திற்கும் இலக்கியமாய் அமைந்த தீஞ்சுவைக் காவியம் என்ற உண்மை அடியார்க்கு நல்லார் உரையால் தெளிவாகிறது.

இயல், இசை, நாடகம் என்று தமிழை மூன்ருகப் பிரித்த நம் முன்னோர்கள், இசைக்கு அப்பாகுபாட்டுள் நடுநாயகமான இடம் தந்த நுட்பத்தினையும், திட்பத்தினையும் என்னென்று போற்றுவோம்! இயற்றமிழின் வெற்றியும் நாடகத் தமிழின் வெற்றியும் இசைத் தமிழின் துணையாலன்றி எய்தலாகாது என்ற பேருண்மையை ஐயமின்றி உணர்ந்த பெருமை அருந்தமிழ்ச் சான்ருேர்க்கு உண்டு என்பது தெளிவாய் விளங்கும் செய்தி அன்ருே? இனி இசைத் தமிழ் மிகு பழங்காலந் தொட்டுச் சென்ற சில நூற்ருண்டுகள் வரை எவ்வளவு வளத்தோடு தமிழ் நாட்டில் விளங்கியது என்ற உண்மையினை இலக்கிய நோக்குடன் ஆராய்வோம்:

மிகு பழந்தமிழ் இலக்கிய இலக்கண நூல்களாய் இன்று நமக்குக் கிடைப்பன சங்க இலக்கியங்களும் தொல்காப்பியமுமேயாகும். அவற்றைத் துருவி ஆராய்ந்தால், கிறிஸ்து சகாத்தம் தொடங்குவதற்குப் பன்னூறு ஆண்டுகட்கு முன்னும் பின்னும் தமிழ் நாட்டின் இசை பெற்றிருந்த ஏற்றமும் எழிலும் இனிது புலனுகும். ஒல்காப் பெரும்புகழ் வாய்ந்த தொல்காப்பியத்தில் இசையைப்பற்றிய குறிப்புகளும், இசை பாடுதலையே தொழிலாக உடைய பாணர் முதலானவர்களைப் பற்றிய குறிப்புகளும் காணப்படுகின்றன. அந்நூலில் ஐவகை நிலங்கட்கும் உரிய வெவ்வேறு வகையான பண்ணின் திறம் பேசப்படுகின்றது. இதனல், அந்நாளில் தமிழகம் எங்கணும் இசைக்

கலை பரவி இருந்தது என்பது விளங்கும். திருவள்ளுவர் தம் நூலில் இசையைப்பற்றிய பல நுண்ணிய குறிப்புக்களை வெளியிடுகின்றார். பழந்தமிழ் இசைக் கருவிகளாக யாழையும் குழலையும் அவர் குறிப்பிடும் சந்தர்ப்பமும் திறமும் மறக்க முடியாத பண்புடையனவாகும். சங்க காலத் தமிழகத்தில் தமிழிசையை வளர்த்தவர்கள் பாணர்களே ஆவார்கள். தமிழ் அரசர்களால் பெரிதும் போற்றிப் புரக்கப்பட்ட அவர்கள் கலையுள்ளமும் கருணை உள்ளமும் ஒருங்கே பெற்றிருந்தார்கள். அவர்கள் தமிழகத்தின் பொற்காலத்தில் பெற்றிருந்த பெருஞ்சிறப்பினைப் பத்துப் பாட்டுள் வரும் **பெரும்பாண் ஆற்றுப்படை, சிறுபாண் ஆற்றுப்படை** என்னும் நூல்கள் அழகாக விளக்குகின்றன. பண் பாடும் பாணர்கள் மண்ணாளும் வேந்தர்க்கு நிகராகப் புகழுடன் விளங்கிய பெருமையினைப் பேசாத சங்க இலக்கியம் இல்லை. பாணரில்லாத திருவிழா—அரசவை—பழந்தமிழ் நாட்டில் இருந்ததில்லை. **பரிபாடல்** என்ற இலக்கியமே இசை இலக்கியம்.

பழந்தமிழ்ப் பாணர்களைப்பற்றி—அவர்கள் கையாண்ட இசைக் கருவிகளைப்பற்றித்—தமிழ் இலக்கியங்கள் விரிவாகப் பேசுகின்றன. அவர்கள் ஏந்திச் செல்லும் யாழ்கள் இரு வகைப்படும். ஒன்று, பேரியாழ்; மற்றொன்று, செங்கோட்டு யாழ். இந்த யாழ்களின் வருணனை பத்துப்பாட்டில் அழகாய் அமைந்துள்ளது. இவ்விசைக்கருவிகள் நாளடைவில் வளர்ச்சியுற்றன. பின்னர் மகர யாழ், சகோட யாழ் என்ற இரு புதிய யாழ்கள் தோன்றின. முத

லிரண்டு யாழ்களும் சங்க காலத்தவை. செங்கோட்டு யாழான சிறிய யாழுக்குத் தந்திகள் ஏழு; பேரி யாழுக்குத் தந்திகள் இருபத்தொன்று; சகோட யாழுக்குத் தந்திகள் பதினன்கு; மகர யாழுக்குத் தந்திகள் பதினேழு. மகர யாழும் சகோட யாழும் சிலப்பதிகார காலத்திற்குப் பிற்பட்டவையாகும். சங்க காலத்து யாழ்கள் ஆரியக் கலை தமிழ் நாட்டில் கலந்த பின் பல்வகையாலும் மாறுதலுறலாயின. ஆயிரம் தந்திகளையுடைய நாரதப் பேரியாழும், நூறு தந்திகளையுடைய கீசக யாழும், ஒன்பது தந்தி களையுடைய தும்புரு யாழும், ஒரே தந்தியுடைய மருத்துவ யாழும் ஏற்படலாயின. இவற்றின் இலக் கணங்களை இடைக்கால நூலாகிய கல்லாடம் நுவல் கிறது. தும்புரு யாழும் மருத்துவ யாழும் வீணை போன்றவை. அவை அழகிய வேலைப்பாடமைந் தவை என்பதும், விலையுயர்ந்த இரத்தினங்களை அக்கருவிகளினுள் இட்டிருந்தனர் என்பதும், பட் டால் செய்த அழகிய பெட்டிகளில் அவை போற்றி வைக்கப்படும் என்பதும் தமிழ் நூல்களால் விளங்கு கின்றன. சங்க கால நூல்களாகிய சிறுபாணாற் றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, பொருநராற் றுப்படை, மலைபடுகடாம் முதலிய நூல்களாலும், சிலப்பதிகாரம், கல்லாடம் என்னும் நூல்களாலும் பழந்தமிழ் இசைக் கருவியாகிய யாழ் பற்றிய செய்திகள் பல விளக்கம் பெறுகின்றன. பேரி யாழ் மூன்று ஸ்தாயிகளிலும், ஏழு ஸ்வரங்களை ஒலிக்கும் இருபத்தொரு தந்திகளையுடையதாகும். ஏழு ஸ்வரங்களுக்கும் குரல், துத்தம், கைக்கிளை, உழை,

இளி, விளரி, தாரம் என்னும் தூய தமிழ்ப் பெயர்கள் உண்டு. பழந்தமிழ்ப் பாணன் ஒவ்வொரு ஸ்வரத்தையும் ஏனைய ஸ்வரங்களோடு கூட்டிக் கூட்டி வாசிக்க ஆரம்பித்தான். ஒரு தந்தியில் ஒரு ஸ்வரம் ஏற்பட்டால், அதன் மூன்றில் இரண்டு பாகம் அந்த ஸ்வரத்தின் பஞ்சமத்தையும், அரைப் பாகம் உச்சஸ்தாயியில் எட்டாவது ஸ்வரத்தையும் தோற்றுவிக்கும் என்பதைப் பாணன் நன்கு அறிந்திருந்தான்.

சிலப்பதிகாரக் காவியத்தை ஆராய்வதால் தமிழ் இசையைப்பற்றிய எத்தனையோ பேருண்மைகளை எல்லாம் அறிந்து இன்புறலாம். அந்நூலும் அந்நூலுக்கு உரை கண்ட அடியார்க்கு நல்லாரின் அறிவின் திறனும் பண்டைத் தமிழிசையைப் பற்றி நமக்குப் பலவித உண்மைகளையும் அறிவிக்கின்றன. சிலப்பதிகாரத்தில் இசைக் கருவிகளின் பெயர்களும் இலக்கணங்களும், கருவிகளிலும் கண்டத்திலும் இசைகள் பிறக்கும் முறைமையும், பிறவும் விரிவாகக் கூறப்பட்டுள்ளன. அக்காலத்தில் பேரிகை, இடக்கை, உடுக்கை, மத்தளம், திமிலை, குடமுழா, தண்ணுமை, தடாரி முதலிய முப்பத்தொரு வகைத் தோற்கருவிகள் வாசிக்கப்பட்டனவாம். சிலம்பிற்கு உரை கண்ட அடியார்க்கு நல்லார் எழுத்தால் விளக்கம் பெறும் தமிழிசைபற்றிய செய்திகள் பலவாகும். எனினும், அவர் காலத்திலேயே பழந்தமிழ் இசைபற்றிய செம்மை சான்ற நூல்கள் எவ்வாறோ கால வெள்ளத்திற்கு இரையாகிவிட்டன என்பது தெரிகிறது.

'இசைத்தமிழ் நூலாகிய பெருநாரையும், பெருங் குருகும், பிறவும், தேவ இருடி நாரதன் செய்த பஞ்ச பாரதீயமும் முதலாகவுள்ள தொன்னூல்கள் இறந் தன' என அடியார்க்கு நல்லார் கூறுகின்றார்.

சிகண்டி என்னும் செந்தமிழ் முனிவர் இயற்றிய இசை நுணுக்கமும், யாமளேந்திரர் செய்த இந்திர காளியமும், அறிவனார் செய்த பஞ்சமரபும், ஆதிவாயிலார் செய்த பரத சேனாபதீயமும், பாண்டியன் மதிவாணனார் செய்த மணிவாணர் நாடகத் தமிழ் நூலும் ஆகிய ஐந்து நூல்களும் அடியார்க்கு நல்லார் காலத்தே தமிழ் மக்களால் பயிலப்பெற்றன என்பதும், இவற் றிற் சொல்லப்பட்ட இசை நாடக முடிபுகளை ஒரு புடையொப்புமையாகக் கொண்டு சிலப்பதிகாரத் திற்கு அடியார்க்கு நல்லார் விரிவுரை இயற்றினா ரென்பதும் சிலப்பதிகார உரைப்பாயிரம் உரைக் கும் உண்மைகள். இந்நூல்களும் பிற்காலத்தே மறைந்தன. இவற்றிலிருந்து மேற்கோளாகக் காட்டப்பட்ட ஒரு சில சூத்திரங்களே இந்நாளிற் கிடைக்கின்றன. சிலப்பதிகாரவுரைப்பகுதியிலும் இசைத்தமிழ்த் திறம் விளங்கும் கானல் வரியுரை நமக்குக் கிடைக்கவில்லை.

காலம் மாற மாறப் பழந்தமிழ்ப் பாணரது நிலையும் மிக மாறியது. சங்க காலத்திற்குப்பின் தமிழ் இலக்கிய வரலாற்றில் இருள் சூழ்ந்த காலம் செறிந்திருந்தது. அதன்பின் கி. பி. 7-ஆம் நூற் றாண்டில் சமயகாலம் உதயமாயிற்று. அக்காலத் திலேதான் சம்பந்தரும் அப்பரும் தோன்றினர். அவர்

கள் தோற்றம் தமிழிலக்கிய உலகில்–அதை ஒட்டிய தமிழிசை உலகில் — பெரியதொரு — புதியதொரு மாற்றம் ஏற்படக் காரணமாயிற்று. நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பினார் ஞானசம்பந்தர். பத்திச்சுவை நிறைந்த அவர் பாடல்களைத் திருநீல கண்ட யாழ்ப்பாணரும் அவர் துணைவியாரும் ஸ்வரம் கோத்து யாழில் பாடி வந்தனர். இச்செய்தியைச் சேக்கிழாரின் பெரியபுராணம் சுவை ததும்பக் கூறுகிறது. மூவர் தமிழாகிய தேவாரமும், மணிவாசகர் திருவாசகமும் தமிழ் மண்ணில் பத்தி வெள்ளமும், தமிழிசை வெள்ளமும் பெருகிப் பாயச்செய்தன. தேவாரம், திருவிசைப்பா என்ற பெயர்களே அவை இசைப்பாட்டு என்பதை விளக்குகின்றன அல்லவா? தமிழ் மக்கள் கணக்கற்ற நூற்றுண்டுகளாய்த் தங்கள் கண்ணினும் உயிரினும் இனியவாய்ப் போற்றிவந்த எண்ணற்ற தமிழ்ப்பண்கள் அத்தனையும் புதைந்து கிடக்கும் பொற்சுரங்கமாய் நால்வர் பதிகங்களும், நாலாயிரப் பிரபந்தமும் விளங்கும் பெற்றியினை அறிந்து போற்றுத தமிழறிஞர் இன்று உண்டோ? இத்தகைய பெருமை வாய்ந்த, பத்தி கலந்த இசைவளர்ந்த நூற்றுண்டிற்குப் பின் தமிழகத்தில் தோன்றிய நூல்கள் பெருங்கதையும், சீவக சிந்தாமணியும் ஆகும். யாழிசைக்கும் முறையைப் பற்றிய விவரமான செய்திகளை இந்நூல்கள் வெளியிடுகின்றன. தலைவன் தலைவிக்கு இசை கற்பிப்பதும், இருவருக்கும் இசைப்போட்டி ஏற்படுவதும் இயல்பு என்பதை இந்நூல்கள் விளக்குகின்றன.

கி. பி. 6-ஆம் நூற்றாண்டின் இறுதியில் வீழ்ச்சி யுற்றிருந்த தமிழிசை புத்துயிர் பெற்று வளரலா யிற்று என்பதைப் பார்த்தோம். இடைக்காலத்தில் தமிழன்பும், தமிழ்ப்பண்பும் இல்லாத வேற்றாரின் ஆட்சிக்கு இரையாகியிருந்த தமிழகத்தில் சூழ்ந் திருந்த காரிருள் மறைந்து கலைஒளி பரவக் காரண மாயிருந்தவர்கள் தமிழ் வேந்தர்கள் எனல் மிகை யாகாது. பாண்டியன் கடுங்கோ என்பான், இன்பத் தமிழகத்தை இருள் சூழ்ந்த நாடாக்கிய களப்பிரரை வென்றான். தமிழகத்தில் தமிழாட்சி தலை எடுத்தது. அதன் பயனாக மீண்டும் தமிழிசை தழைக்கலாயிற்று. பாண்டிய மன்னர் தம் தலைநகரில் இசைத் தமிழ்ச் சங்கமொன்றை நிறுவித் தமிழிசையைத் தனிப் பற்றுடன் வளர்த்தனர் என்பது இலக்கிய வர லாற்று ஆராய்ச்சியால் விளங்குகிறது.

'உயர்மதிற் கூடலின் ஆய்ந்தஒண் டீந்தமிழின்
துறைவாய் நுழைந்தனை யோஅன்றி ஏழிசைச் சூழல்புக்கோ
இறைவா! தடவரைத் தோட்கென்கொ லாம்புகுந் தெய்தியதே?'

என்னும் மாணிக்க வாசகப் பெருமான் திருவாக்கி னாலும்,

'ஆழி வடிம்பலம்ப நின்றானும் அன்றொருகால்
ஏழிசைநூற் சங்கத் திருந்தானும்'

என்னும் நளவெண்பாப் பாடலாலும் இவ்வாய்மை விளங்கும். கி. பி. 11-ஆம் நூற்றாண்டில் விளங்கிய முதற்குலோத்துங்கச் சோழன் இசைத் தமிழ்நூல் ஒன்று இயற்றி இருந்தமை கலிங்கத்துப் பரணியால் அறியப்படுகின்றது. அவன் மனைவி இசைக் கலையில் இணையில்லாப் புலமை பெற்றிருந்தாள். அதனால்,

அவள் இயற்பெயரும் மறைந்து, 'ஏழிசை வல்லபி' என்ற சிறப்புப் பெயரே நிலைத்துவிடலாயிற்று. கி. பி. 13-ஆம் நூற்றாண்டில் சாரங்க தேவர் என்பவர் வடமொழியிலியற்றிய 'சங்கீத ரத்தினகரம்' என்ற நூலில் சோழ மன்னர்களின் காலத்தில் வழங்கிய தேவாரப் பண்களைத் தேர்ந்து குறித்துள்ளமை, அந் நாளில் தேவாரத் தமிழிசைக்கு இருந்த சிறப்பையும் செல்வாக்கையுமே சுட்டிக் காட்டுகிறது. இவ்வாறு சங்க காலத்திற்குப் பின் மீண்டும் உச்ச நிலையையடைந்த தமிழிசை, மறுபடியும் கி. பி. 14-ஆம் நூற்றாண்டிற்குப் பின் மெள்ள மெள்ள வீழ்ச்சியுறலாயிற்று.

தமிழ் நாட்டின் இசைக்கலை வளர்ந்த வரலாற்றை இதுவரை கண்டோம். இனி இசையையே முதல் நோக்கமாகக் கொண்டு இசைத் தமிழைப் போற்றிப் புரந்த தமிழ் மக்கள் இயற்றமிழ் வாயிலாகவும் இசைக் கலையை வளர்த்து வாழ்வு பெறச்செய்த சிறப்பினைச் சிறிதே ஆராய்வோம்:

'இழுக்குடைய பாட்டிற்கு இசை நன்று,' என்பது பழமொழி. இதனாலேயே தமிழர்கள் எந்த ஒரு பாடலையும் பண்ணோடு பாடி வந்தார்கள். இஃது அவர்களிடம் தொன்று தொட்டு நின்று நிலவிய பண்பாடு என்பதைத் தமிழ் இலக்கியங்களை ஆராய்வார் எளிதின் அறியக்கூடும். தொல்காப்பியனார் சொற்றொடர்களின் ஓசை அமைதிக்கு 'வண்ணம்' என்று பெயர் கொடுத்து, அதை இருபது வகைப் படுத்தியுள்ளனர். அவை வல்லிசை வண்ணம்,

மெல்லிசை வண்ணம், நெடுஞ்சீர் வண்ணம், குறுஞ்சீர் வண்ணம் முதலியனவாகும். செய்யுட்கள் யாவும் எதுகை, மோனை முதலியவை அமைந்தே இருக்க வேண்டும் என்று யாப்பிலக்கணம் வரையறை செய்கிறது. வெண்பா முதலிய பாக்களுள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வகை இசையுடனேயே பண்டுதொட்டு ஓதப்பட்டுள்ளது. அவற்றுள்ளும் கலிப்பா, பரிபாடல் என்பன இசைப்பாக்களே என்பது பேராசிரியர் முதலிய பேருரையாளர்கள் கருத்து. எட்டுத் தொகையுள் ஒன்ருய் விளங்கும் பரிபாடற் செய்யுட்களுள் ஒவ்வொன்றிற்கும் பண் வகுக்கப் பெற்றிருப்பது ஆராய்தற்குரியது. பாலையாழ், நோதிரம், காந்தாரம் என்ற பண்கள் அதில் உள்ளமையும், இசை வகுத்தோராக ஒருபதின்மர் பெயரும் அந்நூலால் விளங்குகின்றன. தமிழிலக்கணப் படி வெண்பா முதலிய பாக்கட்கு இனமாய் உள்ள தாழிசை, துறை, விருத்தம் என்பனவும் இசைப்பாக்களே. மேலும், மாந்தர் உள்ளத்தில் தோன்றும் மெய்ப்பாடுகளை உணர்த்தும் ஓசை நயமும் கவி நயமும் ஒருங்கே அமைந்த பாடல்கள் பலவற்றைப் போற்றி வளர்த்த பெருமை தமிழ்ப் புலவர் பரம்பரைக்கு உண்டு என்பது தொல்காப்பியத்தாலும், சிந்தாமணி, கம்பராமாயணம், பெரிய புராணம் முதலிய நூல்களாலும் தெளிவாகும்.

தமிழிலக்கியத்தில் ஒப்பற்ற இசைப்பாக்களாக நமக்குக் கிடைப்பன சிலப்பதிகாரத்திலுள்ள கானல்வரி, வேட்டுவவரி, ஆய்ச்சியர் குரவை, ஊர் சூழ்வரி, குன்றக்குரவை, வாழ்த்துக்காதை என்

னும் ஆறு காதைகளுமாம். தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருவாய் மொழி, திருப்புகழ் முதலியனவும் அளப்பரிய இசைப்பெருஞ்செல்வக் களஞ்சியங்களேயாகும்.

'சிந்து' என்ற இசைப்பாட்டும் 13-ஆம் நூற்றுண்டிலேயே தமிழ் நாட்டில் பிறந்து வளர்ந்தது. விஜயநகரப் பேரரசின் காலத்தே தமிழர் கண்ட பேரிசைச் செல்வம் திருப்புகழாகும். பின்னர்ப் பள்ளு, நொண்டி நாடகம், குறவஞ்சி முதலியன தோன்றின. அவற்றைத் தொடர்ந்து கீர்த்தனங்கள் எழுந்தன. முத்துத் தாண்டவராயர், மாரிமுத்தாப் பிள்ளை, அருணசலக் கவிராயர், இராமலிங்க சுவாமிகள், கோபாலகிருஷ்ண பாரதியார் முதலியோர் தமிழ் மரபைத் தழுவித் தெள்ளுதமிழ்க் கீர்த்தனைகள் பல பாடித் தமிழ் நாட்டில் தமிழிசை வெள்ளமிடச் செய்தனர்.

பண்டுதொட்டே தமிழ் நாட்டில் நாடகத் தமிழிலும் இசைக்குச் சிறப்பிடம் இருந்த செய்தியைச் சிலப்பதிகாரம் முதலிய நூல்களாலும் அவற்றின் உரைகளாலும் தெள்ளிதின் உணரலாம். அப் பண்பாடு மிகவும் பிற்காலத்தில் முற்றி முதிர்ந்த நிலையைக் காண்கிறோம். இராமநாடகம் முதலியவற்றைக் காணும்போது கீர்த்தனங்களே நாடகமாய் அமைந்த காட்சியைக் காண்கிறோம். ஆம். இது தமிழ் நாட்டிற்கும் தமிழ் மொழிக்கும் உரிய தனிப்பெருமை அன்றோ?

இசை பற்றிய பல வியத்தகு நுட்பங்களைத் தமிழ் மக்கள் அறிந்திருந்தார்கள். புன்னாகவராளியில் மகுடி இசைத்தால் பாம்பும் படமெடுத்தாடும். குறிப்பிட்ட ஒரு பண்ணுக்குத்தான் மதம் பிடித்த யானையும் அடங்கும். பாலை வனக் கள்வரும் பாலை யாழ் கேட்டுத்தான் படையைத் துறந்து பண்படுவர். மேகராகக் குறிஞ்சிதான் மேகங்களை ஈர்க்கும். இவையெல்லாம் தமிழர்க்குத் தம் வாழ்க்கை அனுபவத்தால் விளங்கிய உண்மைகள்.

நிலத்திற்கும் காலத்திற்கும் ஏற்பப் பண்டைத் தமிழர் இசை வகுத்திருந்தனர். காலையில் மருதப் பண்ணும், நண்பகலில் பாலைப் பண்ணும், மாலையில் செவ்வழிப் பண்ணும், நள்ளிரவில் குறிஞ்சிப் பண்ணும் பாடுதற்குரியன என்பது இசைநூன்மரபு.

'சிந்து, திரிபதை, சவலை, சமபாத விருத்தம், செந்துறை, வெண்டுறை, பெருந்தேவபாணி, சிறு தேவபாணி, வண்ணம் என்னும் ஒன்பது வகையது இசைப்பாட்டு,' என்பது, அறிவனார் இயற்றிய பஞ்சமரபு வெண்பாவினால் பெறப்படும். எவ்வுயிர்க்கும் இன்பமுண்டாக்கலும், அறிவினைத் தெளிவடையச் செய்தலும், மனத்தை ஒருமை நிலையில் நிறுத்தலும், புகழ்பட வாழச் செய்தலும், உறுதிப் பொருளை வற்புறுத்தலும், முடிந்த பயனைக் கூறுதலும், மெல்லோசையால் மன அமைதியைத் தருதலும், உச்ச நிலையாகிய ஓசையால் மக்களது உணர்வைத் தூண்டித் தொழிற்படச் செய்தலும் இசைப்பாடலாற்பெறும் எண்வகைப் பயனெனக் கொண்டனர் தமிழ் முன்னோர்.

பழந்தமிழ் நூல்களை ஆராயும்போது தமிழ் மக்கள் தமிழிசையில் தங்கள் நாட்டின்—மொழியின்—பண்பாட்டின்—தூய தனித் தன்மை விளங்குமாறு போற்றி வளர்த்த வரலாறும் விளங்குகிறது. இறையோடு தொடர்புடையனவாய் இன்று வேற்று மொழிச் சொற்களாய் வழங்கும் பல சொற்களுக்கு நேரான தமிழ்ச் சொற்கள் சங்க காலத் தமிழகத்தில் பெருவாரியாய் வழங்கிய உண்மை இலக்கிய நோக்குடையார்க்கு எளிதில் புலனாகும். ஆலாபனம் என்பது ஆளத்தி என்று அந்நாளில் வழங்கிற்று. த, ந, ம என்னும் மூன்று மெய்யினங்களோடு குற்றெழுத்தைந்தும், நெட்டெழுத்தைந்தும் தென்னா, தெனா என்னும் அசைகளும் ஆளத்தி செய்வதற்குரியனவாயிருந்தன. மூலாதாரம் தொடங்கி எழுத்தின் நாதம் ஆளத்தியாய்ப் பின்பு இசை என்றும் பண் என்றும் பெயர் பெறலாயின. ஜனன ராகங்கள் ‘பண்’ என்றும், ஜன்னிய ராகங்கள் ‘திறம்’ என்றும் கூறப்பட்டன. இசைப்பாட்டுக்கள் எல்லாம் செந்துறை, வெண்டுறை, வரி, உரு முதலிய பெயர்களால் வழங்கின. வரி, உரு முதலியவற்றுள் எத்தனையோ பல வகைகள் உண்டு. இப்பொழுது கீர்த்தனங்கள் என்று கூறப்படுவன, உருக்களில் அடங்குவனவாகும். பலவகையான கூத்துக்களோடும் வரிப்பாடல்கள் பாடப்பட்டன. கொற்றி, பிச்சி, சிந்து, சித்து, தண்டி, அம்மனை, பந்து, கழங்கு, உந்தி, தோள் வீச்சு, சாழல், தெள்ளேணம் முதலிய எண்ணிறந்த கூத்தினங்களும், அவற்றிற்குரிய பாடல்களும் நடைமுறையிலிருந்தன. அவை பெரும்

பாலும் மகளிருடைய விளையாட்டுக்களாய் விளங்கின. மற்றும், மகளிர் கிளி ஓட்டுவதும் பாட்டு; சுண்ணமிடிப்பதும் பாட்டு. இவ்வாறு எல்லாச் செயல்களும் பாட்டுக்களோடு நிகழ்ந்தன. இங்ஙனம் மக்களின் வாழ்க்கையோடு இரண்டறக் கலந்து இடம்பெற்றிருந்த இசை மயமான இந்நிகழ்ச்சிகள், வாழ்க்கையின் விமரிசனமாய் எழுந்த இலக்கியங்களிலும் இடம் பெறலாயின. அம்மனை, பந்து, ஊசல், வள்ளை என்னும் வரிப்பாட்டுக்களைச் சிலப்பதிகாரத்தில் காணலாகும். திருவாசகத்தில் தெள்ளேணம், சாழல், தோள் நோக்கம், உந்தி முதலிய வரிப்பாடல்களைக் காணலாம்.

இலக்கிய நோக்குடன் தமிழ் நாட்டின் இசையை ஆராயும் போது விளங்கும் ஒரு பெரிய உண்மை, நம் வியப்பிற்கும் போற்றுதலுக்கும் பெரிதும் உரியதாய் உள்ளது. வேறு எந்த நாட்டைக்காட்டிலும் தமிழ் நாடுதான் 'இசையால் இறைவனை உணரலாம்,' என்ற உண்மையை உணர்ந்திருந்த நாடு என்பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை. 'பாட்டிடைப் பண்ணாய், ஏழிசையாய் இசைப்பயனாய், எம்மிறை நல்வீணை வாசிக்குமே' என்றெல்லாம் வரும் ஆன்றோர் வாக்குக்கள் தெய்வானுபவம் நிறைந்த திருமொழிகளல்லவா? எனவே, தமிழ் நாட்டின் இசை, சாதாரண உலக வாழ்க்கைக்கு மட்டுமன்றி, நித்தியமான தெய்விக நிலையடைவதற்கும் துணை புரியும் ஆற்றல் வாய்ந்திருந்தது என்பது புலனாகிறதன்றோ? ஆம்.

'வெந்தழல் நீராகும் வெள்ளெலும்பு பெண்ணாகும்
வந்தமத வேழம் வணங்கிடுமே!—சந்தமெழப்
பாடுவா ருள்ளுருகிப் பாடும் தமிழிசைக்கு
நீடுலகில் உண்டோ நிகர்?'

என்ற கவிமணியின் திருவாக்கு வாய்மையின் குரலன்றோ?

# 6

# பிரபந்த வகைகள்—அந்தாதி

காலவெளியில் கன்னித் தமிழ்த்தாய் கண்ட யுகங்கள் எத்தனையோ! அகநானூறும் புறநானூறும் செழித்து வளர்ந்தது ஒரு காலம். சிலம்பும் மேகலையும் சிலம்பியது ஒருகாலம். சிந்தாமணி சுடர் விட்டது ஒரு காலம். சேக்கிழார் பாமணமும், கம்பர் கவிமணமும் கமழ்ந்தது ஒரு காலம். தேவாரப் பாலும், திருவாசகத் தேனும், நாலாயிரக் கனிச் சாறும் பாய்ந்தது ஒருகாலம். புராண வெள்ளங்கள் கரைபுரண்டு ஓடியது ஒரு காலம். இப்படி எத்தனையோ காலங்களைக் கண்ட கன்னித்தமிழ், பிற்காலத்தில் 'பிரபந்தயுகம்' ஒன்றையும் கண்டது. அந்நாளில் தமிழ் இலக்கியச் சோலையில் செழித்து வளர்ந்த இலக்கியத் தருக்களே அந்தாதிகள் ஆகும். நாளுக்கு நாள் தமிழ்மொழி அடைந்துவந்த புதுமையாலும் எளிமையாலும் தொண்ணூற்றாறுவகைப் பிரபந்தங்கள் தோன்றின. அவற்றுள் ஒருவகைப் பிரபந்தமே 'அந்தாதி' எனப் போற்றப்படும். அந்தாதி என்பது என்ன? முன்நின்ற செய்யுளின் இறுதி எழுத்தாவது, அசையாவது, சீராவது, அடியாவது பின்வரும் செய்யுளில் முதலாய்வர, அங்ஙனமே நூலின் ஈறும் அதன் முதலாய் நிற்குமாறு முடியப்பாடும் ஒருவகை நூலே அந்தாதியாகும். எனவே, இவ்விலக்கியம் சொற்றொடர்க் கோவையினையே முதல் நோக்கமாகக் கொண்டது என்பது

புலனாகும். இந்த உண்மை, சிறந்த அணி இலக்கண மாகிய தண்டி அலங்காரம் 'செய்யுளந்தாதி சொற்றொடர் நிலையே,' என்று கூறுவதால் இனிது விளங்கும். பிரபந்தங்களை—சின்னூல்களை—'விருந்து' என்று தொல்காப்பியர் குறிப்பிடுவார். 'விருந்தே தானும் புதுவது கிளந்த யாப்பின் மேற்றே,' என்னும் தொல்காப்பியச் சூத்திரத்தையும் அதற்குப் பேராசிரியர் வரைந்துள்ள உரைப்பகுதியையும் கூர்ந்து நோக்குவார்க்கு அந்தாதிகள், 'விருந்து' என்னும் வனப்பமைந்த தொடர்நிலைச் செய்யுட் களே என்ற உண்மை எளிதில் விளங்கும்.[1]

அந்தாதி உள்ளிட்ட பிரபந்த நூல்கள் பல வற்றையும் பிற்காலத் தமிழ் மக்கள் தணியாக் காதலோடு ஓதி மகிழ்ந்து பயன் பெற்று வந்தார் கள். "தமிழ் நாட்டில் பண்டைக் காலந்தொடங்கித் தமிழ் பயிலும் மாணாக்கர்கள் முதலில் சிறு நூல்களைக் கற்றல் வழக்கமாய் இருந்தது. அந்தாதி, சிலேடை வெண்பா, மாலை, கலம்பகம், கோவை, மடல், பரணி என்பவற்றை ஒன்றன் பின் ஒன்றாகப் படித்து வருவார்கள். தமிழில் அடிப் படையான உணர்ச்சி வருவதற்குப் பிரபந்தங்கள் உதவியாய் இருத்தலின், அவற்றை வித்துவான்கள் 'கருவி நூல்' என்று வழங்குவார்கள்," என்று டாக்டர்

1. 'புதுவது கிளந்த யாப்பின் மேற்று என்றதென்னை யெனின், புதிதாகத் தாம் வேண்டியவாற்றாற் பல செய்யுளுந் தொடர்ந்துவரச் செய்வது. அது முத்தொள்ளாயிரமும், பொய்கை யார் முதலானோர் செய்த அந்தாதிச் செய்யுளுமென உணர்க'.
—பேராசிரியர்

சாமிநாதய்யர் எழுதியுள்ள வாசகம் சென்ற சில நூற்றாண்டுகளில் தமிழ்க்கல்வி உலகில் பிரபந்த இலக்கியங்கட்கு இருந்த செல்வாக்கை நன்கு புலப் படுத்தும்.

அந்தாதியாகப் பாடும் இலக்கியப்போக்கு எந்த நூற்றாண்டில் யாரால் தொடங்கி வைக்கப்பட்டது என்பது அறியக்கூடவில்லை. ஆம். அந்தாதியின் ஆதி, ஆராய்ச்சிக்கும் எட்டாததாய் உள்ளது! சங்க காலத்திலேயே இத்தகைய சொற்றொடர் நிலை தொடங்கிவிட்டது. சேர மன்னர்களுள் மிக்க தொன்மையும் பெருமையும் வாய்ந்தவன் பெருஞ் சோற்று உதியன் சேரலாதன் ஆவன். அவனை முரஞ்சியூர் முடிநாகராயர் என்பவர் ஓர் அழகிய பாடலில் போற்றியுள்ளார். அப்பாடலைக் கூர்ந்து கேளுங்கள் :

'மண்டிணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்புதைவரு வளியும்
வளித்தலைஇய தீயும்
தீமுரணிய நீரு மென்றாங்கு' (புறம், 2 : 1—5)

இப்பாடல் முதலடியின் இறுதிச் சொல்லாகிய 'நிலன்' என்பது அடுத்த அடியின் முதலாகவும், இரண்டாவது அடியின் இறுதிச் சொல்லாகிய 'விசும்பு' என்பது மூன்றாவது அடியின் முதற் சொல்லாகவும், அவ்வடியின் இறுதிச் சொல்லாகிய 'வளி' என்பது நான்காம் அடியின் முதற்சொல் லாகவும், அவ்வாறே அவ்வடியின் இறுதிச் சொல் லாகிய 'தீ' என்பது ஐந்தாம் அடியின் முதற்சொல்

லாகவும் வருவதைக் கவனித்தீர்களா? இப்படி ஓர் அடியின் அந்தம் இன்னோர் அடியின் ஆதியாக வருமாறு பாடுவதே அந்தாதித் தொடை ஆகும். இந்த இலக்கிய உத்தியினை—அழகினைப்-பயன்படுத்தியே பிற்காலத்தில் ஒரு பெரிய பிரபந்தப் பூங்கா உண்டாக்கப்பட்டது. புறநானூற்றின் காலம் மிகப் பழமையானது. அதிலும், நாம் பார்த்த பாடலைப் பாடியவர் காலம் மிக மிகப் பழைமையானது. கிறிஸ்து சகாத்தம் தொடங்குவதற்கு முன்னே தோன்றிய பாட்டு அது என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றார்கள். அப்படியானால், அந்தாதியைப் பற்றிய எண்ணம் எவ்வளவு பழைமையானது என்பது உங்கட்குச் சொல்லாமலே தெரிகிறது அல்லவா? இனி எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகிய பதிற்றுப்பத்தில் நான்காவது பத்தைப்பாடிய காப்பியாற்றுக் காப்பியனார், அப்பத்துப் பாடல்களையும் அந்தாதியாகவே இயற்றியுள்ளார். ஆனால், இறுதிப் பாடலின் அந்தம் மட்டும் முதற்பாட்டின் ஆதியோடு ஒன்றவில்லை. சங்க நூல்களாகிய அகநானூற்றிலும் சிறுபாணாற்றுப்படையிலும் அந்தாதித் தொடைகள் வந்துள்ளன.

பிரபந்த வகைகளுள் மிகப் பழமை வாய்ந்த இவ்வந்தாதி இலக்கியம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து வந்தது. அந்தாதி அமைப்பை உயிர்நிலையாக வைத்துக்கொண்டு தமிழ்ப் புலவர்கள் எத்தனை வகையான நூல்களை இயற்ற முடியுமோ, அத்தனை வகையான நூல்களையும் இயற்றினார்கள்; வெண்பா முதலான

பாவகைகளை எல்லாம் அந்தாதிக்குப் பயன் படுத்தினார்கள்; தமிழ்ச் சுவையும் பத்திச் சுவையும் அந்தாதி நூல்களில் ததும்பும்படி செய்தார்கள்; சிலேடைகளையும் யமகங்களையும் அவற்றிலே செறித்து வைத்தார்கள்; கண் கண்ட அந்தாதித் தமிழின் துணைகொண்டு விண்கண்ட தெய்வம் பல கோடியையும் வியந்து விதந்து போற்றி மகிழ்ந்தார்கள். அந்தாதி இலக்கியம் வளர அரசரும் உதவினர். ஆண்டிகளும் உதவினார்கள்; சைவரும் உதவினர்; சமணரும் உதவினர்; வைணவரும் பணி புரிந்தனர்; வீரசைவரும் பணி புரிந்தனர்; ஆடவரும் தொண்டாற்றினர்; மகளிரும் தொண்டாற்றினர். ஆம். இந்த உண்மை தமிழ் இலக்கிய வரலாற்றை—தமிழ்ப் புலவர் வரலாற்றைக்—கற்பார் எளிதில் உணரலாம்.

அந்தாதித் தமிழைப் பண்டிதர்களே அன்றிப் பாமரமக்களும் போற்றி வளர்த்தார்கள் என்பதற்குச் சான்றாக எத்தனையோ நாடோடிப் பாடல்கள் இருக்கின்றன.

> 'முப்பதுட ஹைன்று மூங்கில்இலை மேலே
> மூங்கில் இலைமேலே தூங்கும் பனிநீரே
> தூங்கும் பனிநீரை வாங்கும் வெங்கதிரே'

என்னும் இந்த அழகிய ஏற்றப்பாட்டில் ஒரு செய்யுளுள்ளேயே ஓரடி இறுதி மற்றைய அடிக்கு முதலாக அமையும்படி தொடுக்கும் அந்தாதித் தொடை எவ்வளவு அழகாய் அமைந்துள்ளது பாருங்கள்! இவ்வாறு தொடுத்த சொல்லையே பிடித்துத்தொகுத்துத் தனி அந்தாதியாக முடிக்கப்

பெறும் பாட்டுக்கள் பல எழுதா இலக்கியமாக கிராமியக் கவிதைகளில் ஏராளமாக உண்டு.

கலம்பகம், இரட்டை மணி மாலை, மும்மணிக் கோவை, நான்மணி மாலை முதலிய பல்வேறு பிரபந்த நூல்களும், சித்தர்கள் பாடிய வைத்திய நூல்கள் பலவும், திருவாசகத்தில் வரும் திருச்சதகம் நீத்தல் விண்ணப்பம் முதலிய பதிகங்களும், திருவாய்மொழிப் பாசுரங்களும், இன்னும் இவை போன்ற பல அரிய நூல்களும் அந்தாதியாகவே பாடப்பெற்றுள்ளன. ஆனால், அவை யாவும் பல் வேறு காரணங்கள் பற்றி வேறுவேறு சிறப்புப் பெயர்களைச் சூடித் திகழ்கின்றன. எனினும், அவைகளும் சொற்றொடர் நிலைகளே.

முற்றிலும் அந்தாதியாகவே அமைந்த நூல் களுள் மிக்க பழைமையும் பத்தி நலமும் மலிந்து காணப்படும் நூல்கள் நக்கீர தேவநாயனாரும், கபில தேவ நாயனாரும், பரண தேவ நாயனாரும் முறையே பாடிய கைலைபாதி காளத்தி பாதி அந்தாதியும், சிவபெருமான் திருவந்தாதிகளும் ஆகும். நக்கீர தேவ நாயனார் நற்றமிழால் பாடிய அந்தாதி, நல்ல நோக்குடையதாய், நெஞ்சை உருக்கும் நீர்மைய தாய் விளங்கும் பான்மையதாகும். கபில தேவ நாயனாரும் பரண தேவ நாயனாரும் 'ஒன்று' என்று தொடங்கி 'ஒன்று' என்று முடித்து, 'சிவ பெரு மான் திரிபந்தாதி' என இருவரும் ஒரு பெயரிட்டு இரு நூல்கள் செய்து முடித்தனர். இவ்விரண்டு நூல்களிலுமுள்ள வெண்பாக்களில் இரண்டு

இரண்டு அடிகள் மடக்காய் அமைந்துள்ளன. இந் நூல்களே பின்னாளில் யமக அந்தாதி பாடுவதற்கு வழி காட்டின. இந்நூல்கள் எழுந்த காலம் கி. பி. 6-ஆம் நூற்றாண்டு என்பர். இந்நூல்களுக்குப் பின் எழுந்த அந்தாதிகள் காரைக்காலம்மையார் பாடிய அற்புதத் திருவந்தாதியும், சேரமான் பெருமாள் நாயனார் செய்தருளிய பொன்வண்ணத்தந்தாதி யும், ஆழ்வார்கள் அருளிய அந்தாதிகளும் ஆகும். திருநூற்றந்தாதி, சமண சமயத்தவரால் இயற்றப் பெற்றது; பெரிதும் போற்றப்படுவது.

இவ்விலக்கியங்கட்குப் பின் ஈரமும் வீரமும் ஒருங்கே படைத்த அறுபத்து மூன்று நாயன்மார் கள் வரலாற்றை வகைப்படுத்திப்பாடும் வகை நூலாய் நம்பியாண்டார் நம்பி இயற்றிய திருத் தொண்டர் திருவந்தாதி எழுந்தது. கட்டளைக் கலித் துறையில் இயன்ற இந்நூலே பின்னாளில் சேக் கிழார் பெருமான் திருத்தொண்டர் புராணம் பாடப் பெருந்துணை புரிந்தது என்றால், இதன் சிறப்பை வரம்பிட்டு உரைத்தல் ஆகுமோ? இதற்குப் பின்னர்த் தோன்றிய நூறு நூறு பாடல்களைக் கொண்ட பதிற்றுப்பத்தந்தாதிகள், ஓசை நயமும் சொல்நயமும் பொருள் நயமும் சேரப்பெற்று விளங் கும் சீர்மையனவாகும். நூறு பாடல்களையுடையன இந்நூல்கள்; ஆயினும், மனப்பாடம் செய்தலைப் பயனுடைய கலையாகப் போற்றிய பழைய நாளில், கல்வி கற்கும் மாணவர்கள் அந்தாதித் தொடை அமைப்பின் துணைகொண்டு இந்நூல்களை நெட்டுருச் செய்வது எளியதாயிருந்தது.

இன்னும், அந்தாதி உலகில் தமிழ்ப் புலவர்கள் படைத்துள்ள அற்புதங்களை எண்ணுவார் நெஞ்சம் இன்பக்கடலாகும். வெண்பா அந்தாதி, கலித்துறை அந்தாதி, ஒருவகை ஓசைக்குப் பத்தாகப் பத்துவகை ஓசையில் பல வகை விருத்தங்களால் பாடப் பெறும் பதிற்றுப்பத்தந்தாதி, வண்ணமும் கவிவைப்பும் தவருமல் பதினறு கலை வைப்புக்களை ஒரு பாடலிலேயே அமைத்து அத்தகைய முப்பது பாடல்களை அந்தாதியாக இயற்றும் ஒலி அந்தாதி, அங்ஙனமே கவி வைப்புக்களை ஒரு பாடலில் வைத்து முப்பது பாடல்களால் ஆகிய அந்தாதியாக இயற்றும் கலி அந்தாதி, அடிதோறும் முதற்சீர் மடக்காக வரும் யமக அந்தாதி, திரிபு அந்தாதி, உதட்டோடு உதடு ஒட்டாமல் பாடக்கூடிய நிரோட்டக யமக அந்தாதி—என்று இவ்வாறு பல்வகை யாப்பாலும் அந்தாதிகள் பாடப்பெற்றன.

இப்படி எத்தனையோ வகையான அந்தாதிகள் எண்ணில் அடங்காதனவாய்த் தமிழ் மொழியில் இருப்பினும், கரைந்துருகிக் காரைக்காலம்மையார் பாடிய அற்புதத் திருவந்தாதியும், முதல் ஆழ்வார்கள் ஞானத் தமிழால் இசைத்த அந்தாதிகளும், சேரமான் பெருமாள் நாயனர் செந்தமிழ் நலங் கனியப்பாடிய பொன் வண்ணத்தந்தாதியும், கவியரசர் கம்பர் கனிந்துருகிப்பாடிய சரசுவதி அந்தாதியும், சடகோபர் அந்தாதியும், பரஞ்சோதி முனிவர் பாநலம் விளங்கப்பாடிய மதுரைப் பதிற்றுப்பத்தந்தாதியும், குட்டித் திருவாசகமெனக் குவலயம் போற்றும் அதிவீரராம பாண்டியர் பாடிய திருக்கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி

யும், இந்த நூற்றூண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த பாம்பன் சுவாமிகள் பாடிய குமரவேள் பதிற்றுப் பத்தந்தாதியும் அடியார் நெஞ்சிலும் நாவிலும் நடமாடும் சிறப்புடையனவாகும்.

காதல் மணமும் கடவுள் மணமும் கமழப் பட்டினத்தடிகளார் பாடிய திரு ஏகம்பமுடையார் திருவந்தாதி அருமையும் பெருமையும் வாய்ந்த தாகும்.

இனி அந்தாதிச் சோலையில் அழகும் மணமும் சுவையும் உடையனவாய்ப் பழுத்து விளங்கும் கணக்கற்ற கவிதைக் கனிகளுள் சிலவற்றின் சுவையை மட்டும் இப்போது நுகர்வோம்:

முதலில் கவியரசர் கம்பர் பாடிய சரசுவதி அந்தாதியிலிருந்து இரு பாடல்களைப் பார்ப்போம்:

மயிலே மடப்பிடி யேகொடி யேயிள மான்பிணையே
குயிலே பசுங்கிளி யேஅன்ன மேமனக் கூரிருட்கோர்
வெயிலே நிலவெழு மேனிமின் னேயினி வேறுதவம்
பயிலேன் மகிழ்ந்து பணிவேன் உனதுபோற் பாதங்களே.

இப்பாடல் 'பாதங்களே' என்ற இறுதிச் சொல்லோடு முடிந்தது அல்லவா? அடுத்த பாடல் ஆரம்பிப்பதைப் பாருங்கள்:

பாதாம் புயத்திற் பணிவார் தமக்குப் பலகலையும்
வேதாந்த முத்தியும் தந்தருள் பாரதி! வெள்ளிதழ்ப்பூஞ்
சீதாம் புயத்தில் இருப்பாள் இருப்பஎன் சிந்தையுள்ளே
ஏதாம் புவியிற் பெறலரி தாவ தெனக்கினியே?

இனி காரைக்கால் அம்மையார் பாடிய அற்புதத் திருவந்தாதியிலிருந்து இரு பாடல்களைக் கேளுங்கள்:

'பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன்—நிறந்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே!
எஞ்ஞான்று தீர்வ திடர்?

'இடர்' என்று இப்பாட்டு முடிந்தது அல்லவா? அடுத்த பாடலும் 'இடர்' என்றே தொடங்குவதைக் கவனியுங்கள்.

'இடர்களையா ரேனும் எமக்கிரங்கா ரேனும்
படரு நெறிபணியா ரேனும்—சுடர்உருவில்
என்பருக் கோலத்து எரியாடும் எம்மானார்க்கு
அன்புஅறாது என்நெஞ் சவர்க்கு.'

அடுத்து பூதத்தாழ்வார் பாடிய இரண்டாம் திருவந்தாதியிலிருந்து இரு பாடல்களைப் பார்ப்போம்.

'அன்பே தகளியா ஆர்வமே நெய்யாக
இன்புருகு சிந்தை யிடுதிரியா—நன்புருகி
ஞானச் சுடர்விளக் கேற்றினேன் நாரணற்கு
ஞானத் தமிழ்புரிந்த நான்.'

இப்பாடலின் இறுதியடியின் முதற்சீராகிய 'ஞானம்' என்பதே அடுத்த பாடலின் முதற்சொல்லாய் வருகிறது பாருங்கள்:

ஞானத்தால் நன்குணர்ந்து நாரணன்தன் நாமங்கள்
தானத்தால் மற்றவன்பேர் சாற்றினால்—வானத்
தணியமரர் ஆக்குவிக்கும் அஃதன்றே நங்கள்
பணியமரர் கோமான் பரிசு?'

கடைசியாக ஒரு பாட்டு: பூதத்தாழ்வார் பாடிய இரண்டாம் திருவந்தாதியின் முதற்பாட்டைச் சற்றுமுன் கேட்டீர்கள். அப்பாடல் எந்தச் சொல்

லோடு தொடங்கியது? 'அன்பு' என்ற சொல்லோடு தொடங்கியது. இப்போது அந்நூலின் இறுதிப் பாட்டைக் கேளுங்கள்.

'மாலே! நெடியோனே! கண்ணனே! விண்ணவர்க்கு
மேலா! வியன்துழாய்க் கண்ணியனே!—மேலால்
விளவின்காய் கன்றினல் வீழ்த்தவனே! என்றன்
அளவன்றால் யானுடைய அன்பு.'

இப்பாடலின் இறுதிச் சொல்லும் 'அன்பு' என்றே மண்டலித்து முடிந்து நமக்கு மண்டல அந்தாதி இலக்கணத்தின் அழகை நினைப்பூட்டுகிறது அல்லவா?

## 7

## இலக்கியத்தில் இயற்கை :

# நதியும் கரையும்

நதியும் கரையுமே நாகரிகம் வளரும் தொட்டில்; சமயம் வளரும் சமரசப் பூங்கா; அரசியலை வாழ்விக்கும் இயற்கை அரண்; கலைஞன் கண்ணிற்கு ஒளி தரும் சுடர் விளக்கு; புலவன் பாட்டிற்குப் பொருள் தரும் கருத்துக் கருவூலம்; மக்கள் வாழ்விற்கு உயிர் ஊட்டும் அமுத சுரபி. இத்தகைய பெருமை வாய்ந்த நதியையும் கரையையும் பற்றிப் பாடாத தமிழ்ப் புலவர் இல்லை; பேசாத தமிழ் இலக்கியமும் இல்லை.

மனிதகுல நாகரிகத்தின் சிறந்த கூறுபாடுகளனைத்தும் நதிக்கரை நாகரிகத்தின் விளைவே என்று அறிஞர் உலக ஆராய்ச்சி பறை சாற்றுகின்றது. மறுக்க முடியாத அவ்வுண்மையை மனத்தில் வைத்துக்கொண்டு பார்க்கும் போது தமிழர் நாகரிகத்தின் சீர்மையும் புலனுகும். ஒப்புயர்வற்ற பெருமை வாய்ந்தது பழமை சான்ற நம் தமிழ் நாகரிகம் என்றால், அதற்குக் காரணமாய் விளங்கிய ஊற்றுகள் நம் நாட்டில் பாய்ந்து விளையாடும் பல்வேறு நதிகளே என்பதில் ஐயமுமுண்டோ? இவ்வுண்மையைக் கவியரசர் பாரதியார் மிகத் தெளிவாக உணர்ந்திருந்தார் என்பது,

'காவிரி தென்பெண்ணை பாலாறு—தமிழ்
கண்டதோர் வையை பொருநைநதி—என

மேவிய யாறு பலவோடத்—திரு
மேனி செழித்த தமிழ்நாடு.'

என்று சிந்தை குளிர்ந்து அவர் பாடிய நயம்செறிந்த பாடலால் நமக்கு நன்கு விளங்குகிறது.

அல்லும் பகலும் அலைந்து திரிந்து ஆயிரம் காலால் நடந்து வரும் ஆற்றின் அழகையும் அதன் அழகிற்கு ஓர் அழகு செய்யுமாப்போல அவ்வாற்றின் கரையில் பச்சைப்பசேலெனப் பரந்து விரிந்து கிடக்கும் இனிய பொழில்களும் நெடிய வயல்களும் காண்பார் கண்கட்குக் கழிபேருவகை அளிக்கும் தன்மையனவாகும். சாதாரணக் கண்கள் படைத்த நமக்கே நதியும் கரையும் அளிக்கும் காட்சி கண் கொள்ளாக் காட்சி என்றால், கலைக்கண்கள் படைத்த புலவர் பெருமக்கட்கு அவை வழங்கும் பேரின்பப் பெருக்கைப்பற்றிச் சொல்லவும் வேண்டுமோ! இயற்கை அன்னையின் கருணை வெள்ளமாய் விளங்கும் ஆற்றின் அழகையும் அவள் அருட்கரங்கள் போல அமைந்து கிடக்கும் கரைகளின் எழிலையும் பருகிக் களிவெறி கொண்ட கலைஞர் உள்ளத்தில் கற்பனை ஊற்றெடுப்பதும் புலவர் நாவில் செந்தமிழ்ப் பாடல் தவழ்வதும் இயற்கையே அன்றோ?

நாட்டின் நல்வாழ்விற்கு விழியும் இமையும் போல்வனவாய் விளங்கும் நதியையும் கரையையும் பழந்தமிழ் நூல்களாகிய பத்துப் பாட்டும் எட்டுத் தொகையும் அழகொழுகும் சொல்லோவியங்களாய்த் தீட்டிக் காட்டும் திறம் தமிழ்ச் சுவை நுகர விரும்புவார்க்குப் பெருவிருந்தாய் விளங்குகிறது.

தமிழகத்து ஆறுகளுள் எல்லாம் தலைசிறந்த காவிரியாறும் அதன் கரையும் சங்க நூல்களாகிய பத்துப்பாட்டிலும் புறநானூற்றிலும் அழகு மிக்க எழிலோவியமாய்க் காட்சியளிக்கின்றன. வானத்துக் கோள்களெல்லாம் தங்கள் நிலை மாறினும், வற்கடம் தோன்றுதற்கு அறிகுறியாக விண்ணிலே தீக்குறிகள் பல தோன்றினும், வற்றாத வளமுடையாள் காவிரித்தாய். பொய்யாத வானம் பொய்ப்பினும், தான் பொய்யாத தகைமைசால் பொற்கொடி அவள். இவ்வுண்மையை,

'வசையில்புகழ் வயங்குவெண்மீன்
திசைதிரிந்து தெற்கேகினுந்
தற்பாடிய தளியுணவிற்
புட்டேம்பப் புயன்மாறி
வான்பொய்ப்பினுந் தான்பொய்யா
மலைத்தலைய கடற்காவிரி' (பட்டினப்பாலை, 1-6)

என்ற பட்டினப்பாலை பாடிய உருத்திரங்கண்ணனார் வாக்கும்,

'அலங்குகதிர்க் கனலி நால்வயின் தோன்றினும்
இலங்குகதிர் வெள்ளி தென்புலம் படரினும்
அந்தண் காவிரி வந்துகவர் பூட்டத்
தோடுகொள் வேலின் தோற்றம் போல
ஆடுகட் கரும்பின் வெண்பூ நுடங்கும்
நாடெனப் படுவது நினதே.' (புறம். 35 : 6-11)

என்ற வெள்ளைக்குடி நாகனாரின் புறப்பாடற்பகுதியும் வலியுறுத்தும்.

வற்றா வளம் கொழிக்கும் இத்தகைய பொன்னி நதியின் பேரருளால் சோழநாடு சோற்று வளம்

நிறைந்த திருநாடாய் இன்று போல ஈராயிரம் ஆண்டுகட்கு முன்னும் நிகழ்ந்த காட்சியினைப் பொருநராற்றுப்படை சொற்சித்திரமாக்கிக் காட்டுகிறது. 'கோடையின் வெம்மையால் மரங்களும் செடிகளும் கொடிகளும் மயங்கிக் கருகினாலும், வான்முகில் கடல்நீரை முகக்க மறந்தாலும், மழை காணாமையால் மன்பதைக்குப் பெரியதொரு பஞ்சம் விளையினும், காவிரி தன் வளம் சுரத்தலில் ஒருநாளும் தவறாது. அவ்வாறு காவிரி சுரக்கும் வளத்தால் சோழநாட்டில் பயிர் வளம் சிறந்து பொலிகிறது. உழவர்கள் வித்தி விளைத்த பயிரை விளைவேற்றி அறுவடை செய்து நெல் மணியை மலைமலையாய்க் குவிக்கின்றார்கள். அவர்களுடைய மனைகளிலுள்ள நெற்குதிர்களிலெல்லாம் இடமே இல்லாதபடி நெல் மணிகள் நிரம்பிக் கிடக்கின்றன. இவ்வாறு சோழவள நாட்டில் அன்னை காவிரியின் திருவருளால் வேலி ஒன்று ஆயிரம் கலமாக விளைகிறது. காவிரி சூழ் நாட்டின் பெருவளத்தை இவ்வாறு போற்றுகின்றார் சங்ககாலப் பெண்பாற்புலவர்களுள் ஒருவராகிய முடத்தாமக் கண்ணியார்.

'காவிரி' என்ற பெயரே அப்பெயர் கொண்ட ஆற்றின் பெருமையை விளக்கும். சிறந்ததோர் ஆற்றின் பயனை அதன் கரைகளிலும் அங்கு வாழும் மக்களின் வாழ்விலுமன்றோ காணவேண்டும்? வளமான சோலைகளைப் போகும் வழியெல்லாம் தன் இருகரைகளிலும் விரித்துச்செல்லும் வீறு பெற்றதாலன்றோ பொன்னி நதியைக் 'காவிரி' என்று போற்றினர் கற்றோரும் மற்றோரும்? இவ்

வுண்மையை நன்குணர்ந்த புறநானூற்றுப் புலவர், 'மண்மகளின் புன்முறுவலெனை நாளும் திகழும் மலர்களுக்கு வாழ்வளிப்பது காவிரி,' என்னும் கருத்தில், 'பூவிரி புதுநீர்க் காவிரி' என்று போற்றி யுள்ளார்.

இங்ஙனம் நாடு செழிக்கத் துணைபுரியும் பீடுமிக்க காவிரியின் கருணை உள்ளத்திற்குத் தாய் உள்ளத் தையன்றி வேறெதை உவமையாகச் சொல்ல முடியும்! "வெள்ளப் பெருக்கெடுக்கும்போது, 'இயற்கையின் கோரமென்பதும் இதுதானே!' என்று கண்டோர் கண் கலங்கும்படி இரு கரை களிலும் ஓங்கி உயர்ந்த மரங்களை எல்லாம் முறித்து எறிந்துகொண்டு வரும் காவிரியாறு, பிறந்த குழந் தைக்குப் பெற்றதாய் அமுதூட்டிப் பாதுகாப்பது போல, இந்த உலகத்தை நீரூட்டிப் பாதுகாக்கின் றது," என்று பாடுகின்றார் ஒரு சங்கப்புலவர்.

**'புனிறுதீர் குழவிக் கிலிற்றுமுலை போலச்**
**சுரந்த காவிரி மரங்கொன் மலிநீர்**
**மன்பதை புரக்கு நன்னாட்டுப் பொருநன்'** (புறம். 68: 8-10)

உலகையெல்லாம் ஓம்பும் காவிரித் தாயைப் பட்டினப்பாலை பாடிய ஆசிரியர் ஒரு வகையில் குழந்தையாகவும் கண்டு போற்றுகின்றார். காவிரிப் பூம்பட்டினம் பல்வளமும் கொழித்த 'இருபாற் பெயரிய உருகெழு மூதூர்.' அத்திரு நகரிலிருந்து தான் திருமாவளவன் ஆட்சிபுரிந்தான். உலக நாட்டு வணிகர்களுக்கெல்லாம் உவகையூட்டும் தலை வாயி லாய்த் திகழ்ந்தது காவிரிப்பூம்பட்டினம். கீழைக் கடலில் வரும் மேலை நாட்டுக் கப்பல்களை எல்லாம்

கைகாட்டி வாவெனக் கரையும் கலங்கரை விளக்கம் ஓங்கித் திகழ்ந்த அப்பூம்புகார், காவிரி கடலொடு கலக்குமிடத்திலேதான் அமைந்துள்ளது. அங்கு அமைந்த அத்திருநகரின்—காவிரிப்பூம்பட்டினத்தின்—பெருமையை எல்லாம் விரித்துப் பேசும் உருத்திரங்கண்ணனார், கரிகால்வளவன் கரை கட்டிப் போற்றிப் பெருமிதம் கொண்ட காவிரியாறு கடலொடு கலக்கும் காட்சியை என்றும் மங்காத் தமிழ் ஓவியமாக-இலக்கியச் சித்திரமாகப்-பட்டினப் பாலையில் வரைந்து காட்டுகின்றார். பேரலைகள் எழுந்து முழங்கும் கடலிலேபோய்க் காவிரி கலப்பது மாமலைகளிலே சென்று கார்முகில்கள் படிவது போன்று தோன்றுகிறது அவர் கண்கட்கு. குடகு மலையிலே தோன்றிய காவிரி, நடந்து வந்த வழியெல்லாம் தன் கடமையைக் கண்ணும் கருத்துமாய் ஆற்றிவந்திடினும், தன் அன்னையின்பால் கொண்ட காதலில் சற்றும் அயர்வு கொள்ளாதவள்போலக் கடலிலே கலக்கப் பாய்ந்து ஓடுகின்றாள். அத்திருக் காட்சி உருத்திரங்கண்ணனாரின் உணர்வுமிக்க விழிகட்குத் தாயின் மார்பைத் தழுவப் பாய்ந்து செல்லும் குழந்தையை நினைப்பூட்டுகிறது.

'மாமலை யணைந்த கொண்மூப் போலவுந்
தாய்முலை தழுவிய குழவி போலவுந்
தேறுநீர்ப் புணரியோ டியாறுதலை மணக்கும்'

(பட்டினப்பாலை, 95-97)

என்பது அக்கவிஞர் கற்பனை.

சோழநாட்டை வாழ்விக்கக் காவிரி நல்லாள் வாய்த்ததுபோலப் பாண்டிநாட்டின் பெருமையாய்—

புகழாய்—விளங்கும் பெருமை பெற்றவள் வையை என்னும் பொய்யாக் குலக்கொடி. பத்துப்பாட்டுள் ஒன்ருகிய மதுரைக்காஞ்சி வையையின் பெருமையையும் அதன் கரையிலே அமைந்த மூதூரின் ஏற்றத்தையும் முழங்குகிறது. பன்மலர்களையும் தன்மேல் போர்த்துவரும் வையை வழங்கும் காட்சி, காண்பார் கண்களை இன்ப வெள்ளத்தில் ஆழ்த்தும். எண்ணற்ற மலர்களை ஏந்திவரும் வையை ஆறு எழில் மிக்கதொரு மாலை போல விளங்குகின்றதாம். அதன் கரைகளிலே பாணர் இருக்கைகள் பற்பல உண்டாம். தமிழ் வையையின் வரம்பிட்டுக் கூறவொண்ணுப் பெரும்புகழில் நெஞ்சைப் பறி கொடுத்த புலவர்களுள் ஒருவராகிய மாங்குடி மருதனுர், இவ்வுண்மையைத் தமக்கே உரிய தண்டமிழ் நடையில் சித்திரித்துக் காட்டுகின்ருர் :

‘தாதுசூழ் கோங்கின் பூமலர் தாஅய்க்
கோதையி னெழுகும் விரிநீர் நல்வரல்
அவிரறல் வையைத் துறைதுறை தோறும்
பல்வேறு பூத்திரட் டண்டலை சுற்றி
அழுந்துபட் டிருந்த பெரும்பாண் இருக்கையும்’

(மதுரைக்காஞ்சி, 338-342)

அவ்வையையைத் தமிழ் வடிவாகவே கண்டு அதன் அழகையும் அதன் கரைகளில் நிகழும் நிகழ்ச்சிகளையும் மிக விரிவாகப் பேசும் சங்கநூல் பரிபாடலே என்றல் மிகையாகாது. எழுபது பாடல்களைக் கொண்டதாய் விளங்கிய இந்நூலில் இப்பொழுது நாம் காணக்கிடைப்பன இருபத்திரண்டு பாடல்களேயாகும். அவற்றுள்ளும் எட்டுப்

பாடல்கள் வையையின் வருணனையாகவே அமைந்துள்ளன. சங்க காலத் தமிழர் இயற்கையோடு இரண்டறக் கலந்த இன்ப வாழ்வு வாழ்ந்த பெருந்திருவினர். எனவே, அற்றை நாள் புலவர்களின் பாடல்களிலும் இயற்கை வருணனையும் வாழ்க்கை வருணனையும் பிரிக்க முடியாத வகையில் பின்னிக் கிடந்து சிறந்த இன்பம் பயக்கின்றன. சுவை மிக்க இப்புனைந்துரைகளைப் பரிபாடலில் பரக்கக் காணலாம். வையை ஆற்றில் மக்கள் புனல் விளையாட்டயரும் காட்சியையே பெரிதும் போற்றுகிறது பரிபாடல். நகரமாந்தர் அனைவரும் நதிக்கரையில் குழுமி நீர் விளையாடும் நிகழ்ச்சிகளைப் பரிபாடலில் காணுந்தொறும் நம் நினைவெல்லாம் சங்ககாலத் தமிழ் மக்களின் கவலை குறைந்த நாகரிகக் கலை வாழ்விலேயே ஒன்றிவிடுகிறது. அந்நாளில் வாழ்ந்த தமிழ் மக்களின் அகவாழ்வும் புறவாழ்வும் வையை நதியிலும் கரையிலும் அவர்கள் ஆடிய ஆட்டத்திலும் பாடிய பாட்டிலும் தெற்றெனப் புலனாகின்றன. பரிபாடலின் இறுதிப் பாடலாய் அமைந்துள்ள பாட்டு, வையையையும் அதை ஒட்டிய மக்களின் வாழ்க்கையையும் செஞ்சொல் ஓவியமாய்த் திகழச்செய்கிறது. அதை மட்டும் ஈண்டுக் காண்போம்:

பாண்டிய அரசன் போரின்கண் களிறுகளை அணிவகுத்து நிறுத்தினாற்போல வானத்தில் முகில் கூட்டம் திரண்டது. வழுதியின் போர் முரசொலி போல அம்மேகங்கள் இடி முழக்கம் செய்தன. மீனவன் மாற்றார்மீது சொரியும் கணைகளைப்போல

மழைத்துளிகள் சிதறின. மதுரை வேந்தன் கையில் விளங்கிய வேலைப்போல மின்னல் ஒளி உமிழ்ந்தது. மாறனது கருணையைப்போல மேகங்கள் மழை பொழிந்தன. அவனுடைய வீரப்படை யாண்டும் நிறைந்தது போல எங்கும் வெள்ளம் பரந்து வயல்களில் புகுந்தது. வையை ஆற்றிலே வெள்ளம் கரை புரண்டு ஓடியது. அப்போது நீர் விளையாட்டிற்கு ஏற்ற அணிகலன்களுடன் மகளிரும் மைந்தரும் மதுரை மாநகரிலிருந்து புறப்பட்டனர். பத்து வகைத் துவர்களையும் நறும் புகைக்கு உரிய அரும்பொருள்களையும் சந்தனத்தையும் நீர்வீசு கருவிகளையும் மதுவையும் பூந்துகில்களையும் ஏந்திய கையினராய்ப் பலர் அவர்களைப் பின் தொடர்ந்தனர். 'இவர்கள் செய்த தவப்பயன் பெரிது!' எனக் கண்டோர் போற்ற, இளைஞர்கள் தமக்குரிய மகளிருடன் வையைக் கரையில் நெருங்கினார்கள். இக்காட்சியைக் கண்ட சங்கப் புலவர் நெஞ்சம் அடைந்த உவகை, வெள்ளம் போன்றே தமிழ்ப்பாட்டாய்ப் பொங்கியது. 'வையையின் கரையிலே கூடியிருக்கும் மகளிரால் வையை அழகுற்றதோ, அன்றி வையை வெள்ளத்தால் அம் மகளிர் அழகு பெற்றனரோ!' என்று அவர் பாடுகின்றார். மைந்தரையும் மகளிரையும் நதியையும் கரையையும் சேர்க்கின்ற அழகு தேர்தற்கு அரிது என்று தெரிவிக்கின்றார்:

"வாரணி கொம்மை வகையமை மேகலை
ஏரணி யிலங்கெயிற் றின்ன கையவர்
சீரணி வையைக் கணிகொல்லோ! வையைதன்

**நீரணி நீத்த மிவர்க்கணி கொல்!'எனத்**
**தேருநர் தேருங்காற் றேர்தற் கரிதுகாண்**
**தீரமும் வையையும்.'**

(பரிபாடல் 22 : 30-35)

சங்க நூல்களை அடுத்து நம் நெஞ்சை அள்ளும் சீர்மை வாய்ந்த காப்பியம் செஞ்சொற்சிலப்பதி காரமேயாகும். அழகெல்லாம் ஒருருவாய்த் திரண்ட ஒரு பெண்ணைப்போல அலைக் கைவீசி நடந்து செல் லும் காவிரியின் அழகைப் புலவர் பெருமானாகிய இளங்கோ அடிகள் கற்பனை நலம் விளங்கக் காட்டும் திறம் இலக்கியப் பித்தர்கட்குப் பேரின்பம் தருவ தாகும். பொன்னியாற்றிலே வெள்ளம் கரைபுரண்டு வந்துவிட்டது. விரைந்துவரும் வெள்ளத்தைக்கண்டு உழவர் செய்யும் முழக்கமும், மதகுகளை நீர்த்திரள் தாக்குவதால் எழும் பேரோசையும், ஆங்காங்குக் கரைகளிலே உடைப்பு ஏற்பட்டதால் எழும் ஆர வாரமும், புதுநீர் விழாவைக் கொண்டாடுவோரால் விளையும் பேரொலியும் காவிரிக் கரையிலே பெரு முழக்கமாய்க் கேட்கின்றன.

* * * *

இன்னிசை வண்டுகள் ஒலிக்க, அழகு மலர்களை ஆடையாகப் போர்த்துக்கொண்டு, கயல் போன்ற கண்களை விழித்து, ஒல்கி நடந்து வருகின்றாளாம் காவிரி நங்கை! காவிரிக்கரையிலே மயில்கள் தோகை விரித்தாட, குயில்கள் ஆர்வமுற்றுப்பாட, அழகிய மலர்மாலைகள் தன் மார்பிலே அசைந்தாட, நடந்து வருகின்றாளாம் காவிரிப்பெண்!

‘உழவ ரோதை மதகோதை
உடைநீ ரோதை தண்பதங்கொள்
விழவ ரோதை சிறந்தார்ப்ப
நடந்தாய் வாழி காவேரி!
விழவ ரோதை சிறந்தார்ப்ப
நடந்த வெல்லாம் வாய்காவா
மழவ ரோதை வளவன்றன்
வளனே வாழி காவேரி!’

(சிலம்பு. கானல் வரி, 4)

‘மருங்கு வண்டு சிறந்தார்ப்ப மணிப்பூ ஆடை அதுபோர்த்துக்
கருங்க யற்கண் விழித்தொல்கி நடந்தாய் வாழி காவேரி!
கருங்க யற்கண் விழித்தொல்கி நடந்த வெல்லாம் நின்கணவன்
திருந்து செங்கோல் வளையாமை அறிந்தேன் வாழி காவேரி!

‘பூவர் சோலை மயிலாலப் புரிந்து குயில்கள் இசைபாடக்
காமர் மாலை அருகசைய நடந்தாய் வாழி காவேரி!
காமர் மாலை அருகசைய நடந்த வெல்லாம் நின்கணவன்
நாம வேலின் திறங்கண்டே அறிந்தேன் வாழி காவேரி!’

(கானல் வரி, 25; 26)

இப்படியெல்லாம் அழகு மங்கையாய் அன்ன நடையிட்டு நடந்து வரும் காவிரியின் கருணையோ பெரிது! மிகப் பெரிது! இளங்கோ அடிகளின் அருள் நெஞ்சம் அப்பெருங்கருணைத் திறத்தினை எண்ணி எண்ணி உருகியது.

‘வாழி யவன்றன் வளநாடு மகவாய் வளர்க்குந் தாயாகி
ஊழி யுய்க்கும் பேருதவி ஒழியாய் வாழி காவேரி!
ஊழி யுய்க்கும் பேருதவி ஒழியா தொழுகல் உயிரோம்பும்
ஆழி யாள்வான் பகல்வெய்யோன் அருளே வாழி காவேரி!’

(கானல் வரி, 27)

என்று அவர் பாடியுள்ள அழகிய இசைப்பாடல் காவிரித் தாய்க்குச் சிலப்பதிகாரச் செய்யுள் அளித்த சிறந்த வாழ்த்து.

சிலப்பதிகாரத் தலைவனும் தலைவியுமாகிய கோவலனும் கண்ணகியும் ஊழ்வினை உறுத்த மதுரை மாநகர் நோக்கிச் சென்றனர்; வழியிலே வையை யாற்றைக் கண்டனர். அந்நிகழ்ச்சியை வரையப்புகுந்த இளங்கோ அடிகள், வையை யாற்றை அழகிய ஒரு பெண்ணாக வருணித்துள்ள திறம் கலைச்சுவை நுகர்வார்க்குப் பெருவிருந்தாய் அமைந்துள்ளது. வையையின் இரு கரைகளிலு முள்ள புறவாய் எங்கணும் செறிந்து மலர்ந்திருந்த எண்ணற்ற மலர்களே, வையையாம் மங்கை இடையி லணியும் பூந்துகில். அவ்வாறே இரு கரைகளின் அகவாய் எங்கும் மலர்ந்த மலர்களே, அவள் பூணும் மேகலை. சுருங்கச் சொன்னால், ஆற்றின் கரை களே அவள் அல்குல். ஆற்றிடைக்குறையின்கண் எதிரெதிராய் நின்ற மணற்குன்றங்களே, அம் மங்கை நல்லாளின் மார்பகங்கள். கரைகளிலே உதிர்ந்து கிடக்கும் முருக்கமலர்களே, அவள் செவ் வாய். அருவி நீரோடு ஆற்றிலே கலக்கவந்த முல்லை மலர்களே, அவள் பூக்கும் புன்முறுவல். குறுக்கும் நெடுக்கும் ஓடித் திரியும் கருங்கயல் மீன்களே, அவள் நெடிய கண்கள். மலர் நீங்காக் கருமணலே, அவள் மணமலி கூந்தல். இத்தகைய வைகை நல் லாள்—கவிவாணர் புகழ்கொண்ட காரிகை—உலகு புரந்தூட்டும் உயர் பேரொழுக்கத்தையுடைய பொய் யாக் குலமகள் — கோவலனையும் கண்ணகியையும்

கண்ட மாத்திரத்தில் நெஞ்சம் புழுங்கினாள். 'இப் பெருங்குடி மக்களின் வாழ்வு மதுரை மாநகரில் சிதையப் போகின்றதே! என்ன துயரம் உழப் பளோ இம்மங்கல மாமடந்தை!' என்று எண் ணிய போது அவள் இதயம் புழுவாய்த் துடித்தது; கண்ணீர் பெருகியது. ஆனால், தன் ஆற்றொணாத் துயரத்தைக் கோவலனும் கண்ணகியும் அறியுமாறு காட்ட அவள் நெஞ்சம் துணியவில்லை. எனவே,

> 'தையற் குறுவது தானறிந் தனள்போல்
> புண்ணிய நறுமல ராடை போர்த்துக்
> கண்ணிறை நெடுநீர் கரந்தனள் அடக்கிப்
> புனல்யா றன்றிது பூம்புனல் யாறென
> அனநடை மாதரும் ஐயனுந் தொழுது'
>
> (புறஞ்சேரியிறுத்த காதை, 171–175)

போற்ற நடந்து சென்றாளாம் வையை. மதுரைக் காண்டத்தில் இளங்கோ அடிகள் தம் காவியப் பாத்திரங்களின் வாழ்க்கையோடு இயற்கையின் பெருஞ்சத்தியாகிய ஆற்றைத் தம் கற்பனையால் பிணைத்துக் காட்டும் இக்காட்சி, கல் நெஞ்சையும் கரைந்துருகச் செய்யும் தன்மையதாகும்.

சிலப்பதிகாரப் புகார்க் காண்டத்தில் வரும் காவிரியின் அழகையும் மதுரைக் காண்டத்தில் வரும் வையையின் போக்கையும் கண்டோம். இனி வஞ்சிக் காண்டத்தில் வரும் பேரியாற்றின் பெருமையைக் காண்போம்:

கோங்கும் வேங்கையும் கொன்றையும் சுர புன்னையும் சந்தனமும் மஞ்சாடியும் ஆகிய மரங்கள்

உதிர்த்த பூக்களின் பரப்பினுல், 'இது புனல்யாறே, அன்றிப் பூ ஆறே!' என்று கண்டோர் மயங்கும்படி பேரியாறு தன் நீர் கரந்து ஒழுகும். மதுகரத் தோடும் ஞிமிறோடும் வண்டுக் கூட்டங்கள் இசைபாட நெடியோனுகிய திருமாலின் மார்பில் திகழும் ஆரம் போலப் பெரிய மலையினைக் குறுக்கிட்டுச் செல்லும் பேரியாறு காட்சியளிக்கும்.

**'கோங்கம் வேங்கை தூங்கிணர்க் கொன்றை**
**நாகம் திலகம் நறுங்கா ழாரம்**
**உதிர்பூம் பரப்பின் ஒழுகுபுனல் ஒளித்து**
**மதுகரம் ஞிமிறொடு வண்டினம் பாட**
**நெடியோன் மார்பி லாரம் போன்று**
**பெருமலை விலங்கிய பேரியாறு'**

(காட்சிக்காதை, 17-22)

சித்திரச் சிலப்பதிகாரத்தை அடியொற்றி எத்தனையோ பெருங்காவியங்கள் தமிழ் மொழியிலே தோன்றின. அவை அனைத்திலும் தலைசிறந்த புகழ் வாய்ந்தது கல்வி சிறந்த தமிழ் நாடு பெற்றெடுத்த புகழ்க் கம்பர் பாடிய ராமகாதையேயாகும். அழகும் அருளும் ஒருருவாய்த் திரண்டு செல்லும் ஆற்றைச் சமயநெறியாகவும் சான்றோர் கவியாகவும் காணும் கண்படைத்தவர் கவிச்சக்கரவர்த்தியாரான கம்பர். சரயு நதியின் பெருவெள்ளத்தை-அதனுல் நாட்டுக்கு விளைந்த பெரும்பேற்றினைக்—கம்பர் தமிழிலக்கியக் கண்கொண்டு போற்றிப் பாடுகின்றார். ஆற்று வெள்ளம் 'முல்லையைக் குறிஞ்சியாக்கி, மருதத்தை முல்லையாக்கி, புல்லிய நெய்தல் தன்னைப் பொரு வறு மருதமாக்கிச்' செல்கிறதாம். ஒரு நிலத்தை

மற்றொரு நிலமாக்கிச் செல்லும் வெள்ளத்தின் செயல், பழுத்த சமய உணர்வு படைத்த கவியரசருக்கு ஒரு கதியில் பிறந்த உயிர்களை மற்றொரு கதியில் பிறக்குமாறு செய்யும் இருவினைகளின் திறத்தினை நினைவு கொள்ளச் செய்கிறது. எனவே,

'முல்லையைக் குறிஞ்சி யாக்கி மருதத்தை முல்லை யாக்கிப்
புல்லிய நெய்த றன்னைப் பொருவறு மருத மாக்கி
எல்லையில் பொருள்க ளெல்லாம் இடைதடு மாறு நீராற்
செல்லுறு கதியிற் செல்லும் வினையெனச் சென்ற தன்றே.'

(ஆற்றுப்படலம், 17)

எனப் பாடுகிறார் கவிஞர்.

இன்னுமொரு பாட்டில் இமயமலையில் பிறந்து, ஏரி குளம் முதலிய இடங்களிலெல்லாம் பாய்ந்து, இறுதியில் கடலிலே சென்று கலக்கும் ஆற்று வெள்ளத்தைப் 'பரம்பொருள் ஒன்றே ஆயினும், பல சமயத்தவர் சூழ்ச்சிக்கு உட்பட்டு, அப் பரம்பொருள் பலபடியாகச் சொல்லப்படுவதுபோல விளங்குகிறது,' என்று உவமை அணி அழகு தோன்றப் பாடுகின்றார் கம்பர்.

'கல்லிடைப் பிறந்து போந்து கடலிடைக் கலந்த நீத்தம்
எல்லையில் மறைக ளாலு மியம்பரும் பொருளீ தென்னத்
தொல்லையி லொன்றே யாகித் துறைதொறும் பரந்த சூழ்ச்சிப்
பல்பெருஞ் சமயஞ் சொல்லும் பொருளும்போற் பரந்த தன்றே.'

(ஆற்றுப்படலம், 19)

கவியரசர் கம்பருக்குப்பின் தோன்றிய சுவை பொருந்திய தமிழ் நூல்களுள் ஒன்றே திருவிளையாடற்புராணம் ஆகும். பத்திச்சுவை நனி

சொட்டச் சொட்டப் பரஞ்சோதி முனிவர் பாடிய அப்பெருநூல், ஆலவாய்க்கடவுள் அடியவர்க்காக எளிவந்து புரிந்த அறுபத்துநான்கு திருவிளையாடல் களையும் விரித்துரைக்கும் பெற்றி வாய்ந்தது. அந் நூலுள் அறுபத்தொன்ருவது படலமாய் அமைந் துள்ள மண் சுமந்த படலத்தில், வையை ஆற்று வெள்ளம் கரைகளை உடைத்துக்கொண்டு பெருகி வரும் காட்சியையும், அதனல் நகருக்குக் கேடு சூழாத வகையில் அரசனும் மக்களும் ஆற்றும் பணியையும், பரஞ்சோதி முனிவர் மிக அழகாகப் பாடியுள்ளார். நாட்டின் நல்லமைச்சர்கள் நகர மக்களுள் இன்னின்னூர் இவ்வளவு இவ்வளவு கரை அடைக்க வேண்டும் என்று முடிவு செய்து பறை அறைந்த உடனே, செல்வன் முதல் வறியன் வரை அனைவரும் ஒன்று திரண்டு ஆக்க வேலையிலிறங்கிய காட்சியைப் பின்வரும் பாடல்களில் திருவிளையாடற் புராணம் சித்திரித்துக் காட்டுகிறது :

'மண்டொ டுங்கருவி கூடை யாளரும
ரஞ்சு மந்துவரு வார்களும்
விண்டொ டும்படி நிமிர்ந்து வண்டுபடு
விரிப சுந்தழைப லாலமுங்
கொண்ட திர்த்துவரு வாரும் வேறுபல
கோடி கூடிய குழாமுநீர்
மொண்ட ருந்தவரு மேக சாலமென
வருபு னற்கரையின் மொய்த்தனர்.

'கிட்டு வார்பரி நிறுத்து வாரரவு
ருட்டு வாரடிகி டத்துவார்
இட்டு வார்தழைநி ரப்பு வார்விளியெ
ழுப்பு வார்பறையி ரட்டுவார்

வெட்டு வார்மண லெடுத்து வார்செலவெ
ருட்டு வார்கடிது துடுமெனக்
கொட்டு வார்கரை பரப்பு வாருவகை
கூறு வார்குரவை குழறுவார்.
'கட்டு வார்கரை யுடைப்ப நீர்கடுகல்
கண்டு நெஞ்சது கலங்குவார்
மட்டி லாதமுனி வென்னை யன்னையினி
யாறு கென்றெதிர் வணங்குவார்
கொட்டு வார்மண லுடைப்ப டங்கமகிழ்
கொள்ளு வார்குரவை துள்ளுவார்
எட்டு மாதிரமு மெட்ட வாயொலியெ
ழுப்பு வார்பறையி ரட்டுவார்.'

(ஆலவாய்க்காண்டம் : 4, 5, 6.)

நதியும் கரையும் நற்றமிழ்க் கவிஞர்க்குக் காலந் தொறும் காட்டி வந்த காட்சியைத் தமிழிலக்கியம் மிக விரிவாக எடுத்துக் காட்டுகின்றது. மிக விரிந்ததோர் ஆராய்ச்சிக்குரிய அப்பொருளைப்பற்றிய சிற்சில குறிப்புகளையே இதுவரை பார்த்த நாம், இறுதியாக நாம் வாழும் சுதந்தர யுகத்திற்கு வித்திட்ட வீரக் கவிஞராகிய பாரதியாரின் பாட்டில் நதியும் கரையும் எவ்வாறு காட்சி அளிக்கின்றன என்பதைக் காண்பது ஒரு சிறந்த இன்பமன்றோ?

பாட்டுக்கொரு புலவர் பாரதியார்; நாட்டின் விடுதலையை—உரிமை வாழ்வைத்—தம் மூச்சாகக் கொண்டு கவிதை புனைந்த பெருமகனார். அவர் பாடல்களிலே உரிமை முழக்கம் முழங்குவதைப் போன்றே ஒற்றுமை முரசொலியும் வீறு கொண்டு முழங்குவதைக் காணலாம். இந்தியப் பெருநாட்டில்

இனவாரி அரசுகளமைய வேண்டும் என்பதே அவர் அரசியல் இலட்சியம். ஆனல், அந்த இலட்சியத்தின் வாழ்வு இனவாரி அரசுகள் அனைத்தும் இதயம் ஒன்றுபட்டு, 'நாம் அனைவரும் இந்தியக் குடியரசின் பல்வேறு அங்கங்களே,' என்று பரிபூரணமாக உணர்ந்து செயலாற்றுவதிலேதான் அடங்கிக் கிடக்கிறது என்பதையும் தெள்ளத்தெளிவாக உணர்ந்திருந்தார் தீர்க்க தரிசனம் வாய்ந்த அந்தத் தெய்வக் கவிஞர். உரிமையும் ஒற்றுமையும் ஒன்றித் திகழும் சுதந்தர சமதர்ம இந்தியாவே அவர் கண்ட பெருங்கனவு. அக்கனவுக் காட்சிகளுள் ஒன்றை,

'சிந்து நதியின்மிசை நிலவினிலே
சேரநன் னுட்டிளம் பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினிற் பாட்டிசைத்துத்
தோணிக ளோட்டிவிளை யாடிவருவோம்!'

என்ற அழகிய பாடல் நம் அகக் கண்களுக்குக் காட்டுகிறது.

இந்திய ஒற்றுமை குறித்துக் கவிஞர் பாரதியார் கண்ட இக்கவிதைக் கனவிற்கு—கலைக் கனவிற்கு—ஒரு நிகரும் உண்டோ?

தமிழ் இலக்கியமே ஒரு பேரியாறு. அவ்வாற்றின் கரையில் அமர்ந்துகொண்டு 'நதியையும் கரை'யையும் பற்றி நம் முன்னோர் பாடிச்சென்ற பாடல்களையும், அவற்றில் அவர் கூறிச் சென்ற கருத்துக்களையும் வாழ்நாளெல்லாம் ஆராயலாம்; அனுபவிக்கலாம்; அளவிலா இன்பம் எய்தலாம்!

# 8

# அரச கவிஞர்—குலசேகராழ்வார்

புவியாண்ட மன்னர் பலரைக் கவியாண்ட மன்னராகவும் கண்ட பெருமை தமிழிலக்கிய வரலாற்றின் தனிச் சிறப்பாகும். தமிழன்னை அரியணையிலமர்ந்து செங்கோலோச்சிச்செம்மாந்திருந்த சங்க காலத்தில் முப்பத்தொருவருக்கு மேற்பட்ட தமிழரசர் கவியரசராயும் விளங்கிய வாய்மையினைத் தமிழ் வரலாறு எடுத்து இயம்புகிறது. இங்ஙனம் நாடாளும் மன்னரும் ஏடாளும் வேந்தராய்த் திகழ்ந்த பெருமை சான்ற பரம்பரையில் சேரர் குடியும் தமிழ்க் குலமும் வாழ்வு பெறத் தோன்றிய பெருமானே குலசேகராழ்வார். சங்க காலத்திற்குப் பின்பு தமிழிலக்கிய வரலாற்றில் தவழ்ந்து விளையாடிய சமய காலத்தின் பெருமையாய்ப் புகழாய்த் திகழும் பேறு பெற்றவர்களுள் ஒருவரே அரச கவிஞர் குலசேகரர்.

சேர நாட்டில் கோழிக்கூடு என்னும் மாநிலப் பகுதியைப் பண்டு திடவிரதர் என்பார் ஆண்டு வந்தார். எல்லாச் செல்வமும் சேரப்பெற்றிருந்த அச்செந்தமிழ்நாட்டு வேந்தருக்கு மக்கட்பேறாகிய செல்வம் மட்டும் இல்லாத குறை பெருங்குறையாய் இருந்தது. அக்குறை நீங்கத் திடவிரதர் வரமிருந்து பெற்ற செல்வமே குலசேகரர். சில குறிப்புக்களால் திருவஞ்சைக்களமென்ற ஊரிலே குலசேகரர் அவதரித்தார் என்பது தெரியவருகிறது.

மன்னவர் குமரராய் மாநிலத்தில் தோன்றிய குல சேகரர் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ண மும்ாய் எல்லாத் துறைகளிலும் வளர்ச்சி பெற்று வந்தார்;நல்லாசிரியர் துணைகொண்டு நான்கு வேதங் களையும் ஆறு சாஸ்திரங்களையும் நீதி நூல்களையும் போர்க் கலைகளையும் ஐயந்திரிபறக் கற்று வல்லவ ராயினர்; நாளடைவில் திடவிரத மகாராசரால் அரசுரிமை முழுவதையும் ஏற்குமாறு முடி கவிக்கப் பெற்றார்; தம் செங்கோல் சிறப்பால் ராமராஜ்யம் சேர நாட்டில் நடைபெறச் செய்தார். இங்ஙிலேயில் குலசேகரர் இல்லற வாழ்வும் செழித்தோங்கிச் சிறப்புற்றிருந்தது. வீட்டிலும் நாட்டிலும் நல்லறம் ஓம்பிக்கொண்டிருந்த குலசேகரர் உள்ளத்தில் ஒரு சமயம் மாமலர் நாற்றம் போல மறைந்திருந்த ஞான விசாரம் வெளிப்பட்டு மணம் கமழ்வதாயிற்று. ஞானவிசாரத்தின் பயனைக் குலசேகரர் கருணைக் கடலான திருமாலே தம்மை உய்விக்க வல்ல பரம் பொருள் என்பதைத் தெளியலானார்; அது முதல் திருமாலின் அருட்பண்புகளாகிய பெருங்கடலில் மூழ்கி மூழ்கி இன்புறலானார்; திருமாலின் பல்வேறு அவதாரங்களைப்பற்றிய வரலாறுகளையும் மீண்டும் மீண்டும் கேட்பதில் சலியாத ஆர்வம் கொள்ள லானார்; பாற்கடலில் துயின்ற பரமனுறையும் பதிகள் அனைத்தையும் சென்று வணங்கப் பெருங் காதல் கொண்டார். சிறப்பாகக் குலசேகரர் திரு மாலின் அடியார்களை இறைவன் அமிசமென்றே போற்றி வழிபாடாற்றுவதிலும் அவர்கள் திரு வாயால் இராமபிரான் வாழ்க்கைச் சரிதத்தைக்

காது குளிர நெஞ்சுருகக் கேட்பதிலும் தம் காலத்தை எல்லாம் கழித்து வந்தார்.

திருமாலின் அவதாரங்களுள் எல்லாம் குலசேகரர் உள்ளத்தைக் கொள்ளைகொண்ட அவதாரம் ராமாவதாரமே என்பது அவர் வாக்காலும் வரலாற்றாலும் தெள்ளிதின் புலனாகின்றது. கோசலை நாடுடை வள்ளலின் திவ்விய சரிதத்தைக் கேட்கும் காலத்தில் குலசேகரர் தம்மை மறந்து கேட்கும் தகைமை உடையவராய் விளங்கிய சிறப்பினைக் குறித்துச் செவிவழிச் செய்திகளாம் கதைகள் சில சுவை நிறைந்தனவாயுள்ளன. உண்மையான பத்தனின் ஆழ்ந்த பத்தியை அளவிட்டுக் காட்டும் தன்மையனவாய் அவை திகழ்கின்றன.

ஒரு நாள் பாகவதர் ராமாயண காலட்சேபம் செய்துகொண்டு இருந்தாராம். அப்போது ஆரணிய காண்டத்தில் இராவணன் தங்கையான சூர்ப்பணகை மூக்கு அறுப்புண்டு கரதூஷணாதியர்களிடத்தில் போய் முறையிட்டதை அறிந்து அவர்கள் அதி உக்கிரமாய் எண்ணிறந்த சேனைகளைத் திரட்டிக் கொண்டு படை எடுத்து வந்த சமயத்தில் பெருமாள் பிராட்டிக்குக் காவலாய் இருக்கும்படி இளையபெருமாளைப் பன்னசாலையிலே நிறுத்திவிட்டுத் தமக்கு ஒருவரும் துணை இன்றித் தாம் தனியே அவ்வரக்கர் அனைவரோடும் போருக்குச் சென்று நின்றார் என்று பௌராணிகர் சொல்லக் கேட்டார் குலசேகரர். ராமபிரான்பால் தமக்குள்ள ஈடுபாட்டு மிகுதியினால் பல்லாயிரம் ஆண்டுகட்குமுன் நிகழ்ந்த அந்நிகழ்ச்

சியை இன்றுதான் நடப்பதாக நினைத்து, 'இப்படி எம்பெருமான் சங்கடத்தில் சிக்கிய வேளையில் எம்மா லியன்ற உதவியைச் செய்யாது விடுவது அறமன்று!' என்று துணிந்து, தம் படைகளை எல்லாம் போருக் குப் புறப்படும்படி ஆணை பிறப்பித்துத் தாமும் போர்க்கோலம் பூண்டு சீதை கேள்வரைக் காக்க முந்தினாராம் குலசேகரர். அச்சமயத்தில் யாவரும் செய்வதறியாது திகைத்து நின்றனர். பத்தர்களின் மன இயலை நன்குணர்ந்த பாகவதர் உடனே, 'இராமபிரான் தாம் ஒருவராகவே நிர்ப்பயமாகப் பிரபல யுத்தம் செய்து சத்துருக்கள் அத்தனை பேரையும் சயித்துத் தமது ஆசிரமத்திற்கு மீண்டுவர அவரைச் சீதாதேவி களிப்புடன் அணைத்து அவரது இளைப்பைத் தணித்தாள்,' என்ற செய்தியைக் கூறினாராம். அது கேட்ட குலசேகரர் எல்லையில்லா மகிழ்ச்சிகொண்டு தம் போர்ச்செலவை நிறுத்தினாராம்.

பிறிதொரு சமயம் வழக்கமாகக் காலட்சேபம் செய்யும் பாகவதர் தாம் வரமுடியாத நிலையில் தம் மைந்தரைக் கதை சொல்லுமாறு அனுப்பிவைத்தார். பாகவதரின் மைந்தர் குலசேகரரின் இயற்கையை நன்குணராதவர். எனவே, அவர் கதை சொல்லும் காலத்தில் ஒரு சமயம் இராவணன் சீதையை எடுத்துப்போன கொடிய செய்தியை விளக்கமாகக் கூற, அது கேட்ட குலசேகரர் மனங்கொதித்து எழுந்து 'இக்கணமே யான் இலங்கைமீது படை எடுப்பேன்! இராவணனை—அரக்கர் குலத்தைப்—பூண்டோடு அழிப்பேன்; சிறை வைக்கப்பட்ட என்

தாயை மீட்டுக்கொண்டு வருவேன்!' என்று ஆயுதங்களை எல்லாம் எடுத்துக்கொண்டு படைகளை எல்லாம் தம் பின் வருமாறு பணித்து ஆவேசத்துடன் புறப்பட்டாராம். முன்போலப் பாகவதர் சாதுரியத்தால் தடை செய்யப்படாத குலசேகரர், இலங்கையைச் சூழ்ந்திருக்கும் கடலுக்குள்ளும் விரைந்து சென்று கழுத்தளவு தண்ணீரிலும் நிற்க முனைந்து விட்டாராம். அந்நிலையில் இராமபிரான் தம் பத்தரின் மாசற்ற காதலை நினைந்து மனமுருகிச் சீதா பிராட்டியுடன் காட்சியளித்து, 'குலசேகர, சீதா பிராட்டியை யானே மீட்டுவிட்டேன். நீ மேற்செலல் வேண்டா. இப்பெருங்கடலினின்றும்—பிறவிக் கடலினின்றும்—கரையேறுக!' என்று திருவாய் மலர்ந்தருளினாராம்.

இவ்வாறு தசரத குமாரரின் வாழ்க்கைச் சரிதங்களைக் கேட்டு மகிழ்வதிலேயே பொழுதையெல்லாம் போக்கிக்கொண்டிருந்த குலசேகரர்க்குத் திருமால் கோயில் கொண்டுள்ள திருவரங்கம் முதலிய திருப்பதிகட்குச் செல்லவேண்டும் என்ற பேராவல் கிளர்ந்து எழுந்தது. அது கண்ட அமைச்சர்கள் குலசேகரரைத் திருவரங்கத்திற்குச் செல்லவிட்டால் அவர் அண்மையில் மீளுதல் அரிது என்று கருதினர்; எனவே, எவ்வாறேனும் அரசரின் செலவைச் சிறிது காலமேனும் தடுத்துவைத்திருத்தல் நாட்டின் நன்மைக்குத் துணை புரிவதாகும் என்று கருதி, ஓர் உபாயத்தை மேற்கொள்ளலாயினர். 'அறுபதினாயிரம் ஆண்டு விஷ்ணுவை ஆராதனம் செய்த பயனும் ஒருகால் வைணவர்களைப் பூசித்த

பேற்றுக்கு ஈடாகாது' என்ற சாஸ்திர முறை அறிந்தவர் குலசேகரர் ஆதலால், திருவரங்கத்திற்குத் தலயாத்திரை புறப்பட்ட திருவுடைமன்னர் முன்பு எண்ணற்ற வைணவ பத்தர்களை அழைப்பித்து வந்து நிறுத்தினர். அடியார் திரளைக் கண்ட அரசர் பெருமான், தம் செலவை நிறுத்தி, அன்னாரை உபசரிப்பதில் கண்ணும் கருத்துமாய் இருக்கலானார். அமைச்சர்கள் கருதியது கைகூடியது. ஆனால், அமைச்சர்கள் நாளடைவில் தங்கள் பொறாமை உள்ளத்தால் தாங்கள் செய்த செயலையே நினைந்து வருந்தத் தலைப்பட்டனர். தங்களால் அறிமுகப் படுத்தப்பட்ட ஸ்ரீவைஷ்ணவர்கள் அரசர்பால் அதிக உரிமை பாராட்டல் கண்டு அவர்கள் அழுக்காறு கொண்டார்கள். அதன் விளைவாக அடாத செயல் ஒன்றையும் அவர்கள் செய்யத் துணிந்தார்கள். ஒருநாள் கோயில் அர்ச்சகர் திருவுருவாயுள்ள அடியார்க்குத் திருமுழுக்காட்டல் வேண்டித் திரு ஆபரணங்களை எல்லாம் களைந்து ஓரிடத்து வைத்திருந்தனர். அவ்வமயம் அமைச்சருள் திட்டமிட்டவாறு அவ்வாபரணத்திரளுள் ஒன்றைப் பக்குவமாய்க் கவர்ந்து ஒளித்தனர். சிறிது நேரத்தில் ஆபரணமொன்று காணாதது கண்டு கலங்கிய அர்ச்சகர் அரசர்பால் சென்று முறையிட்டார். செய்தி அறிந்த குலசேகரர், 'கள்வனை விரைவில் கண்டு பிடியுங்கள்!' என்று கட்டளையிட்டார். அதுதான் தக்க சமயம் என்று கருதிய அமைச்சர்கள், 'கள்வரை வெளியிலெங்கும் தேடவேண்டா. இங்கு எங்கும் திரியும் வைணவர்களே ஆபரணத்தைக்

களவாடியவர்கள்' என்று பகர்ந்தனர். அதுகேட்டு அரசர் உள்ளம் துடித்தது. 'திருமால் அடியார்கள் ஒருபோதும் இத்தகைய கடுந்தொழிலைக் கனவிலும் நினையார். இதை உங்கட்கு உறுதிப்படுத்த யானே பிரமாணம் காட்டுவேன்!' என்று சொல்லிப் பாம்பை உள்ளிட்டதொரு குடத்தைச் சபை முன்னே தருவித்துத் 'திருமாலடியார் மனம், மெய், மொழி மூன்றிலும் தூயராயின், இப்பாம்பு என்னைத் தீண்டாது அடங்குக!' என்று சபதம் செய்து, அக்குடத்தினுள்ளே கையிட்டனர். அப்பொழுது சத்தியத்திற்குக் கட்டுப்பட்ட சர்ப்பம் சிறிதும் கொடுமை புரியாது ஒடுங்கிக் கிடந்தது. அது கண்ட அமைச்சர் அஞ்சி நடுங்கித் தாம் செய்த தவற்றை மறையாது கூறி அரசர்பால் மன்னிப்பும் வேண்டினர். அருள் நெஞ்சினரான குலசேகரரோ, 'இனி நீவிர் பாகவதர்க்கு எப்போதும் பணிவிடை செய்வதே நுமது குற்றம் தீரும் வகை,' என்று பணித்தருளினர். இவ்வாறு ராமசரித்திரத்திலும் திருமாலடியார்களிடமும் ஆராக்காதல் கொண்டிருந்த குலசேகரரைப் பத்தர் உலகம் 'ஆழ்வார்' என்றும் 'பெருமாள்' என்றும் போற்றியதில் வியப்பில்லை அன்றோ?

குலசேகரர் நாள் செல்லச்செல்ல அரசாளும் பெருவாழ்வில் வெறுப்புக் கொண்டார். அணி அரங்கன் திருக்கோயில் முற்றத்தில் தொண்டரடிப் பொடியாய் வாழ்வதே வாழ்வு என்று கருதலானர்; எனவே, தம் திருமகனை அரியணையில் அமரச்செய்து விட்டு, மன்னு காவிரிசூழ் திருவரங்கத்திற்குப் பயணமானர். அங்கு எழுந்தருளியுள்ள நம்பெருமாளைச்

சேவித்து அவ்வழகிய மணவாளனையே தனக்குரிய காதலனாகக் கருதிய தம் திருமகளை அப்பெருமானுக்கே உரிய பொருளாகக் கொடுத்து மணம் செய்வித்து, இறைபணிகளை விதிமுறை வழுவாது ஆற்றியிருக்கலானார். மற்றும் திருவேங்கடம், திரு அயோத்தி, தில்லைத் திருச்சித்திரகூடம், திருக் கண்ணபுரம், திருமாலிருஞ்சோலை, திருவிற்றுவக் கோடு முதலிய திருப்பதிகட்கும் சென்று ஆங்காங்கு எழுந்தருளியுள்ள பெருமாளைக் கண்மணி குளிரக் கண்டு வணங்கி, அப்பால் நம்மாழ்வார் பிறந்தருளிய திருக்குருகூரை அடுத்துள்ள பிரமதேசத்திற்கும் சென்று திருத்தொண்டு செய்துகொண்டிருந்த நிலையில், தமது அறுபத்து ஏழாம் ஆண்டில் பரமபத மடைந்தார் குலசேகரப்பெருமாள் என்பர் கற்றறிந் தோர்.

குலசேகராழ்வார் வடமொழியிலும் தமிழ் மொழியிலும் கவிபாடும் ஆற்றலில் சிறந்து விளங்கினார் என்பர். வடமொழியில் 'முகுந்த மாலை' என்றதொரு நூலை அவர் இயற்றியதாகக் கூறுவர். இது பற்றிக் கருத்து வேறுபாடும் நிலவுகிறது. ஆயினும், அரசகவிஞராகிய குலசேகரரின் கவித்திறனுக்கும் பத்தி உணர்ச்சிக்கும் கடவுள் அடியார்பால் கொண்டிருந்த மதிப்பிற்கும் சான்று பகர்வனவாய் விளங்குவது அவர் இயற்றிய பெருமாள் திருமொழி என்னும் நூலாகும். குலசேகராழ்வார் செப்பிய இச்செஞ்சொல்மொழி நூற்றைந்தையும் கூறுவார் உள்ளம் பத்தி வெள்ளத்தில் மூழ்குவது திண்ணம். பெருமாள் திருமொழியைப் பத்துப் பிரிவுகளாகப்

பாகுபாடு செய்துள்ளனர். திருவரங்கப்பெருமானைக் காணும் காட்சியில் ஆழ்வார் கொண்ட காதலை அறிவிப்பது முதல் திருமொழியாகிய 'இருளிரியச் சுடர் மணிகள்' என்று தொடங்கும் பதினொரு பாடல்கள். அரங்கன் அடியாரது அடிமைத் திறத்தில் குலசேகரர் கொண்ட ஈடுபாட்டைக் குறிப்பது 'தேட்டருந்திறல்' என்று தொடங்கும் இரண்டாம் திருமொழி. உலகியலை விரும்பாது அரங்கன் அடியே கதியென ஆழ்வார் கருதிய கருத்தை வெளிப்படுத்துவது 'மெய்யில் வாழ்க்கையே' என்று தொடங்கும் மூன்றும் திருமொழி. எம்பெருமானை இமைப்பொழுதும் மறவாது கண்டு களிக்கத் திருவேங்கட மலையில் பிறத்தலை ஆழ்வார் விரும்பிய விருப்பத்தினை வெளிப்படுத்துவது 'ஊனேறு' என்று தொடங்கும் நான்காம் திருமொழி. 'வித்துவக் கோட்டம்மானின்' விழுப்புகழை ஓதுவது 'தரு துயரம் தடாயேய்' என்று தொடங்கும் ஐந்தாம் திருமொழி. ஆய்ச்சியர் ஊடி அமலனை எள்கி உரைத்த அழகினைச் செப்புவது 'ஏர்மலர்ப் பூங்குழல்' என்று தொடங்கும் ஆறும் திருமொழி. கண்ணனது பிள்ளை விளையாட்டுக்களைக் காணப் பெறாத தேவகியின் புலம்பலைக் கூறுவது 'ஆலைநீள் கரும்பு' என்று தொடங்கும் ஏழாம் திருமொழி. சக்கரவர்த்தி திருமகனாகிய ராகவனைக் கௌசலையார் தாலாட்டும் பாசுரம் 'மன்னு புகழ்' என்று தொடங்கும் எட்டாம் திருமொழி. தனயன் கானகம் புகத் தசரதன் புலம்பிய துயரினைத் தெரிவிப்பது 'வன்தாளினிணை' என்று தொடங்கும் ஒன்பதாம்

திருமொழி. ராமாயணக் கதைச் சுருக்கத்தை இரத்தினச் சுருக்கமாய்க் கூறுவது 'அங்கண் நெடுமதில்' என்று தொடங்கும் பத்தாம் திருமொழி. இவ்வாறு 105 பாசுரங்களாய்ப் பத்துத் திருமொழிகளாய் இராமாயண சாரமாய் விளங்கும் பெருமாள் திருமொழியைப் போற்றிப் புகல்வார் நண்ணார் நரகமென்பது திண்ணமன்றோ?

பத்திக்கனியின் தீஞ்சாறாய் விளங்கும் தமிழ் மாலையாகிய பெருமாள் திருமொழியில் உள்ள சிற்சில மலர்களின் அழகையும் மணத்தையும் அவை பிலிற்றும் பத்தித் தேனின் தெய்வச் சுவையை மட்டும் ஈண்டு நுகர்வோம்:

மாவினைவாய் பிளந்துகந்த மாலை வேலை
வண்ணனைஎன் கண்ணனைவன் குன்ற மேந்தி
ஆவினையன் றுயக்கொண்ட ஆய ரேற்றை
அமரர்கள்தந் தலைவனையந் தமிழி னின்பப்
பாவினைஅவ் வடமொழியைப் பற்றற் றூர்கள்
பயிலரங்கத் தரவணையில் பள்ளி கொள்ளும்
கோவினைநா வுறவழுத்தி என்றன் கைகள்
கொய்ம்மலர்தூ யென்றுகொலோ கூப்பும் நாளே?

இது பெருமாள் திருமொழியில் நான்காவதாய் அமைந்த பாடல். இப்பாடலில் குலசேகராழ்வார் தம் கண்கண்ட தெய்வமாகிய கண்ணனை மணிவண்ணனைத் தமிழ்க் கவிதையாய் — வடமொழிச் சுவையாய்ப் போற்றும் திறத்தினை எண்ணி வியந்து மகிழ்ந்து போற்றாதிருத்தல் இயலுமோ?

'ஆனாத செல்வத்து அரம்பையர்கள் தற்சூழ
வானாளும் செல்வமும் மண்ணரசும் யான்வேண்டேன்!

தேனார்பூஞ் சோலைத் திருவேங் கடச்சுனையில்
மீனாய்ப் பிறக்கும் விதியுடையே னாவேனே.'

(பெருமாள் திருமொழி, 4 : 2)

இப்பாட்டால் ஆழ்வார் தாம் அனுபவித்து இன்புற்ற அரசபோகத்தையும் வெறுத்து வேங்கடவன் தண்ணருளையே விரும்பிய பான்மை விளங்கும்.

'ஒண்பவள வேலை யுலவுதண் பாற்கடலுள்
கண்துயிலும் மாயோன் கழலிணைகள் காண்பதற்குப்
பண்பகரும் வண்டினங்கள் பண்பாடும் வேங்கடத்துச்
செண்பகமாய் நிற்கும் திருவுடையே னாவேனே.'

(பெருமாள் திருமொழி, 4 : 4)

இப்பாடல் குலசேகரரின் கவியுள்ளத்திற்கும் மலரினும் மெல்லிய கலையுள்ளத்திற்கும் சிறந்ததொரு சான்று.

'செடியாய வல்வினைகள் தீர்க்கும் திருமாலே!
நெடியானே! வேங்கடவா! நின்கோயி லின்வாசல்
அடியாரும் வானவரும் அரம்பையரும் கிடந்தியங்கும்
படியாய்க் கிடந்துஉன் பவளவாய் காண்பேனே!'

(பெருமாள் திருமொழி, 4 : 9)

இப்பாடலால் குலசேகரரின் பத்தி உள்ளத்தின் எல்லை புலனாகும்.

வேங்கடத்தில் கோயில் கொண்ட பெருமானின் பவளவாயைக் காண அவன் திருக்கோயில் படியாயேனும் கிடக்க ஆழ்வார் கொண்ட அவா அடியவர் உள்ளத்தையெல்லாம் உருக்கியது. அதனாலன்றோ, இன்றுங்கூடத் திருமால் கோயிலிலுள்ள வாயிற்படி 'குலசேகரன் படி' என்று போற்றப்படுகின்றது?

'மீன்நோக்கும் நீள்வயல்சூழ் விற்றுவக்கோட் டம்மா!என்
பால்நோக்கா யாகிலும்உன் பற்றல்லால் பற்றில்லேன்!
தான்நோக்காது எத்துயரம் செய்திடினும் தார்வேந்தன்
கோல்நோக்கி வாழும் குடிபோன் றிருந்தேனே!'

(பெருமாள் திருமொழி, 5 : 3)

இப்பாடலால் அரசகவிஞராகிய குலசேகரர் கரவறியாக் குடிமக்களின் அன்புள்ளத்தின் ஆழத்தை அறிந்திருந்த அறிவு புலனாகும்.

'மன்னுபுகழ்க் கௌசலைதன் மணிவயிறு வாய்த்தவனே!
தென்னிலங்கைக் கோன்முடிகள் சிந்துவித்தாய்! செம்பொன்சேர்
கன்னிநன்மா மதிள்புடைசூழ் கணபுரத்தென் கருமணியே!
என்னுடைய இன்னமுதே! இராகவனே! தாலேலோ.'

(பெருமாள் திருமொழி, 8 : 1)

அருமை சான்ற இக்கவிதையால் ஆழ்வாரின் கவியுள்ளம்—குழந்தைகளைப் போற்றும் தெய்விகத் திருவுள்ளம்—தெள்ளிதிற்புலனாகும்.

பெருமாள் திருமொழியில் ஈடுபட்ட பெரியார் பலர். அவர்களுள் தலை சிறந்த ஒருவர் அரச கவிஞராகிய குலசேகரரின் திருமொழிகளை ஓதி யோதி உள்ளம் குளிர்ந்து காதலாகிப் பாடிய கவிதை ஒன்று குலசேகரரைப்பற்றிய நம் சிந்தனைகளின் மணிமுடியாய்த் திகழத்தக்க மாண்பு மிக்கதாகும்.

'இன்னமுத மூட்டுகேன் இங்கேவா பைங்கிளியே!
தென்னரங்கம் பாடவல்ல சீர்ப்பெருமான்—பொன்னஞ்
சிலைசேர் நுதலியர்வேள் சேரலர்கோன் எங்கள்
குலசே கரனென்றே கூறு.'

இதுவே பத்தரைப் போற்றிய பத்தரின் பாடல்.

# 9

## உரைக்கோவை :

# பொதுமை கண்ட தமிழ்

## 13—1—1957

### அறிமுகம் :

**தி. மு. நாராயணசாமி பிள்ளை** எம். ஏ., பி. எல்., **அவர்கள்**
(துணை வேந்தர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம், அண்ணாமலை நகர்)

*இன்று ஒரு நன்னாள்; இன்பநாள். நாம் இன்றைக்கு, நம் உள்ளத்திற்கு உகந்த எண்ணங்களால் மலர்ந்த மகிழ்ச்சியோடு நாளை வரும் பொங்கற் புதுநாளை வரவேற்போம்.*

* * *

*'பொதுமை கண்ட தமிழ்' என்ற தலைப்பில் நல்லறிஞர் அறுவர், திருக்குறள் முதலாகத் தேம்பாவணி ஈறாக ஆறு நூல்களின் கருத்தை எடுத்துக் கூறுவார்கள்.*

* * *

*தலை சிறந்த சிலப்பதிகாரக் காப்பியத்தைத் தமிழில் செய்தவர் சேரர் குலச் செம்மல் இளங்கோவடிகள். அக்காப்பியத்தில் பல பொதுமை உண்மைகளும், நீதிகளும் மிளிர்கின்றன. அவற்றுள் ஒரு சிலவற்றை ஞாபகப்படுத்தலாம். 'அரசியல் நீதி குன்றின் அழிவு உண்டாகும்,' என்பது ஒன்றாகும். வளையாத நெடுஞ்செழியன் செங்கோல் கோவலனுக்குச் செய்த தீங்கால் வளைந்தது. அத்*

தீங்கால் அந்நகரமும் அழிந்தது. இது போன்ற உண்மைக் கருத்துக்களை அடிகள் தம் காப்பியத்தில் அழகாகக் கூறியுள்ளார்கள். பொதுவாக அரசியல் திறத்தினைத் தமிழில் தீட்டிய பெருமை இளங்கோ அடிகளுக்கே உரியது. அக்காப்பியத்தில் காணும் பொதுமை கண்ட தமிழை நண்பர் திரு. சஞ்சீவி அவர்கள் ஆராய்ச்சித் திறனும், தமிழ் அழகும் நிறைய எடுத்துக் காட்டுவார்கள்.

* * *

திரு. சஞ்சீவி அவர்கள் எனது அரிய நண்பரும் திருச்சிராப்பள்ளிச் சூசையப்பர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியருமாயிருந்த திரு. நடேச முதலியார் அவர்களுடைய புதல்வர் என்பதைக் கூற மகிழ்ச்சியடைகிறேன்! திரு. சஞ்சீவி அவர்களுடைய ஆராய்ச்சித் திறனையும் அரிய பேச்சினையும் இவர்களுடைய தந்தையார் கேட்டு எப்படி மகிழ்வாரோ அப்படியே நானும் நீங்களும் கேட்டு மகிழ்வோம். எம். ஏ. பட்டம் பெற்றவர்; பேச்சிலும் எழுத்திலும் பல பரிசுகள் பெற்றவர்; பல நூல்கள் எழுதித் தமிழ் அன்னையைச் சிறப்பித்தவர். இவர் இப்போது காஞ்சிக் கல்லூரியில் பேராசிரியராய் விளங்குகின்றார். எதிர் காலத்தில் இவர் இன்னும் நெடும்புகழுக்குரியவர் ஆவார். இவர் தம் ஆய்வுத் திறன் அமைந்த சிலம்புச் செல்வத்திலிருந்து காட்டும் அரிய மணிகளாம் பொதுமை கண்ட தமிழின் பொன்னான பேச்சை இப்போது கேட்கப் போகிறோம்.

* * *

# பொதுமை கண்ட தமிழ்

## சிலப்பதிகாரம்

**தலைவர் அவர்களே ! தமிழ்ப் பெருமக்களே !**

*இன்று போகி; நாளை பொங்கல். போகித் தீயிலே பொய்மைக் குப்பையெலாம்—சிறுமைச் செத்தையெலாம் பொசுங்க வேண்டும்—புறத்தில் மட்டுமல்ல; அகத்திலும். பொங்கல் திருநாளில் பொதுமைப் பொங்கல்—புதுமைப் பொங்கல்—பொங்க வேண்டும். தமிழ்ப் பொங்கலோ பொங்க லென்று தமிழர் வாயெல்லாம் முழங்க வேண்டும்—அகத்தில் மட்டுமல்ல—புறத்திலும். இத்தகைய எண்ணமும் எழுச்சியும் நம் இதயத்தில் பொங்க வழிகாட்டும் தலைசிறந்த தமிழ்க்காவியம் நெஞ்சையள்ளும் செஞ்சொற்சிலப்பதிகாரமே.*

*பல்வேறு தமிழ்க் காப்பியங்களிலும் பொதுமைக் கருத்துக்கள் அவற்றை அணி செய்யும் ஆபரணங்களாய் மட்டுமே விளங்கும். ஆனல், சிலப்பதிகாரத்திலோ, சமரசக் கொள்கை அப்பேரிலக்கியத்திற்கு அழகளிக்கும் பொருளாக மட்டுமன்றி—உயிரளிக்கும் ஊற்ருகவும் அமைந்துள்ளது.*

*ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முன் நம் அருமைத் தமிழகத்தில் சமய நெறிகள் தழைத்து இருந்தன. ஆனல், சமய வெறி சற்றும் தலைகாட்டவில்லை. இவ்வுண்மையைத் தமிழ்நாட்டின் ஒப்புயர்வற்ற வரலாற்றுக் காப்பியமாகிய சிலப்பதிகாரம் பல்லாற்ருனும் சுட்டிக் காட்டுகிறது. தமிழர் விழாக்*

களுளெல்லாம் தொன்மை சான்றது இந்திர விழா. சிலப்பதிகாரக் காலத்தில் அதுவே தமிழினத்தின் தேசியத் திருவிழாவாய்த் திகழ்ந்தது. காவிரிப்பூம் பட்டினத்தில் 28 நாட்கள் கலையும் சமயமும் கை கோத்துக் களிநடம் புரிய நடைபெற்ற அப்பெரு விழாக் காட்சிகளை எல்லாம் பெருமிதத்தோடு பாடுகின்றார் இளங்கோ அடிகள். அப்போது பூம்புகாரில் 'பிறவா யாக்கைப் பெரியோனு'கிய சிவன் கோவிலும், 'வால்வளை மேனி வலியோனு'கிய பலராமன் கோயிலும், 'நீலமேனி நெடியோனு'கிய திருமால் கோயிலும் 'மாலை வெண்குடை மன்னவனு'கிய இந்திரன் கோயிலும் மாண்புற்று விளங்கின. விண்ணவர்கோன் விழாவின்போது 'வேறு வேறு கடவுளர்க்கும் சாறு சிறந்தது ஒருபால்' என்று பல்வகைத் தெய்வங்கட்கும் நல்விழாக்கள் மல்கி நின்ற செய்தியைக் குறிப்பிடும் இளங்கோவடிகள் வாக்கில் அவர் இதயத்தின் எக்களிப்பும் புலனுகின்றதன்றோ?

ஒரு சமுதாயத்தின் சிறப்பெல்லாம் அச்சமுதாயத்தை உருவாக்கும் மக்களையே பொறுத்தது. அவ்வகையில் பழந்தமிழ் நாட்டுக் கோவேந்தர் முதலாகக் குறவர் குடிமக்கள் ஈருக எல்லோரும் சமரச நெறியில் வாழ்வைச் செலுத்துவதிலேயே வேட்கை கொண்டிருந்தனர். சிலப்பதிகாரக் காவியத்துள் வரும் ஆய்ச்சியர் குரவையும், வேட்டுவ வரியும், குன்றக்குரவையும் முத்தமிழ்ச் சிறப்பும் ஒருங்கே பொருந்தியவை. ஆய்ச்சியர் குரவையில் வைணவர் நெஞ்சையெல்லாம் உருக்கும் கண்ணன்—மணிவண்

ணன் பாடல்களைக் கேட்கலாம். வேட்டுவ வரியிலே 'இறைவன் இல்லை' என்பாரும் வியக்கப் பாலை வனத்து மக்கள் நெஞ்சிலும் கடவுள் பத்தி ஊற்றெடுத்துக் கவிதையாய் உருக்கொண்டுகொற்றவை வழிபாடாய் மலர்வதைக் காணலாம். குன்றக் குரவையிலே முருகன் அடியாரெல்லாம் மனங்கரைய அறுமுகவேள் திருப்புகழ் இசையைக் கேட்கலாம். ஆயினும், பிற்காலத்தில் சமயவெறியே நெறியாகக் கொண்டு தோன்றிய சில நூல்களில் இருப்பது போன்று ஓர் இடத்திலாவது பிற தெய்வ சமய நிந்தனையைக் காண இயலாது. ஆய்ச்சியர்–வேடுவர்–குறவர் நிலை இதுவாக, சிலப்பதிகாரத்தில் சமரச நெறிக்குச் சான்றாய் விளங்கும் பாத்திரங்கள் பல்லோருள்ளும் இருவரை மட்டும் இங்கே நினைவு கூரலாம். ஒருவர் முற்றத் துறந்த கவுந்தி அடிகள். இன்னொருவன் முதுபெருவேந்தன் சேரன் செங்குட்டுவன். கவுந்தி அடிகள் சமண சமயத்தில் அசைக்க முடியாத பற்றுக் கொண்டவர்.

'மலர்மிசை நடந்தான் மலரடி அல்லதுஎன்
தலைமிசை உச்சி தான்அணிப் பொறாஅது.'

(நாடுகாண் காதை)

என்று கூறும் சமண சமயப்பற்று நிரம்பியவர் கவுந்தியடிகள். அத்தகையோரைத் 'திருவமர் மார்பன் கிடந்த வண்ணமும், செங்கண் நெடியோன் நின்ற வண்ணமும் என் கண் காட்டென்று என் உள்ளம் கவற்ற, குடமலை நாட்டினின்றும் கோயில்கள் சிறந்த தமிழகம் போந்தேன்' என்று தன்னைப் பற்றிக் கூறிக்கொள்வதில் பெருமை கொண்ட

வைணவ பத்தன் ஒருவன் சந்திக்கின்றான். மதுரை நகருக்கு வழி அறிய விரும்பிய கவுந்தி அடிகட்கு அவன் கூறிய கருத்துக்கள் சில ஏற்புடையனவாய் இல்லை. கருத்து வேறுபாடு கொண்ட அந்நிலையிலும் சமணத் துறவியாராகிய கவுந்தியடிகள் சிறிதும் சமயக்காழ்ப்பு இன்றிக் கூறிய வாசகம் அவரது பரந்த பொதுமை உள்ளத்தைக் காட்டுகின்றது.

'நலம்புரி கொள்கை நான்மறை யாளா !

*　　*　　*

வாய்மையின் வழாது மன்னுயி ரோம்புநர்க்
கியாவது முண்டோ எய்தா அரும்பொருள் ?
காமுறு தெய்வங் கண்டடி பணிய
நீபோ; யாங்களும் நீள்நெறிப் படர்குதும்!'

(காடுகாண்காதை)

இதுவே அருள் நெஞ்சு படைத்த அவ்வன்னையார் திருவாக்கு.

செந்தமிழ் நாட்டு வேந்தனாகிய சேரன் செங்குட்டுவனோ, சிவனருளாலேயே தோன்றியவன் என்று போற்றப்படுபவன். அவன் 'காவா நாவின் கனகவிசயர்' ஆணவத்தை அழித்து அவர் தலையில் கற்புத் தெய்வமாகிய கண்ணகிக்குச் சிலை யேற்றிவரத் திட்டமிட்டு, போர்க்கோலம் பூண்டான். அப்போது ஆடகமாடத்தில் அறிதுயில் கொண்ட திருமாலின் வழிபாட்டுப் பொருளைச் சிலர் கொண்டு வந்தனர். சிவபெருமானுக்கன்றி வேறெவர்க்கும் சிரம் தாழ்த்தாத சிந்தை படைத்த செங்குட்டுவன், அப்பொருளை விருப்போடு வாங்கித் தன் அழகிய

திருக்கரத்தில் உவகையோடு அணிந்துகொண்டா னும். இப்பொருவரு காட்சியைச் சிலப்பதிகார ஆசிரியர் சொற்சித்திரமாக்கிக் காட்டுகின்ருர்.

> 'தெண்ணீர் கரந்த செஞ்சடைக் கடவுள்
> வண்ணச் சேவடி மணிமுடி வைத்தலின்
> ஆங்கது வாங்கி அணிமணிப் புயத்துத்
> தாங்கினன்' ...............

(கால்கோட்காதை)

என்று அச்சேரன் தம்பியாராகிய சிலப்பதிகார ஆசிரியர் நயனெடு பயனும் நல்கும் வகையில் குறிப் பிடும் திறம் அழகுடையதன்ருே?

வள்ளுவர்போல் இளங்கோ அடிகள் சைவரா யினும், சமணராயினும், தம் நெறி இதுவென அறி ஞரும் உய்த்து உணர்தற்கு அரிதாகும் வகையில் தம் காவியக் கோவிலைப் படைத்துள்ளார். வைணவ சமயத்தையும் பௌத்த மதத்தையும் பிற சமயங்களையும் பற்றிப் பாத்திரங்கள் வாயிலாகப் பேசும் போதுமட்டுமன்றிக் கவிகூற்ருகக் கூறு மிடங்களிலும் மிகவும் பத்தியோடு அவர் குறிப்பிடும் பான்மை வியந்து போற்றற்குரியது.

அரசியல் துறையிலும் இலக்கியத் துறையிலும் ஆன்மிகத் துறையிலும் தமிழ் மக்கள் ஒற்றுமை யையே உயிர்நாடியாகக்கொண்டு உய்ய வேண்டும் என்பது இளங்கோ அடிகள் கண்ட பெருங்கனவு. பண்சுமந்த பல்வகைப் பாடல்களும் தமிழன்னையின் திருவடியில் உதிர்ந்த மலர்களாய்க் கிடக்கும் நிலை மாறி, அவை காவிய மாலையாய்த் தொடுக்கப்படல்

வேண்டும் என்று ஆசை கொண்டார் இளங்கோ. அதற்குத் தாமே வித்திட்டார்; வெற்றியும் கண்டார். அரசியல் துறையில் முடியாட்சியால் மூன்ருகப் பிளவுபட்டுக் கிடந்த தமிழகத்தைக் கண்ணகியின் காற்சிலம்பால் ஒன்ருக்கி, அவ்வொற்றுமை என்றும் வாழ ஆசி கூறினர். அவ்வாசியின் வாசியை இன்று தமிழ் நாடு உணர்ந்து போற்றி இன்பப் பொங்கல் வைக்க முந்துகின்றது.

ஆன்மிகத் துறையிலோ தமிழகம் மட்டுமன்றி, வையகமே ஒன்றுபட வேண்டுமென்று விரும்பிய இளங்கோ அடிகள் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பழந்தமிழ் நெறிவழி, பாருலகம் அமையும் நாள் எந்நாளோ என்று ஏங்கினர். அந்நாள் தோன்ற வழி ஒன்றே என்பதைத் தமிழ்த்தாயின் திருவடிகளில் தலைதாழ்த்தி, குணவாயிற்கோட்டத்துத் தவம் கிடந்த அப்பெருந்தகை ஊன்றி உணர்ந்து தெளிந்தார். 'சடங்குகளே சமயம்' என்ற பொய்ம்மை நிலை மாறி 'ஒழுக்க வாழ்வே சமயம்' என்ற உயர்நிலை வந்தால், மடமைகள் மறையும்; மெய்யறிவு பிறக்கும். இவ்வுண்மைக்கு ஒருவிளக்கம் அளிப்பது போன்றே அவர் கண்ணகிக் கடவுளை நமக்குக் காட்டுகின்ருர். வீரஞ்சான்ற ஒழுக்கத்தால் இமயத்தினும் மேலாக உயர்ந்த உத்தமி கண்ணகி. அவளிடமிருந்த ஒரு பேராற்றல் ஒழுக்கந்தான். அதன்பயனே முத்தமிழ் வேந்தர் முதலாகக் குறவர் —வேடர் ஈருக, கனகவிசயர் முதலாக இலங்கைக் கயவாகு ஈருக, அத்தனை பேரும் 'அன்னையே, நீயே எங்கள் தெய்வம்' என்று சொற்கோயிலிலும் கற்

கோயிலிலும் மனக்கோயிலிலும் பத்தினிக் கடவுளை வைத்து வழிபட்டனர்.

சமயப் பொதுமை உணர்வு அறிவுசான்ற பெரு மக்களிடம் ஏற்படுவதே அரிது. ஆனால், இளங்கோ அடிகட்கு அப்பொதுமை உணர்வில் இருந்த ஆர்வமும் 'வித்தகம் பேசி' வாளை வீசுக்கும் வழியறியாத—கள்ளம் கபடம் அற்ற—மக்கள்மீது கொண்ட பற்றும் சேர்ந்து சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள மக்களைக்கொண்டே கண்ணகித் தெய்வத்தைக் காசினி முழுவதற்கும் உரிய பொதுமைத் தெய்வமாக அறிமுகம் செய்து வைக்கத் தூண்டுகின்றது.

'எம்மதமும் சம்மதம்' எனக்கொண்ட இளங்கோ அடிகள் பொதுமை நெறியிலே கொண்டிருந்த தணியா வேட்கைக்கு அவர் பாடிய சிலப்பதிகாரக் காவியத்தின் முதலும் முடிவுமே சான்றுகள். பகலவனையும் பால் மதியத்தையும் மாமழையையுமே முன்னர் வாழ்த்திப் பின்னர்ச் சோழநாட்டின் தலைநகரை வாழ்த்திப் பின் காவியத்தைத் தொடங்குகின்றார் இளங்கோ அடிகள். ஞாயிறு, திங்கள், மாமழை யாவும் இவ்வுலகின் பொதுமைச் செல்வங்களன்றோ? அவ்வாறே காவியத்தை முடிக்கும் பொழுதும் தமிழகத்தை மட்டும் பார்த்துப் பேசாது தாரணி முழுவதையுமே பார்த்துப் பேசுகின்றார்; ஒரு சமயநெறி நின்று உரையாது உலக சமயங்களெல்லாம் தலைவணங்கி ஏற்றுக்கொள்ளத் தகுந்த பண்பாட்டு நெறிகளையே பறை சாற்றுகின்றார்.

'தெரிவுறக் கேட்ட திருத்தகு நல்லீர் !
பரிவும் இடுக்கணும் பாங்குற நீங்குமின்;
தெய்வந் தெளிமின்; தெளிந்தோர்ப் பேணுமின்;
பொய்யுரை அஞ்சுமின்; புறஞ்சொற் போற்றுமின்;
ஊனூண் துறமின்; உயிர்க்கொலை நீங்குமின்;
தானஞ் செய்ம்மின்; தவம்பல தாங்குமின்;
செய்ந்நன்றி கொல்லன்மின்; தீநட் பிகழ்மின்;
பொய்க்கரி போகன்மின்; பொருண்மொழி நீங்கன்மின்;
அறவோ ரவைக்களம் அகலா தணுகுமின்;
பிறவோ ரவைக்களம் பிழைத்துப் பெயர்மின்;
பிறர்மனை அஞ்சுமின்; பிழையுயிர் ஓம்புமின்;
அறமனை காமின்; அல்லவை கடிமின்;
கள்ளும் களவுங் காமமும் பொய்யும்
வெள்ளைக் கோட்டியும் விரகினில் ஒழிமின்;
இளமையும் செல்வமும் யாக்கையும் நிலையா;
உளநாள் வரையாது; ஒல்லுவ தொழியாது;
செல்லுந் தேஎத்துக் குறுதுணை தேடுமின்
மல்லன்மா ஞாலத்து வாழ்வீர் !'

இதுவே இளங்கோ அடிகளின் இதயகீதம்; பொதுமை அறத்தின் புலமை ஒளி; சமயந்தோறும் நின்ற தையலாம் தமிழ்த்தாய் மன்பதைக்கு வழங்கும் தனிப்பெருஞ்செய்தி. வாழ்க பொதுமை கண்ட தமிழ்! வெல்க தமிழ் கண்ட பொதுமை!

## வாழ்த்து :

**[தி. மூ. நாராயணசாமிப் பிள்ளை** எம். ஏ., பி. எல்., **அவர்கள்]**

*வயதில் இளமையினர்; ஆனால், அறிவினில் பெருமையுடையவர் நமது சஞ்சீவி அவர்கள். முத் தமிழ்க் காப்பியமாகிய சிலப்பதிகாரத்தில் சமண முனிவராகிய இளங்கோவடிகளைச் சமரச நெறி வித்தகராக அவர்காட்டியது மிகநன்றாய் இருந்தது. அவருடைய பேச்சில் சிலப்பதிகாரச் செம்பொரு ளாக இறுதியில் காட்டிய பொது நீதிகள் அனைவர் உள்ளத்தினையும் கவர்ந்திருக்கிறது.*

> ' தெரிவுறக் கேட்ட திருத்தகு நல்லீர்
> மல்லல் மாஞாலத்து வாழ்வீர் !'

*என்று உலகத்தாரை விளித்து,*

> ' தெய்வந் தெளிமின் ; தெளிந்தோர்ப் பேணுமின் ;
> பொய்யுரை அஞ்சுமின், புறஞ்சொல் போற்றுமின் ;
> கள்ளும் களவும் காமமும் பொய்யும்
> வெள்ளைக் கோட்டியும் விரகினில் ஒழிமின் ;
> செல்லும் தேஎத்துக்கு உறுதுணை தேடுமின் '

*என்று, கூறியது மிகக் கம்பீரமாயும், உணர்ச்சி மிக்கதாயும் பசுமரத்தில் ஆணி அறைந்தாற்போல உயர்ந்த நீதியை மனத்தில் பதிய வைத்தது. சஞ்சீவி அவர்களுக்கு நன்றி.*

முத்தமிழ் அச்சகம், காஞ்சிபுரம்.